# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை:9 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 21 சனிக்கிழமை (04-03-2000) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:40


# சமாதான முயற்சிகளை எதிர்க்க பௌத்த மதபீடம் திரள்கின்றது!

## அஸ்கிரிய, மல்வத்தை இரண்டின் மகாநாயக்கர்களும் போர்க்கொடி

கொழும்பு, மார்ச் 4

**நோர்வே உதவியுடன் விடுதலைப் புலிகளோடு நேரடிப் பேச்சு நடத்தவும் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணவும் இலங்கை அரசு எடுத்து வரும் முயற்சிகளை எதிர்ப்பதற்காக பௌத்த மதபீடத் தலைவர்கள் தமக்குள் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான முன்முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று கொழும்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**இது விடயத்தில் பல்வேறு பௌத்த மதபீடங்களையும் சேர்ந்தோரை ஐக்கியப்படுத்தும் முயற்சிக்கு அஸ்கிரிய மற்றும் மல்வத்தைப் பீடங்களின் மகாநாயக்கர்கள் முழு ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் அறியவருகின்றது.**

இவ்விவகாரம் குறித்து மேற்படி இரு மகாநாயக்கர்கள் உட்பட பல பௌத்த மதத்தலைவர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை கண்டியில் கூடி ஆராயவுள்ளனர்.

அந்தக் கூட்டத்தின் பின்னர் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கேதீஸ்வரத்திலிருந்து ராணுவம் வாபஸாகும்!

### ஈ.பி.டி.பிக்கு ஜனாதிபதியின் செயலர் தகவல்

கொழும்பு,மார்ச்4

திருக்கேதீஸ்வரத்திலிருந்து இராணுவம் உடனடியாக வாபஸாகும் என்று ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி தங்களுக்கு உறுதியளித்துள்ளதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் செயலாளர் இந்தத் தகவலை தமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நேற்று மாலை தெரிவித்துள்ளதாகவும் -

திருக்கேதீஸ்வரம் ஆலயச் சுற்றாடற்பகுதியில் இருந்து ஒருவார

(10ஆம் பக்கம் பார்க்க)

## படை வாபஸ் குறித்து முடிவு எதும் இன்னமும் எடுக்கப்படவில்லை!

### உயர் இராணுவ அதிகாரி கூறுகின்றார்

கொழும்பு,மார்ச்4

திருக்கேதீஸ்வரத்திலிருந்து படையினரை விலக்குவது பற்றிய முடிவு ஏதும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று படை உயர் அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

திருக்கேதீஸ்வரம் குறித்து ஜனாதிபதியின் செயலாளர் இராணுவ உயர்பீடத்துடன் தொடர்பு கொண்டு பேசியதை அவர் உறுதிப்படுத்தினார்.

"மகாசிவராத்திரியை ஒட்டி அங்கு பக்தர்கள் சென்று பூசை வழிபாடு செய்வதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுக்க உடனடியாக இணக்கம் காணப்பட்டது. இதற்காக மண்டபப் பகுதியிலிருந்த படையினர் விலத்தி நிற்பர். எனினும் ஆலயம் மற்றும் சுற்றாடலிலிருந்து விலகுவது குறித்து தீர்க்கமான முடிவே

(10ஆம் பக்கம் பார்க்க)

மட்டு. - பொலநறுவை

## படையினர் வாகன அணி செல்வது திடீர் நிறுத்தம்

### புலிகள் தாக்கப்போவதாகத் தகவல்

மட்டக்களப்பு,மார்ச்4

விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தவுள்ளனர் எனக் கிடைத்த உளவுத் தகவலை அடுத்து நேற்று நடைபெறவிருந்த மட்டக்களப்பு - பொலநறுவை இராணுவ வாகனத் தொடரணி சேவை இறுதி நேரத்தில் இடைநிறுத்தப்பட்டதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

இராணுவத் தொடரணி சேவையின்போது மட்டக்களப்பு - பொலநறுவை வீதியில் உள்ள மியாங்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## பல்வேறு சம்பவங்களில் ஏழு புலிகள் உயிரிழப்பு

வவுனியா,மார்ச்4

பல்வேறு இடங்களில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் தவறுதலான வெடிவிபத்துகளில் தமது தரப்பில் 7பேர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 29ஆம் திகதி இயக்கச்சிப்பகுதியில் இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலின் போது பிரதீபா(சச்சிதானந்தம் சகிர்கலா - கிளிநொச்சி),சிவகாமினி(வீரசிங்கம் பாமினி-யாழ்ப்பாணம்)ஆகியோரும் -

அதேதினம் தம்பலகாமம் பகுதியில் இடம்பெற்ற மோதலின் போது லெப்டினன்ட் அறிவுமணி (புஷ்பமூர்த்தி புஷ்பகாந்த் - திருகோணமலை)என்பவரும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

மாணவன் மீது வல்லுறவு:

## இராணுவக் கோப்ரல் நீதிமன்றில் நேற்று ஆஜர்

யாழ்ப்பாணம்,மார்ச்4

கோப்பாய் பகுதியில் கடந்த 27ஆம் திகதி சுற்றிவளைப்புத் தேடுதல் நடந்தபோது பாடசாலை மாணவன் ஒருவன் பலவந்தமாக தன்னினச்சேர்க்கைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக இராணுவ கோப்ரல் ஒருவர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

கோப்ரல் சிசில் வசந்த, என்ற படைச்சிப்பாயை நீதிமன்றத்தில் ஆஜர் செய்த இராணுவப் பொலீ

(10ஆம் பக்கம் பார்க்க)

### கடற்படை அதிகாரிகளுக்கு பதவி நீடிப்பு

கொழும்பு,மார்ச்4

இரு உயர் கடற்படை அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீடித்து ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடற்படைத் தளபதிக்கு அடுத்த நிலையில் இருக்கும் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி ரியர் அட்மிரல் தயா சந்தகிரி, கடற்படையின் கிழக்குத் தளபதி ரியர் அட்மிரல் ரெறன்ஸ் சுந்தரம் ஆகியோரின் பதவிக்காலமே காலவரையறை குறிப்பிடாது நீடிக்கப்பட்டுள்ளது. (உ)

### விமானப் பயணிகள் மருதானைக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்4

பலாலியில் இருந்து விமானம் மூலம் செல்லும் பயணிகள் கட்டுநாயக்காவில் இருந்து பஸ் மூலம் அழைத்துச் செல்லப்பட்டு கொழும்பில் இறக்கிவிடப்படும் இடம் கடந்த புதன்கிழமை முதல் மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை பயணிகள் கோட்டை ரீகல் தியேட்டருக்கு முன்பாகவே இறக்கப்பட்டு வந்தனர்.

தற்பொழுது பயணிகள் மருதானை தியணைக்கும் படைப்பிரிவு அலுவலகத்துக்கு முன்பாக செ்ன். ஜோசப் கல்லூரிக்கு சமீபமாக உள்ள இடம் ஒன்றில் இறக்கப்பட்டு வருகின்றனர். (இ-3)

## திட்டமிட்டபடி தில்லைக்கூத்தன் உண்ணாவிரதத்தில் குதிப்பார்!

கொழும்பு,மார்ச்4

சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெறவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இன்று மாலை 6 மணிக்கு திட்டமிட்டபடி தாம் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக கொழும்புத் தமிழ்ப் பிரமுகரான இ. நடராஜா(தில்லைக்கூத்தன்) நேற்றிரவு தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சிவராத்திரிக்காக 300 பேர் திருக்கேதீஸ்வரம் செல்வர்

மன்னார்,மார்ச்4

திருக்கேதீஸ்வரத்தில் இன்று இரவு இடம்பெறும் சிவராத்திரி விரத நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்காக முந்நூறு பக்தர்கள் அங்கு செல்வதற்கு படைத்தரப்பில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து இரு பஸ்களில் மன்னார் வரும் நூறு பக்தர்களும், மன்னார், வவுனியா பகுதிகளைச் சேர்ந்த இருநூறு பக்தர்களும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## படை வெளியேறினால்தான் கேதீஸ்வரத்தில் பூசை!

"திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேறிய பின்னரே அங்கு கும்பாபிஷேகத்தை நடத்தி பூசைகளை ஆரம்பிக்க முடியும்."

- அகில இலங்கை இந்துக் காங்கிரஸ் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

தற்பொழுது அங்குள்ள நிலைமையை நேரில் ஆராயும் பொருட்டு இ.தொ.காவின் கொழும்பு எம்.பியான ஆர்.யோகராஜன் தலைமையிலான இந்து மதபெரியார்கள் அடங்கிய குழு ஒன்று இன்று திருக்கேதீஸ்வரம் செல்லவுள்ளது. (உ-4)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் பொ. வேலாயுதம்

அவர்களின் மறைவால் கலங்கி நிற்கும் குடும்பத்திற்கும் கல்விச் சமூகத்திற்கும் ஆறுதல் கூறுவதுடன் உடுப்பிட்டி வீரபத்திரர் ஆலயத்திற்கு ஆற்றிய தொண்டை நினைவு கூர்ந்து ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்து அமரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சு. சரவணபவன் ஆச்சாரி
உரிமையாளர் - மதிவதனி சிற்பாலயம்

34, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (74185)

# கண்ணீர்க் காணிக்கைப் பூக்கள்

ஆனந்த மலர்வு 30 - 05 - 1942



அகால உதிர்வு 29 - 02 - 2000

கணித மாமேதை
## பொன். வேலாயுதம் (B.sc)
(VECTOR)

அன்னாரின் திடீர் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கும் மற்றும் கல்விச் சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மசாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திப்போம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

(74187) ஆறாத்துயரில்
உடுப்பிட்டி இளைஞர்கள்

# கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்!



ஆசான்
## வெக்டர் வேலாயுதம்

1998 க. பொ. த. உயர்தர
கணிதப்பிரிவு
யாழ். இந்துவின் மைந்தர்கள்

யாழ்ப்பாணம். (C/11307)

## வில்லூன்றியில் தீர்த்தமாட வசதி

மகாசிவராத்திரியை முன்னிட்டு புனித வில்லூன்றித் தீர்த்தக் கேணியில் அடியார்கள் தீர்த்தமாட வசதி செய்யப்பட்டிருப்பதாக புனித தீர்த்தப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். அடியார்கள் தீர்த்தமாட வசதியாகக் கேணி இறைத்துத் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. மழைநீர் நிறைந்திருந்த போதிலும் மேலதிக நீரிறைக்கும் இயந்திரங்களின் உதவியுடன் நீர் இறைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கட்டட வசதி

யாழ். வணிகர் கழகத்தின் தலைமைச் செயலகத்துக்கென இருபது லட்சம் ரூபா செலவில் மானிப்பாய் வீதியிலுள்ள கட்டடம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. முன்னர் 'ஈழநாடு' பத்திரிகை நிறுவனம் இயங்கிய கட்டடமே இதற்கெனக் கொள்வனவுசெய்யப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் வணிகர் கழகச் செயலகத்துடன் வணிகர்களுக்கெனக் கேட்போர் கூடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. (ஐ-5)

## ஒன்றுகூடல்

கலைஞர்களுக்கான திருப்பலியும் மாதாந்த ஒன்றுகூடலும் யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் நாளை ஞாயிறு காலை நடைபெறும். திருப்பலியை அருட்திரு அன்புராஜ் அடிகள் நிறைவேற்றிவைப்பார். (ஐ-17)

## விவரம் சேகரிப்பு

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் கணவனை இழந்த விதவைப் பெண்களின் சமூக பொருளாதார நலன்கள் தொடர்பாக இங்குள்ள 35 கிராமசேவை அலுவலர் பிரிவிலும் எதிர்வரும் 6ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

உரியவர்கள் உலர் உணவு பங்கீட்டு அட்டை, கணவனின் மரணச் சான்றிதழ், மாதாந்த உதவிப்பண அட்டை, பிள்ளைகளின் பிறந்த திகதிகள் போன்ற விவரங்களை அன்றைய தினம் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்களிடம் சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறைப் பிரதேச செயலர் பணிமனையின் சமூக சேவை அலுவலர் என்.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-109)

## மத்தியஸ்தர் வகுப்பு

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணியளவில் புதிய மத்தியஸ்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான வகுப்புக்களை யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தி வருகின்றது. புதிதாகச் சேர விரும்புபவர்களை அங்கு சமுகம் கொடுக்குமாறு செயலாளர் கேட்டுள்ளார். (ஐ)

## இன்று

யாழ். பிராந்தியத் தொலைத் தொடர்புச் சேவையாளர் சங்கத்தின் கலந்துரையாடல் இன்று காலை 10.30 மணிக்கு யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தொலைபேசிக்கான கட்டணம் நிர்ணயித்தலும் அங்கத்தவர் பதிவும் இடம்பெறவுள்ளதால் தொலைத் தொடர்பு உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-10)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
இன்று முதல்
அஜித், சிம்ரன்
நடித்த
அவள் வருவாளா
(ரீலீஸ்)
காட்சிகள் 11.00, 2.30
சிவராத்திரியை முன்னிட்டு
விசேட காட்சிகள்
6.00, 9.00
(புதிய நேரம்)
(C/11243)

**லிபேட்டி**
அச்சுவேலி
அர்ஜுன், ரம்பா
நடித்த
சுதந்திரம்
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
(74112)


# சிவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச்4

வடமராட்சி, துன்னாலை தெற்கு ஸ்ரீ தச்சன்தோட்ட பூதேஸ்வர சிவன் கோயிலில் இன்று மகாசிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. நான்குசாமப்பூசைகளுடன் அபிஷேகமும் நடைபெறும். (ஐ-10)

* * *

நாவற்குழி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் மகா சிவராத்திரி விழா இன்று சிறப்பாக நடைபெறவுள்ளது.

விஷேட அபிஷேகத்துடன் நான்கு சாமப்பூசைகளும் நடைபெறும். (ஐ-10)

* * *

வேலணை, மார்ச்4

வேலணைத் துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தினரால் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நிலைய முன்றலில் இன்று கலை நிகழ்சிகள் நடத்தப்படவுள்ளன. இரவு பட்டிமன்றம், நாடகங்கள், சமயச் சொற்பொழிவுகள், மற்றும் சிறுவர் கலைநிகழ்ச்சிகள் என்பன நடைபெற ஏற்பாடாகியுள்ளன. இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வேலணை பிரதேசசபைத் தலைவர் ந.கருணாகர குருமூர்த்தி கலந்து கொள்வார். (ஐ-167)

* * *

திருநெல்வேலிமேற்கு நீலாய தாட்சிசமேத காயரோகணேஸ்வரர் (சிவன்) ஆலயத்தில் இன்று மகாசிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

நான்கு சாமப்பூசைகளும் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (ஐ-7)

* * *

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மஹாசிவராத்திரி விழா குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் இன்று மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நான்கு சாமப்பூசை, பஜனை கூட்டுப் பிரார்த்தனைகளுடன் இடம்பெறும். (ஐ-30)

* * *

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன்-ஐயனார் கோயிலில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சிவராத்திரி வழிபாடு ஆரம்பமாகி நான்கு சாமப் பூசை, ஆராதனையுடன் இடம்பெறும். (ஐ-30)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்4

நுணாவில்மேற்கு அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய பரிபாலன சபை நடத்தும் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வுகள் சிவராத்திரி தினமான இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மேற்படி ஆலய முன்றலில் ச.கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை-

ஆலயத்தில் நான்கு சாமப்பூஜை வழிபாடுகள் இடம்பெறும். (ஐ-9-30)

* * *

கொழும்புத்தறை, மார்ச்4

யாழ்.வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தின் சைவசமய அபிவிருத்திக்கழகத்தின்46ஆவது ஆண்டுவிழா'வும், சிவராத்திரிவிழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு கழகத்தின் தலைவர் இ.விஜயரத்தினம் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகபரமாச்சாரிய சுவாமிகளின் அருளுரையும் இடம்பெறும்.

இக்கழகத்தினால் நடத்தப்பட்ட சைவசமய அறிவுப்பரீட்சை, செயல்முறைப்போட்டி ஆகியவற்றில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

மஹாசிவராத்திரி பூசை 5.00 மணிக்கு ஆரம்பமாகி 4 சாமப்பூசையும் இடம்பெறும். (ஐ-30)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்4

ஏழாலை களபாவோடை ஸ்ரீவசந்த நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இன்று மஹாசிவராத்திரிவிழா நடைபெறும். நான்கு சாமப்பூஜைகளும் தொடர்ந்து இரவு முழுவதும் லிங்க பூஜை மற்றும் பஜனை, பக்திப் பாடல்களும் 'பார்வதி கல்யாணம்' என்னும் விடயம் பற்றிய வில்லிசையும் நடைபெறும். (ஐ-15)

* * *

கொழும்புத்துறை, மார்ச்4

யாழ்.சத்திரச்சந்தி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் கோயிலில் இன்று சனிக்கிழமை மாலை 6.00 மணி தொடக்கம் மஹாசிவராத்திரி விழா ஆரம்பமாகி நடைபெறும்.

நாடு நலம்பெற, மக்கள் மன நிம்மதியுடன் வாழ இறை ஆசி வேண்டி விஷேட பஜனை - கூட்டுப்பிரார்தனைகளும் ஆலய பரிபாலசபையின் செயலாளர் கா.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும். (ஐ-30)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்4

கோண்டாவில் கிழக்கு பாதாள வைரவர் ஆலயத்தில் சிவராத்திரி விழா இன்று நான்கு சாமப் பூசைகளுடன் இடம்பெறும். (ஐ-9)

* * *

ஆரிய குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சிவராத்திரி விழா இன்று ஆறு சாம பூசைகளுடன் இடம்பெறும் (ஐ-9)

* * *

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தினர் நடத்தும் சிவராத்திரி விழா இன்று மாலை 7 மணி முதல் நிலையத் தலைவர் இ.சசிகுமார் தலைமையில் நிலைய மைதானத்தில் நடைபெறும். (ஐ-100)

# SAVE THE CHILDREN

A Vacancy exists in Save the Children - Jaffna for the post of **secretary** on a **fixed one year contract**

We are looking for a smart school leaver and the candidate should have a good knowledge of English - both written and spoken and computer skills in word processing.

Applications should reach us on or before 10th of march 2000, addressed to:

**The District Co-ordinator,
Save the Children,
146, Temple Road,
Nallur
Jaffna.** (74189)

# மரண அறிவித்தல்

## கபிரியேல் மரியாம்பிள்ளை

இளவலை போயிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இரணைப்பாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான மரியாம்பிள்ளை 01-03-2000 புதன் அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனாசியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிங்கராசா, மரியப்பிள்ளை, மேரி அஞ்சலா, றீற்றம்மா (இரணைப்பாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அருளப்பு, அருளானந்தம், அருட்தந்தை சவிரிமுத்து, அல்பிறட், செல்வம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 02-03-2000 அன்று இரணைப்பாலை பற்றிமா அன்னை ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 07-03-2000 செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு இளவாலை புனித றீற்றம்மாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இளவாலை. தகவல்:
அருளானந்தம் குடும்பம்.
(74172)

### சிவராத்திரியை முன்னிட்டு

# இன்றும் நாளையும் விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், மார்ச்4

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள மகா சிவராத்திரி விழாவில் கலந்துகொள்ளும் அடியவர்களின் நன்மை கருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபை விசேட பஸ் சேவைகளை நடத்தவுள்ளது.

இதன்படி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை இந்தச் சேவை இடம்பெறும்.

யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி - காங்கேசன்துறை வீதி ஊடாக தெல்லிப்பழை வரையும், அதே போன்று யாழ்ப்பாணத்தில் இருந்து இளவாலை ஊடாக சேந்தாங்குளம் வரையும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் பஸ்சேவைகள் நடத்தப்படும்.

தெல்லிப்பழையில் இருந்தும், சேந்தாங்குளத்தில் இருந்தும் கீரிமலை வரையிலான போக்குவரத்து இராணுவத்தினரின் இணைப்பு சேவையாக நடத்தப்படும்.

(ஐ-7)

# நல்லூர் பிரதேச சபைப் பிரிவில் ஏழு தார்வீதிகள் புனரமைப்பு

வலி.கிழக்கு,மார்ச்4

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 7 தார் வீதிகள் 16 லட்சம் ரூபா செலவில் பிரதேச சபை நிதிமூலம் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளான கல்வியங்காடு முக்குறுணிப் பிள்ளையார் வீதி, கொக்குவில் மேற்கு வராகிஅம்மன் வீதி,திருநெல்வேலி நாவலடி வீதி, கோண்டாவில் ஸ்ரீநாராயணா வீதி, கொக்குவில் மேற்கு கேணியடி வீதி, கோண்டாவில் மிஷன் பாடசாலை வீதி என்பனவே புனரமைப்புச் செய்யப்படும் வீதிகளாகும்.

நிதி ஒதுக்கீடு கிடைத்ததும் இப்பகுதியில் உள்ள ஏனைய வீதிகளும் திருத்தம் செய்யப்படும் என பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

(ஐ-180)

### நாவாந்துறையில் இருந்து

# குருநகருக்கு வள்ளங்களை எடுத்துவரும் மீனவர்கள்

அரியாலை,மார்ச்4

குருநகர்ப் பகுதியில் இருந்து குடாக்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து நாவாந்துறைக் கடற்பகுதியில் தொழில் செய்யும் பொருட்டு தமது படகுகளை வாகனங்கள் மூலம் அப்பகுதிக்கு கொண்டு சென்ற மீனவர்கள் தற்போது மீண்டும் அவற்றை குருநகர் பகுதிக்கு எடுத்துவரத் தொடங்கி உள்ளனர்.

குடாக்கடலில் மீன்பிடிக்க மீண்டும் அனுமதி வழங்கப்பட்டிருப்பதை அடுத்தே குருநகர், பாஷையூர்ப் பகுதி மீனவர்கள் தமது வள்ளங்களை நாவாந்துறையில் இருந்து எடுத்து வருகின்றனர். மிகுந்த சிரமத்தின் மத்தியில் மீனவர்கள் வள்ளங்களை வண்டில்களில் ஏற்றிச் செல்கின்றனர்.

(ஐ-17)

# மேலும் ஒரு தொகுதி மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்4

1999 - 2000 ஆம் கல்வி ஆண்டுக்கு யாழ். பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மேலும் ஒரு தொகுதி மாணவர்களின் விவரம் மானிய ஆணைக் குழுவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வெற்றிடம் நிரப்பு பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை வருமாறு:-

வர்த்தகம்-4, முகாமைத்துவம்-4, பௌதிக விஞ்ஞானம்-68, விவசாய விஞ்ஞானம்-16, உயிரியியல் விஞ்ஞானம்-16.

கலைப்பீடத்துக்கு

*ஊனமுற்றவர்களுக்கான அனுமதி - 8,

*விசேட அனுமதி:- மொழியியல் -26, சமஸ்கிருதம்-06

பௌதிக விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விரிவுரைகள் ஏப்ரல் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால் இப்பாட நெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஏனைய கற்கைநெறிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான விரிவுரைகள் செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பமாகவுள்ளன. (இ-5)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்4

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜகோபாலும் சிறப்பு விருந்தினர்களாக அருட்திரு.பி.பி இராஜசிங்கம், வைத்திய அதிகாரி ஆ.திருநாவுக்கரசு ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ-10)

## மாதாந்த இசை நிகழ்வு

இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் மாதாந்த இசை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகளின் ஆசியுரையைத் தொடர்ந்து பி.எஸ்.பிச்சையப்பாபிள்ளையின் நாதஸ்வர இசையும், எஸ். பத்மலிங்கத்தின் இசைக் கச்சேரியும் இடம்பெறும். (ஐ-15-103)


**YARL HALL கல்வி நிலையம்**

93A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: 49, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.

தரம் 4 முதல் O/L வரை புதிய பிரிவு வகுப்புகள் ஆரம்பம்: 05-03-2000

பிரத்தியேக விஞ்ஞான வகுப்பும் ஆரம்பமாகின்றது.

இரா. செல்வவடிவேல் (74181)

**அவசர கலந்துரையாடல்**

முதலாம் வருட வணிக முகாமைத்துவ மாணவர்களுக்கான MACO Week சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று அவசரமாக மேற்கொள்ள வேண்டியிருப்பதால் திங்கட்கிழமை (06-03-2000) அன்று காலை 10 மணிக்கு முகாமைத்துவ வணிக மாணவர் பொது அறையில் ஒன்றுகூடுமாறு அன்பாக வேண்டப்படுகின்றீர்கள்.

1St Year Re'f
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(74175)

**கண்ணீர்க்காணிக்கை**



காவியமான கணிதக் கடல்
அமரர் பொ.வேலாயுதம் (B.sc)
(வெக்டர்)

Science Hall வாழ்க்கை தன்னில்
தனது கணித அறிவின்
பயன்கள் எல்லாம் எமக்கே
பலதாய்த் தந்து வைத்து
பயணம் ஆனீர் எங்கே - நாம்
பரிதவிக்கின்றோம் இங்கே!

98 A/L கணிதப்பிரிவு
மாணவர்கள்

(74184)

**கண்ணீர் அஞ்சலி**

எமது நிறுவனத்தின் முன்னாள் விரிவுரையாளரும்
புகழ்பூத்த கணித ஆசானுமாகிய
அமரர் வெக்டர் P.வேலாயுதம்

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர், நண்பர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

குறிப்பு:-
இன்று பகல் வகுப்புக்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன.

(74183)

**கண்ணீர் அஞ்சலி**

கணிதப் பேராசான்
பொன்னையா வேலாயுதம் (Vector)

அவர்களின் திடீர் மறைவு குறித்து ஆழ்ந்த அதிர்ச்சியடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கணித மாணவர்கள,
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(74176)

**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
*VADDUKODDAI*

Obtain Open University Exemptions With our Diplomas!

Diploma in Computer Programming & Data Processing
One Year Full Time Fees:-Rs.4,000/-
Including Ms Excel, Visual Basic (6.0) Fox Pro C. Pascal & Access

1. Windows Applications
(Morning / Evening)
* MS Word 2000
* Ms Excel 2000
* Ms Access 2000
* MS Power point 2000
* Visual Basic
(Duration 3 Months Course Fees:- Rs.1,000/- Only)

2. Technician / Craft Certificate Course
* Electronics & Telecommunication Engineering
(Three Year Full Time Fees:- Rs.4,600/-)
* Radio & T. V. Servicing - Rs.1,550
* Auto Mobile Technology
(Including Car Driving Training)
* Electrical Wiring & Installation
*Mechanical Craftmanship
(Lathe, Fitting & Welding)

* Duration One Year - Fees:- Rs.1450/-
Entry Qualification; G.C.E (O/L) கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.
பயிற்சி நெறிகள் வட்டுக்கோட்டையில் நடைபெறும். குறைந்த கட்டணத்தில் தரமான சேவை. தமிழில் விளக்கவுரைகள் வழங்கப்படும்.

❖ Collect application forms at JCIT Vaddukoddai
❖ Course Commence on March 10th 2000
❖ Facilities:- Library & Sports

*இவ்வசதிகள் வட்டுக்கோட்டையில் மட்டும்.*

- Director,
JCIT

(C/11294)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### இலகு திருமணசேவை

1961 மகம் France இல் Computer படித்து வேலை செய்பவருக்கு உயரமுள்ள குடும்பப்பாங்கான மணப்பெண் தேவை. மணமகன் யாழ். உள்ளார். மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு ஞாயிறுகளில் நுரை விமனா K.K.S வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (74082)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969 இல் பிறந்த செவ்வாய் தோஷமற்ற மிருகசீரிடம் 1 ஆம் பாதம் பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு மணப்பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். கீழ்க்காணும் முகவரிக்கு கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 1009 மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (74072)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகலவித கமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஷ் கண், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத் துறை சார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும். க. நாராயணசாமி இல. 301, கஸ்தூரியார்வீதி, மேல்மாடி. (கன்னா திட்டிச் சந்திக்கு அருகில்) (74077)

### நாடகம்

இலங்கை வானொலி நாடகப் போட்டிக்கு நாடகம் எழுதப் போகிறீர்களா? 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நூல்களை வாசியுங்கள் 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? 2. நாடகம் எழுதுவது எப்படி? ரூபா 50 மட்டுமே. (74106)

### விற்பனைக்கு

ரொயோட்டா ஹைஏஸ் 40 சிறி 4456 டீசல் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு ச. செந்தூரன் இல.4, மேதர் லேன், மானிப்பாய். (செல்ல முத்து விளையாட்டு அரங்கு அருகில்) தொலைபேசி இல - 021-3470. (74102)

புதிய MD 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். தொடர்பு:- இல. 10/02 சிவன் அம்மன் கோவில் வீதி, கந்தர்மடம். (74140)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (74118)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 08 - 11 - 1949

ஆண்டவன் திருவடியில் 20 - 01 - 2000

அமரர்

**லங்காதேவி சண்முகநாதன் (சோதிமணி)**

லங்கா சிமெண்ட் லிமிற்றெட்

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் லங்காதேவியின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்

அன்புக் கணவர்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார்,
மக்கள், மருமக்கள்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்:
கணவர்
21, கனகரட்ணம் றோட்,
அரியாலை.

7, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(74053)


இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்! CEDRIC



* கேஸ் போல் நீலச்சுவாலை
* கரிபிடிக்காது
* காற்று அழுத்தம் தேவையில்லை
* சிலிண்டர் தேவையில்லை
* மணம் இல்லை

**மண்ணெண்ணெய் கேஸ்குக்கர்**

COLOMBO - No 98, BRABROOK PLACE
COLOMBO - 2
தொலைபேசி இல. 323223

JAFFNA - SARAGAS'S CENTER
797, K.K.S. ROAD,
JAFFNA. TEL - 2839

(C/11054)


வேலணையில் படைமுகாமை அகற்றி

# பாடசாலை இடையூறின்றி இயங்க வசதிசெய்து தருமாறு கோரிக்கை

வேலணை,மார்ச்.4

வேணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் ஏனைய பாடசாலைகள் போல் சுதந்திரமாக இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பகுதி ஏழைமாணவர்கள் உயர்கல்வி பெற ஆவன செய்யுமாறு பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேலணை பிரதேச சபைத்தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி ஊடாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா விடம் இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தீவகத்தின் மத்திய கல்லூரியாக விளங்கும் வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் 1991ஆம் ஆண்டு தொடக்கம் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து 1998ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதமளவில் பாடசாலையின் வகுப்பறைப் பகுதிகள் மீண்டும் ஒப்படைக்கப்பட்டு பாடசாலை அங்கு நடைபெற்றுவருகின்றது. பாடசாலையின் ஒருபகுதியும்,அயலிலுள்ள வீடுகளும் படையினரால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுவருகின்றன. இதனால் எமது பாடசாலை படைமுகாமுக்குள்ளேயே தொடர்ந்து பல இடர்களுக்கு மத்தியில் - கடந்த ஒன்றரை வருடங்களாக - இயங்கி வருகின்றது.

மாணவர்கள், ஆசிரியர்கள் தொடர்ந்து பரிசோதிக்கப்பட்ட பின் அனுமதிக்கப்படல், பெற்றோரோ, பழைய மாணவர்களோ கல்வி அதிகாரிகளோ வருவதாயின் முன் அனுமதி பெற்று வருதல், தளபாடங்கள், கற்பித்தல் உபகரணங்களோ மற்றும் பொருள்களோ கொண்டு வருவதாயின் முன்னனுமதி பெறல், மாணவர், ஆசிரியர் ஆகியோருக்கு வீதிப் பாவனை இருந்தபோதும் பஸ் போக்குவரத்திற்கு வீதிதிறக்கப்படாமையினால் துவிச்சக்கரவண்டிகள் மற்றும் வாகனங்களை முகாமிற்கு அப்பால் நிறுத்துவதனாலும் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு மேல் நடத்தல் போன்ற பல இடர்பாடுகள் உள்ளன. இவை அரசினால் மேற்கொள்ளப்படும் புத்தாயிரமாம் ஆண்டிற்கான புதிய கல்விச் சீர்திருத்தத்தினை நன்கு நடைமுறைப்படுத்தப் பெருந்தடையாக உள்ளன. முன்னர் எமது பாடசாலைப் படைமுகாம் புங்குடுதீவு, மண்டைதீவு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய பெரும் பகுதிக்கு பொறுப்பாக இருந்தது. ஆனால் தற்பொழுது வேலணைப் பகுதிக்கு மட்டுமே பொறுப்பானதாக உள்ளது போல் தோன்றுகிறது. இவற்றையெல்லாம் பார்க்கையில் படையினர் பொருத்தமான வேறு ஓர் இடத்திற்கோ அல்லது வீதிப்பாவனைக்கு ஏற்ப சற்றுத் தள்ளி இருந்து கொண்டு எமது பாடசாலையை

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1953 - 08 - 19

மறைவு 1999 - 02 - 14

**அமரர் சின்னத்துரை மனோகரன்**

திதி:-- 2000-03-04

ஆண்டு ஒன்று சென்றாலும் அன்பு முகம் மறந்திடுமோ? அரவணைத்தே எம்மை விட்டுச் சென்றுவிட்ட மாயமென்ன!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மனைவி பிள்ளைகள்
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்
50/21, செட்டித்தெரு
நல்லூர்.

சிவானந்தா கபே,
நல்லூர்.

(C/11255)


KOBE KOBE KOBE KOBE KOBE KOBE

*நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?*

உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.

உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!

KOBE

அன்டனாக்களும் பூஸ்டர்களும்

இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.

LANKA NIPPON

No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc, Colombo - 4
Tel: 589992

'KOBE தரத்தின் சின்னம்'

(C/10933)

KOBE KOBE KOBE KOBE KOBE KOBE

# விஞ்சு கணித வித்தகர்க்கு நெஞ்சுருகும் அஞ்சலிகள்

மலர்வு
30 - 05 - 1942



உதிர்வு
29 - 02 - 2000

## அமரர்
## 'வெக்டர்' வேலாயுதம் B.Sc.

### தந்தையின்றி - கணிதமெனும் தளிர்க்குழந்தை அழுகிறது!

வெக்டர் எனுமொரு விருட்சம் விழுந்தது (தா?)
விக்கி அழுதது கணிதம் - பூமியின்
திக்கு எங்கனும் அதிர்ந்து போனது - 'காவி'யைத்
தீர்க்கும் வழியினை யாரினிச் சொல்வது?

அற்ப ஆயுளை அறுத்து அரனவன்
அடியை அடைந்தனர் எங்கள் விற்பனர்.
'நுட்ப' மென்றவர் ஓதும் மொழியதும்
நொருங்க லானது! நெஞ்சம் நின்றது!!

'வியாக்கி யானம்' என்றவர் கூறிடும்
விஞ்சு மொழியிலே அன்பு பெருகிடும்
நெஞ்ச மெங்கனும் பண்பு கொண்டதால்
நிகரிலாப் பெரும் புகழ் சமைந்தது.

இன்று...... ஐயகோ!
விந்தையானது - எங்கள் கல்வியின்
சிந்தை யழிந்தது - வெக்டர் எனுமொரு
சிகரம் சரிந்ததால் உள்ளம் வெந்தது!
நொந்து போயினோம் - ஐயனே உம்
நிழலைப் பற்றுவோம், ஆசி தருகுவீர்.

அமரர் வாழ்க்கையிலே.....

தந்தை : அமரர் பொன்னையா
தாய் : அமரர் மீனாட்சி பொன்னையா

ஆரம்பக்கல்வி : உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
இடைக்கல்வி : ஸ்கந்தவரோதயக் கல்லூரி - கந்தரோடை
உயர்கல்வி : பேராதனைப் பல்கலைக்கழகம்

பாடசாலைக் கல்விச்சேவை:

36 வருட பாடசாலைக் கல்விச் சேவை

1. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
2. பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் கல்லூரி
3. யாழ். பரியோவான் கல்லூரி
4. பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி
5. பருத்தித்துறை வேலாயுதம் ம. வி.
6. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

ஓய்வு : 1990

புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் சேவை:

G.C.E. (A/L) மாணவர்களுக்கு தூய கணிதம் - பிரயோக கணிதம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் பணியில் தொடர்ந்து 25 வருட காலம் ஈடுபட்டமை.

நூலாக்கப் பணி:

G.C.E. (A/L) மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன் நல்கும் வகையில் தமிழ்மொழி மூல கணிதபாட வழிகாட்டி நூல்களின் ஆக்கம்.


சமய - சமூகப்பணி:

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரர் ஆலய புனருத்தாரண திருப்பணிகளும் தேர்த் திருப்பணியும்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
நிர்வாகி, சக ஆளணியினர்
**புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம்**
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்

(Cl.J304)

# நீர் நிறைந்த விழிகளுடன்.....



**மலர்வு**
**30 - 05 - 1942**

**உதிர்வு**
**29 - 02 - 2000**

## வெக்டர் வேலாயுதம்

## (பொன்னையா வேலாயுதம்)

தூய கணிதத்தைக் கற்றுத்தந்தவரே!
தூய்மையாய் எமக்குப் போதித்தவரே!
உம் கணித விடைகளைப் போலவே
உமது காலத்தையும் முடித்துக் கொண்டதேனோ?

தேற்றங்களை எமக்கு விவரித்தவரே – உம் பிரிவைத்
தேற்ற என்ன தேற்றத்தை விட்டுச் சென்றீர்?
காவிகளை எமக்குக் கற்றுத் தந்தவரே – உம்மை
காவிடக்கூட நாம் அருகதையற்றவராகிவிட்டோம்.

**29-02-2000 அன்று இயற்கையெய்திய திரு. வெக்டர் வேலாயுதம் (பொன்னையா வேலாயுதம்) அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

பொறியியற்பீட மாணவர்கள்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

(C/11305)


UNOPS
இதழ் :12
March 2000

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியூடான ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம்

# கண்ணிவெடி விழிப்புணர்வுத் திட்டம்

## 1998,1999ம் ஆண்டுகளில் யாழ் மாவட்டத்தில் மிதிவெடி மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள்

யாழ் போதனா வைத்தியசாலை, ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனம், SCF, ICRC, உதயன் பத்திரிகை ஆகிய தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் படி 1998 ஆம் ஆண்டு 45 பேர் யாழ் குடா நாட்டில் மிதிவெடி மற்றும் வெடிக்கத்தக்க ஆயுதங்களின் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். இவ்வெண்ணிக்கை 1999ம் ஆண்டில் 34 ஆக காணப்படுகிறது. 1998 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டவர்களில் 24 பேர் தங்களது ஒரு காலை இழந்துள்ளனர். இரண்டு பேர் இறந்துள்ளனர். கைவிரல்களை ஒருவரும், கண்பார்வையை ஒருவரும் இழந்துள்ளனர். மிகுதியானோர் பாதிப்பிற்குள்ளான போதிலும் நிரந்தர அங்கவீனம் எதனையும் அடையவில்லை. அத்துடன் 1998 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டவர்களில் 39 ஆண்களும் 10 சிறுவர்களும் அடங்குவர்.




சென்ற ஆண்டு பாதிக்கப்பட்ட 34 பேரில் 15 பேர் தங்களது ஒரு காலை இழந்துள்ளனர். கைவிரல்களின் பாதிப்பிற்கு இரண்டு பேரும் கண் பார்வை இழப்பிற்கு ஒருவரும் ஆளாகியுள்ளனர். இறந்தவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் மூன்றாகும். அதேவேளை 1999 இல் பாதிக்கப்பட்டவர்களில் 31 ஆண்களும் 9 சிறுவர்களும் அடங்குவர்.

## அவனுக்கும் ஆசை

துள்ளித்திரியும் பள்ளிப்பருவம்
குறும்புகள் செய்யும் குழந்தைப் பருவம்
உண்டு உடுத்து உருண்டு திரிந்து
பள்ளிக்குப்போய் கல்விபயில
அந்தக்கணத்திலும் அவனுக்கு ஆசை!

பெற்றவரோடு மழலைகள் பேசி
பிறந்தவரோடு கெந்தி விளையாடி
'சோ' வென்று கொட்டும் மாரிமழையில்
திருட்டுத்தனமாய் நின்று நனைய
அந்தக் கணத்திலும் அவனுக்கு ஆசை!

இத்தனையும் செய்யும் பத்துவயது
பாலகரைப் பார்த்து. . . .
அவன் கண்கள் அழுதன
அவனைப்போல் எத்தனை ஆயிரம்
செந்தமிழ்க் கொழுந்துகள்
கண்ணிவெடியில் கருத்திழந்து காலிழந்து
நொண்டி மனிதர்களாய் மூலையில்
முடங்கினர்
அவன்கண்முன்னே ஆசைகள்
நிராசையாகின!

வெண்புறா பறக்கும் சமாதான உலகத்தை
தன் நொண்டிக்காலால் கடந்து நடக்க
இந்தக்கணமே அவனுக்கு ஆசை
- ச.சி.திருஞானமூர்த்தி -
- கீதை -

## மிதிவெடி விபத்து ஒன்றில் தனது காலை இழந்த திரு.A.அருளம்பலம் என்பவரை யாழ் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக சந்தித்து எடுக்கப்பட்ட பேட்டியினை கீழே தருகின்றோம்.



கே: ஐயா நீங்கள் உங்களைப்பற்றியும் உங்கள் குடும்ப நிலை பற்றியும் சற்றுக் கூற முடியுமா?
ப: ஆம். நான் யாழ் நல்லூர் மாநகர சபையில் தலைமை மேசன் வேலை மேற்பார்வையாளராக வேலை செய்கிறேன். எனது வயது 55. எனக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. நான் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவன்.

கே: நீங்கள் எப்போது மிதிவெடிப் பாதிப்பிற்குள்ளானீர்கள்?
ப: 1997.12.11 ஆம் திகதியன்று வியாழக் கிழமை சுமார் நான்கு மணியளவில்.

கே: உங்களுக்கு இச்சம்பவம் எங்கு நடைபெற்றது?
ப: நான் குடியிருந்த வீட்டு வளவினுள்.

கே: எவ்வாறு நீங்கள் மிதிவெடியில் சிக்கினீர்கள்?
ப: என்னுடைய வீடு ராணுவத்தின் காவலரண் உள்ள பகுதிக்குள் இருந்தபடியால் காவலரணுக்கு வெளியில் என்னுடைய வீட்டுக்கு மிக அருகில் உள்ள ஒரு காணியில் வீடு கட்டி சுமார் 1½ வருடங்களாக குடியிருந்து வந்தேன். அந்த வளவினுள் நான் ஒரு எலுமிச்சைக்கன்று ஒன்று வளர்த்து வந்தேன் அந்த எலுமிச்சை மரத்திற்கு பாத்தி கட்டித் தண்ணீர் ஊற்றுவதற்காக மரத்திற்கு அடியில் இறங்கிப் புல் பிடுங்கிக்கொண்டிருந்த சமயம் நான் மிதிவெடியில் சிக்கினேன்.

கே: மிதிவெடியில் சிக்கிய பின்பு உங்களுக்கு நடந்த சம்பவங்கள் ஞாபகம் இருக்கின்றதா?
ப: ஆம், எனக்கு நல்ல அறிவு இருந்தது. மற்றையவர்களைப் போல் நான் மயக்கமடையவில்லை. அந்த நேரம் குமார் என்ற பையன் அங்கு வந்து எனது கால் காயத்திற்கு கட்டுப் போட்டு பின் மோட்டார் சைக்கிளில் ஏற்றி யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். போகும் வழியில் திருநெல்வேலி சந்தியில் மோட்டார் சைக்கிள் பழுதடைந்து விட்டது. பின் அங்கிருந்து வேறொரு மோட்டார் சைக்கிளில் கொண்டு போகப்பட்டேன்.
அந்த மோட்டார் சைக்கிளும் கந்தர்மடத்திற்கு அருகில் பழுதடைந்து விட்டது. பின்பு வேறொரு மோட்டார் சைக்கிளிலேயே வைத்தியசாலையை அடைந்தோம்.

கே: மிதிவெடியில் நீங்கள் சிக்குண்டதால் உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களைக் கூறமுடியுமா?
ப: ஆம் நான் எனது ஒரு காலை இழந்ததுடன் எனது கேட்கும் சக்தியும் சற்று குறைவடைந்து விட்டது. அதுமட்டுமன்றி முன்பு போல எனது மேசன் வேலையில் கடினமான சில வேலைகளைச் செய்ய முடியாதுள்ளது. வீட்டில் புல் செருக்குதல், தோட்டம் செய்தல் இப்படியான வேலைகளையும் தற்போது செய்யமுடியாதுள்ளது. முன்பிருந்த உற்சாகமும் தெம்பும் எனக்கு மிதிவெடியில் சிக்குண்ட பின் இல்லை.

கே: நீங்கள் மிதிவெடியால் பாதிக்கப்பட முன் மிதிவெடிகள் பற்றி அறிந்திருந்தீர்களா?
ப: ஆம் அறிந்திருந்தேன். சில இடங்களில் மிதிவெடி அபாய அறிவிப்புப் பலகையையும் கண்டிருக்கின்றேன் ஆனால் அவை பற்றி விரிவாக அறிந்திருக்கவில்லை. விழிப்புணர்வு எதனையும் நான் பெற்றிருக்கவில்லை.

கே: இராணுவத்தின் காவலரண்களுக்கு அருகில் மிதிவெடிகள் இருக்கலாம் என நீங்கள் சந்தேகிக்கவில்லையா?
ப: இல்லை. ஏனெனில் இராணுவம் மிதிவெடிகளை அகற்றி மக்களை அதற்குள் அனுமதித்த பின்பே நான் அங்கு சென்று குடியிருந்தேன். எனது வளவிற்குள் மிதிவெடியிருக்கும் என்று நான் ஒரு போதும் நினைக்கவில்லை.

கே: உங்களது மிதிவெடி விபத்தின் மூலம் ஏற்பட்ட அனுபவத்தில் இருந்து நீங்கள் யாழ்ப்பாண மக்களிற்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?
ப: எனது வீட்டு வளவினுள் அதுவும் இராணுவத்தினால் துப்பரவாக்கப்பட்ட பிரதேசத்திலேயே மிதிவெடி வெடித்தது. அதனால் துப்பரவு செய்யப்பட்ட பிரதேசம் எனினும் மிதிவெடிகள் காணப்படலாம். எனவே நன்றாகப் பரிசோதனை செய்து மிதிவெடிகள் முற்றாக அகற்றப்பட்ட பின்னரே மக்கள் தங்கள் வீடுகளிற்கு சென்று குடியேற வேண்டும். உடனே போய்க் குடியேறக்கூடாது.

கே: யாழ் மக்களிற்கு மிதிவெடி விழிப்புணர்வு அவசியம் என நீங்கள் கருதுகின்றீர்களா?
ப: கட்டாயம் எமது மக்களிற்கு மிதிவெடிகள் பற்றிய விழிப்புணர்வு தேவை. ஏனெனில் நெல் விதைத்தது போல் மிதிவெடிகள் எமது பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருக்கிறது. எனவே மிதிவெடி விழிப்புணர்வு இப்போது மட்டுமல்ல எப்போதும் எம்மக்களிற்கு தேவை. குறிப்பாக வாலிப வயதினருக்கு இது மிகவும் அவசியம். நான் இப்போது மிதிவெடி சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்துக்களை கேட்பதில் ஆர்வம் காட்டி வருகின்றேன். அதே போல் யாழ் மக்களும் இவ்விழிப்புணர்வை அது கிடைக்கின்ற இடங்களிற்கு தேடிச்சென்று பெற்று தங்களது எதிர்கால வாழ்வை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

## கோப்பாய் பெண்கள் குழுவிற்கான கண்ணிவெடி விழிப்புணர்வுப் பட்டறை

கோப்பாய் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் பெண்கள் குழுவிற்கான கண்ணிவெடி விழிப்புணர்வுப் பட்டறை இவ்வாண்டு மாசி மாதம் 8ம், 9ம் திகதிகளில் பகுதி நேரமாக UNOPS/JRRP இன் கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழுவினால் நடாத்தப்பட்டது. இப் பெண்கள் குழு UNHCR இனால் ஏற்கனவே தலைமைத்துவப் பயிற்சி பெற்றவர்கள் ஆகையால் இவர்கள் மூலம் கண்ணிவெடி விழிப்புணர்வுக் கருத்துக்களை சமூக மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடனேயே இவர்களுக்கு இப்பட்டறை நடாத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து கோப்பாய் பிரதேச மக்கள் மத்தியில் இவ்விழிப்புணர்வுக் கருத்துக்களை இவர்கள் வழங்குவார்கள். இவர்களினால் பொதுமக்களிற்கு வழங்கப்படவிருக்கும் விழிப்புணர்வு நிகழ்வுகளை UNOPS/JRRP இன் கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழு அங்கத்தவர்கள் கண்காணிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கை வெற்றியளிப்பின் மேலும் 7 பிரதேச செயலர் பிரிவுகளிற்கு இது விஸ்தரிக்கப்படும். அப்பிரதேச செயலர் பிரிவுகளிலும் UNHCR இனால் தலைமைத்துவப் பயிற்சி பெற்ற பெண்கள் குழுவினைப் பயன்படுத்தி கண்ணிவெடி விழிப்புணர்வுக் கருத்துக்கள் சமூக மக்களிடையே வழங்கப்படும்.

### மிதிவெடிகள், வெடிக்கத்தக்க ஆயுதங்களின் அபாயங்களில் இருந்து நீங்கள் உங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு கீழே உள்ள வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

- நன்றாகப் பயன்படுத்திய நடைபாதைகளை மட்டுமே பயன்படுத்துங்கள். புதர்கள் மண்டியுள்ள பிரதேசங்களைப் பயன்படுத்தாதீர்கள்.
- பாதையில் செல்லும் போது அதன் ஓரங்களை பயன்படுத்தாதீர்கள்.
- கைவிடப்பட்ட வீடுகள், விவசாயக்காணிகள், காவலரண்கள் போன்ற இடங்களிற்குள் நுழையாதீர்கள். ஏனெனில் அங்கே மிதிவெடிகள் இருக்கலாம்
- நீங்கள் கீழே விழுத்தாத எந்தவொரு வித்தியாசமான பொருளையும் தொட வேண்டாம்.

### கண்ணிவெடி விழிப்புணர்வு மதிப்பீட்டுப் பரீட்சை

எம்மால் கண்ணிவெடி விழிப்புணர்வு வழங்கப்பட்ட யாழ் மாவட்டத்திலுள்ள 92 பாடசாலைகளில் மார்ச் மாதம் 14ம் திகதி கண்ணிவெடி விழிப்புணர்வுப் பரீட்சைகளை அப்பாடசாலைகளிலேயே நடாத்தவுள்ளோம். எனவே இப்பாடசாலைகளிலுள்ள வகுப்புரீதியான மாணவர்களின் எண்ணிக்கையை மிகவிரைவில் எமது அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

மிதிவெடி விழிப்புணர்வு சம்பந்தமான ஆக்கங்களை எழுதி அனுப்பவேண்டிய முகவரி:
கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழு
யாழ் புனர்வாழ்வு மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டம் (JRRP),
யாழ் மாவட்ட செயலகம் (கச்சேரி),
யாழ்ப்பாணம்.

அருகே தரப்பட்டுள்ள படத்தை பார்க்கும் போது உங்கள் எண்ணத்தில் உதிக்கும் கருத்துக்களை கவிதையாகவோ கதையாகவோ எழுதி அனுப்புங்கள். உங்களது ஆக்கங்களில் சிறந்தது அடுத்த இதழில் வெளியிடப்படும்.



## முதலாவது ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 16 - 04 - 1970



ஆண்டவன் அடியில் 14 - 02 - 1999

### செல்வி புஸ்பராணி அருளம்பலம்
(ஆனந்தி)

எங்கள் குடும்பத்து ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
காலத்தின் கோலத்தால் அணைந்து விட்ட
அன்புருவே ஆனந்தி! - உந்தன்
ஆத்மசாந்திக்காய் ஆண்டவனை
இறைஞ்சுகின்றோம்.

உந்தன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
(74116)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 09 - 11 - 1983



ஆண்டவன் அடியில் 24 - 02 - 1998

### செல்வி கிருஷ்ணபிள்ளை பாமினி

ஊரும் உறவும் உருகி நிற்க
பாச பந்தங்களை பரிதவிக்க விட்டு
பதினாறிலே போனாயோ!

சிவராத்திரியில் சிவனடி சேர்ந்திட்ட
இந்த ஈராண்டல்ல என்றும்
உன்னை நினைக்கும்

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர், அயலவர்கள்.

பட்டியோடை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
(74141)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 24 - 03 - 1931



அரன் அடியில் 20 - 02 - 1993

### திருமதி பாக்கியம் இராமலிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியை, நாவலர்வித்தியாலயம், கோப்பாய்)

திதி:- 04-03-2000

ஏழு ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு நீங்காது என்றும்
எங்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்புக்கணவன், உற்றார்,
உறவினர்.

நாவலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்
(74156)

### சிறுவர் பூங்கா அமைக்கப்படும்

வலி.கிழக்கு,மார்ச் 4

நவீன வசதிகளுடன் கூடிய சிறுவர் பூங்கா ஒன்றை அமைக்க நல்லூர் பிரதேசசபை நடவடிக்கை எடுத்துவருகிறது.

சிறுவர்களுக்கான பொழுது போக்கு விளையாட்டு வசதிகளைக் கொண்டதாக இப்பூங்காவை நிறுவ திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகளில் காணி கொள்வனவு செய்யப்பட உள்ளது. (ஐ-180)

### செயலகத்தில் கலந்துரையாடல்

வடமராட்சி,மார்ச்4

யாழ். மாவட்ட ஆரம்பப் பிள்ளைப்பருவ மேம்பாட்டுக் குழுவின் கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ். செயலக மண்டபத்தில் யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

பாலர் பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், அரசசார்பற்ற நிறுவனங்களினால் முன்பள்ளிகளுக்கு வழங்கப்படும் உதவிகளை ஒருங்கிணைத்தல் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படும். (ஐ-173)

### தென்னங்கன்று வழங்க ஏற்பாடு

நல்லூர்,மார்ச்4

வடபிரதேச தென்னந்தோட்ட உரிமையாளர்கள் சங்கம் விவசாயி ஒருவருக்கு தலா ஐம்பது தென்னங் கன்றுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

தென்னங்கன்றுகள் தேவைப்படுவோர் 'தலைவர், வட பிரதேச தென்னந்தோட்ட உரிமையாளர்கள் சங்கம், தென்னை அபிவிருத்திச் சபை, பளை' என்ற விலாசத்தில் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு மேற்படி சங்கத்தின் தலைவர் முனேஸ் துரைசிங்கம் தெரிவித்தார். (ஐ-103)

### இன்றைய கிரிக்கெட்

'மணிவதனன்' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள ஆட்டங்களில், கொமேர்ஷல் வங்கி அணியுடன் சண் வி.க. அணியும், விக்ட்றி வி.க. அணியுடன் சென். மேரிஸ் வி.க. அணியும், கல்வித் திணைக்கள அணியுடன் நல்லூர் தெற்கு சமூக வி.க. அணியும், ஸீ ஹொக்ஸ் வி.க. அணியுடன் கே.ஸி.ஸி. வி.க. அணியும், கலாமன்றம் வி.க. அணியுடன் வெங்கடேஸ்வரா வி.க. அணியும், ஸ்புட்ணிக் வி.க.அணியுடன் ஜமஹா வி.க. அணியும், மானிப்பாய் பரிஷ் வி.க. அணியுடன் விக்ரம் வி.க. அணியும், பாடுமீன் வி.க. அணியுடன் சென்.சாள்ஸ் வி.க. அணியும் மோதுகின்றன. (ஐ-8)

### போட்டி அட்டவணை

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு உரிய போட்டி விபர அட்டவணை இன்று காலை 10 மணிக்கு மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் தயாரிக்கப்படும். (ஐ-8)

## கண்ணீர் காணிக்கை

மழலைகளாம் எம்மை பாதிவழியில்
பரிதவிக்கவிட்டு காலனிடம் சென்ற எம்

நல்லாசான்

**வெக்டர் P. வேலாயுதம்**

அவர்களுக்கு எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணித மாணவிகள்
2002 (A/L)
NEW SCIENCE HALL

(C/11280)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**பொ. வேலாயுதம் (வெக்டர்) B.Sc.Cey.**

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவனும் பழைய மாணவர் சங்க முன்னாள் நிர்வாகசபை உறுப்பினரும் சிறந்த சமூக சேவையாளரும் உயர்தர கணித பாடத்தில் யாழ். மாவட்டத்தில் பிரபல ஆசானும் தமிழ் மாணவர்களுக்கெனத் தமிழ் மொழியில் உயர்தர கணித பாடநூல்களை வெளியிட்டவருமான அமரர் பொ. வேலாயுதம் அவர்களின் திடீர் மறைவையொட்டி ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் கொண்டு, அவரது பிரிவால துயருறும் குடும்பத்தவர்களுக்கும் கல்விச் சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

(74146)

## கண்ணீர் அஞ்சலி

எமது கணிதப் பேராசான்

**பொன்னையா வேலாயுதம் (வெக்டர்)**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த ஆனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

1999 A/L
SCIENCE HALL
DAY CLASS
மாணவர்கள்.

(74158)


## மொத்த விலைக்கு

கலர் D.S.I (EVA FLEX)
SIZE - 16,17,18,19,20 - 44/=
" - 21,22,23,24 - 54/=
" - 25,26,27,28 - 64/=

Sodi Leisure

Sodi செருப்புகள் 10% கழிவுடன் மொத்த விலைக்கு பெற்றுக் கொள்ள

கணபதி சூ சென்டர்

32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(74155)



## MILLENIUM RESTAURANT
## மிலேனியம் றெஷ்ரோறன்ற்

எம்மிடம் தரமான உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ளவும் ஓடர் உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ளவும் நாட வேண்டிய ஒரே நிறுவனம்

மிலேனியம் றெஷ்ரோறன்ற்

தயாரிப்பு வகைகள்:

* (F) பிறைற் றைஸ் வகைகள்
* நூடில்ஸ் வகைகள்
* சூப் வகைகள்

மற்றும் உங்கள் விருப்பத்துக்குரிய உணவு வகைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

சி. சுகுமாரன்,
70, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

* இன்று இரவு முழுநேரமும் திறந்திருக்கும் (74150)

# அதிரடி அரங்கு

அடையாள அட்டை மற்றும் பாஸ்போட் எடுக்கவோ, பாடசாலை அனுமதி பெறவோ - எந்தத் தேவையானாலும் - அதற்குப் பிறப்புச்சான்றிதழ் ஓர் அவசியமான ஆவணமாகக் கணிக்கப்படுகிறது.

அவசரத் தேவைகளுக்காக பிறப்பு, இறப்பு, விவாகச்சான்றிதழ்களைப் பெறுவதற்கு யாழ். செயலகத்துக்கு வருபவர்களை சுரண்டும் கூட்டம் ஒன்று அங்கு தயாராக காத்து நிற்பதாக முறைப்பாடு.

செயலக வாசலிலேயே 'தவம்' கிடக்கும் அந்தக்கூட்டம் அங்கு அவசரமாக வரும் பொதுமக்களை மறித்து, சான்றிதழ் அவசரமாகப் பெற்றுத் தருவதாகக்கூறி, சுளையாகக் கறக்கும் பணியை கச்சிதமாகச் செய்து கொண்டிருக்கிறது.

செயலகத்தில் பதிவாளர் பிரிவு இயங்குகிறது. சான்றிதழ்கள் தேவையென விண்ணப்பித்தால் ஓரிரு தினங்களில் அவை தபாலில் வீடு வந்து சேர்கின்றன. ஒன்றுக்கு இரண்டு "போட்டோஸ்ரட்" இயந்திரம் அங்கு உள்ளது. கிடைக்கும் விண்ணப்பங்களை உடனுக்குடன் ஆராய்ந்து உடன் சான்றிதழ்களை வழங்க அந்தப்பிரிவு தயாராக இருக்கின்றது.

இந்நிலையில் அவசர தேவைக்கு வருபவர்களிடம் பணம் கறக்கும் கும்பல் ஒன்று செயலக வாசலில் தமது கைவரிசையைக் காட்டுவதற்கு அனுமதிக்கலாமா?.

குடாநாட்டில் சிவில் நிர்வாகம் வந்துவிட்டது என்றால் கூடவே இத்தகைய குளறுபடிகளும் சேர்ந்து வருகின்றனவே.

சம்பந்தப்பட்டோர் கவனம் செலுத்தி இத்தகைய கும்பலைச் செயலகப் பகுதியில் இருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கலாமே?

* * * *

1996ஆம் ஆண்டில் இங்கு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் மற்றும் இராணுவத்தினரின் நடவடிக்கைகளினால் பல நூற்றுக்கணக்கான அப்பாவிகள் காணாமல்போனது பழைய சங்கதி. அவர்களின் பெரும் எண்ணிக்கையானோர் குடும்பஸ்தர்கள். அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள்.

அப்படிக் காணாமல்போன அரச ஊழியர்களுக்கு உரிய மாத வேதனத்தை யாழ். செயலகம் மற்றும் பல அரச திணைக்களங்கள் சம்பந்தப்பட்டவரின் குடும்பத்துக்கும் தவறாமல் வழங்கி வருவதையும்-

ஆனால் யாழ். மாநகரசபையில் இது விடயத்தில் குழப்பநிலை இருப்பதையும் -

பல தடவைகள் இப்பத்தியில் சுட்டிக்காட்டியாகிவிட்டது.

இவ்வாறு காணாமற்போன மாநகரசபை ஊழியர்களில் ஒரு சிலருக்குரிய வேதனம் அவர்களின் குடும்பத்தவருக்கு கொடுக்கப்படுகின்றது. மற்றும் சிலருக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை. மாநகரசபை நிர்வாகத்திடம் அலைந்து திரிந்து கேட்டால் பதில் கைவிரிப்புத்தான்.

"இது விடயத்தில் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைப்புத்தான் முடிவு செய்யவேண்டும். நாம் அல்ல" - என்று மாநகரசபை நிர்வாகத்தின் சார்பில் ஒரு வரியில் பதில் கிடைக்கின்றது.

"ஆவணங்கள் திருப்தியாக இல்லை. அதனால் வேதனம் தர முடியாது" - என்று ஒரு வரியில் பதில் வருகின்றதாம் மாகாண உள்ளூராட்சி அதிகாரிகளிடமிருந்து.

அங்கு ஆளுக்கு ஆள் வெவ்வேறு அளவுகோல் வைத்திருக்கின்றார்களோ என்று சந்தேகம்.

குடும்பத்தலைவன் காணாமற்போய் நிர்க்கதியாய் - பட்டினிச்சாவை எதிர்நோக்கி - இருக்கின்ற குடும்பத்தவர்களுக்கு அந்தத் தலைவனின் மாதாந்த வேதனத்தைப் பெற்றுக்கொடுப்பதில் ஏனைய அரச திணைக்களங்களுக்கும் உள்ளூராட்சி திணைக்களங்களுக்கும் வெவ்வேறு சட்டங்கள், விதிகள் உள்ளனவா? உள்ளூராட்சி திணைக்கள ஊழியர்கள் விடயத்திலும் ஆளுக்கு ஆள் சட்டம், விதிகள் மாறுபடுகின்றனவா? - திருகோணமலையில் நிர்வாகம் நடத்துவோர் பதில் தந்தால் இங்கு அலைப்படும் குடும்பங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

– மின்னல்.

# இன்றைய சிவராத்திரி வழிபாட்டை சமாதானத்துக்கு அர்ப்பணிப்போம்

## இந்து மாமன்றம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச்4

அமைதிக்கான சூழ்நிலைகள் தென்படும் இச்சமயத்தில் இன்றைய புத்தாயிரமாம் ஆண்டின் முதல் சிவராத்திரியை சமாதானத்துக்கான வழிபாடுகளுடன் அனுஷ்டிப்போம்.

அகில இலங்கை இந்துமாமன்றம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இருபத்தோராம் நூற்றாண்டின் முதலாவது மகா சிவராத்திரிதினம், அகில இலங்கை இந்து மாமன்றம் எடுத்த முயற்சியினால் மீண்டும் பொது விடுமுறையாக்கப்பட்டு, இந்து மக்கள் யாவரும் சிறப்பாக வழிபாடு செய்ய அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானின் அனுக்கிரகம் எமக்குக் கிடைத்துள்ளது. இவ்வழிபாட்டுத் தினம் வேறொரு வகையிலும் முக்கியதினமாக அமைந்துள்ளது. அதாவது இந்த நாட்டில் இருதசாப்த காலமாக நடந்து வரும் போரை சுமுகமான வகையில் தீர்ப்பதற்கான அனுகூலமான சூழ்நிலை அதாவது உலக நாடுகளின் தலையீட்டினால் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளுக்கு ஆயத்தங்கள் தென்படும் வேளையில் சாந்தியையும், சமாதானத்தையும் வேண்டி நிற்கும் மக்களுக்கு சிவவழிபாடு மூலம் அதனைப் பெறமுடியும் என்ற எண்ணத்துடன் வாழும் மக்களுக்கு, இது மேலும் முக்கிய தினமாக அமைந்துள்ளது. 'அன்பேசிவம்', 'இன்பமே சூழ்க', 'எல்லோரும் வாழ்க' என்ற கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட தத்துவத்தில் கட்டியெழுப்பப்பட்டதே இந்து மதமும், இந்துமதக் கலாசாரமுமாகும். அன்பு, கருணை, அமைதி, அருளே உருவான சிவபெருமானை வழிபடுவதனால் இவையாவும் எமது வாழ்வில் அமைவதற்கு இந்த மகா சிவராத்திரி தினம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி வருவான், தோடுடைய செவியனாக விடையேறி வருவான் அவன்-சிவன். எனவே இந்தப் புனித தினத்தில் சாந்தரூபமான இடபக் கொடிக்கு முதல் வணக்கம் செலுத்தி, அவனது ஆசியைப்பெற்று எல்லாம் வல்ல இறைவனாகிய சிவபெருமானைத் தொழுது, இந்த நாட்டில் மீண்டும் சாந்தி, சமாதானம் ஏற்பட இந்த மகாசிவராத்திரி வழிபாட்டை வேத பாராயணம், திருமுறைப்பாராயணம், ஸ்ரீபஞ்சாட்சர உச்சாடனம் கூடிய சிவவழிபாட்டுடன் அர்ப்பணிப்போமாக - என்றுள்ளது. (ஐ)

## பாடசாலை....

(4 ஆம்பக்கத் தொடர்ச்சி)

ஏனைய பாடசாலைகள் போல் சுதந்திரமாக இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்தோடு ஆண்டு 6 தொடக்கம் உயர்தரவகுப்பு வரையுள்ள எமது பாடசாலையில் 400க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். படைமுகாமாக இருந்தமையினால் விஞ்ஞானகூடத் தளபாடங்கள், கருவிகள் மற்றும் நவீன கற்பித்தல் உபகரணங்களான வானொலி, தொலைக்காட்சி, கணணிகள் போன்ற வசதிகள் எதுவும் கிடைக்கப்பெறவும் இல்லை. எனவே இத்தகைய குறைபாடுகளை நீக்கி எமது பகுதிக் கிராம ஏழை மாணவர்கள் உயர்கல்வி பெற ஆவனசெய்ய வேண்டும் இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-167)

# உலக அறிஞர் அகராதியில் யாழ்:பேராசிரியர் பெயர்



இங்கிலாந்தில் கேம்பிரிஜ்ஜில் உள்ள அகில உலக அறிஞர் வாழ்க்கை வரலாற்று நடுமையம் இந்த ஆண்டு இறுதியில் வெளியிட உள்ள 'இருபதாம் நூற்றாண்டில் புகழ்பெற்ற 2000 அறிஞர்கள்' என்னும் நூலில் யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் பேராசிரியராகப் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்றுள்ள பேராசிரியர் சுவாமிநாதன் சுசீந்திரராசாவின் பெயரும் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் சுசீந்திரராசா தமிழ் நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் ஈழத்தில் கொழும்பு, களனி, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களிலும் நீண்ட காலம் பணிபுரிந்து, ஓராண்டு எடின்பரோ பல்கலைக்கழகத்தில் உயராய்வு செய்து, உலகளாவிய நிலையில் மொழியியல் அறிஞர்களின் தொடர்பையும் மதிப்பையும் பெற்றவர் ஆவார். குறிப்பாக அமெரிகாவில் உள்ளகோனெல் பல்கலைக்கழகத்து மொழியியல் பேராசிரியர் ஜேம்ஸ் கெயர், கொல்கேற் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் ஜோன் றொஸ் காட்டர், எடின்பரோ பல்கலைக்கழகத்து மொழியியல் பேராசிரியர் ஆர்.இ.ஆஷர், ரஷ்ய நாட்டு மொழியியல் பேராசிரியர் அந்திரநோவ், தமிழ்நாட்டுப் பேராசிரியர்கள் தெ.பொ. மீனாட்சி சுந்தரன், மு.வரதராசன் போன்றோரின் பெரும் மதிப்பைப் பெற்றவர். பேராசிரியர் சுசீந்திரராசா பல ஆய்வு நூல்களையும் கட்டுரைகளையும் தனித்தும் புகழ்வாய்ந்த அறிஞர் சிலருடன் இணைந்தும் ஆக்கியுள்ளார்.

பேராசிரியர் சுசீந்திராசாவின் பெயர் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இதுவரை வெளிவந்துள்ள வாழ்க்கை வரலாற்று அகராதிகள் சிலவற்றிலும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

## துன்பம் நீக்கிடுவார்!

இராகம்: மோகனம் தாளம்: ஆதி (திஸ்ரம்)

பல்லவி

சித்தம் மகிழ்ந்திட வைத்திடுமே வண்ணை
வைத்தீஸ்வரர் தலமே... என்றும்

அனுபல்லவி

எத்திக்கும் போற்றத் திகழும் தலமிதைப்
பக்தியுடன் தொழுவார்க்கு அச்சமில்லை
(சித்தம்)

சரணம்

தையல் நாயகியாம் அன்னையும் இணைந்து
துன்பம் நீக்கி இன்பம் தந்திடுவார்
வையத்திலே உயர் புஸ்ப கரணியாம்
தீர்த்தமும் கொண்டே திகழும் தலம்!
(சித்தம்)

- மீசாலையூர் ஏ.கே. ஏரம்பமூர்த்தி

# திருக்கேதீஸ்வரம் ஆலயச் சூழலை யுத்த சூனியப் பிரதேசமாக்குக!

## மக்கள் ஜனநாயக பேரவை கோரிக்கை

வரலாற்றுச்சிறப்புமிக்க திருக்கேதீஸ்வர ஆலயச்சுற்றாடல் பிரதேசத்தை யுத்த சூனியப் பிரதேசமாகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று மக்கள் ஜனநாயகப் பேரவை கோரியுள்ளது.

அந்தப் பேரவையின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நா.இ.இராமேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருக்கேதீஸ்வர ஆலயச்சூழலை யுத்தசூனியப் பிரதேசமாக பிரகடனப்படுத்தி இரண்டு மைல் சுற்றாடலுக்கு, எவரும் ஆயுதங்களுடன் நடமாடுவதை நிறுத்தி ஆலயத்தின் புனிதத்தன்மையை பேணுவதற்கேதுவாக, ஆலயச் சூழலில் தற்போது தங்கியுள்ள இராணுவத்தினரை வெளியேறுமாறு கோரி நடராசா (தில்லைக்கூத்தன்) மேற்கொள்ள இருக்கும் உண்ணாவிரதத்திற்கு மக்கள் ஜனநாயகப் பேரவை தனது ஆதரவை தெரிவித்துக்கொள்கின்றது.

இப்புனித போராட்டத்துக்கு அனைத்து மத அமைப்புக்களும் கட்சிகளும் ஒத்துழைப்பதோடாகவும் தம்மால் முடிந்தவகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதனூடாக திருக்கேதீஸ்வர ஆலயதின் புனிதத் தன்மையை பேணுவதற்கு வழி அமைப்போமாக - என்றுள்ளது. (ஐ-3)


# கணித ஆசான் வெக்டர் வேலாயுதம் அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி



32 ஆண்டு கால சேவையில் எமது நிறுவனத்தில் கல்விமான்களை உருவாக்கியுள்ளார்.

உறக்கமின்றி மாணவர்களின் உயரறிவுப் பசிபோக்க
உயிரிருக்கும் வரை பறந்து உளமாரப் பணி செய்தீர்
உறக்கத்தில் மீளாத உறக்கமே ஏற்றீர்கள்
ஊனோடு உயிர் கலங்கி ஓலமிட்டு நிற்கின்றோம்.

சயன்ஸ் சென்ரர், நெல்லியடி, கரவெட்டி.

மொடோன் எடியுக்கேசன் சென்ரர், நெல்லியடி, பருத்தித்துறை.

(C/11310)

# திருமலை தற்கொலை குண்டுதாரி மாகாண சபை பெண் ஊழியராம்!

திருகோணமலை,மார்ச்4

திருகோணமலை உள்துறைமுக வீதியில் நேற்றுமுன்தினம் தற் கொலைக் 'குண்டுத்தாக்குதலை மேற்கொண்டவர் வடக்கு - கிழக்கு மாகாண சபையில் பணிபுரியும் சத் தியவாணி எனத் தெரியவந்துள்ள தாக பொலீஸார் தகவல் வெளி யிட்டுள்ளனர்.

திருகோணமலையில் கடந்த ஆறுவருடங்களாக வசித்துவரும் சத்தியவாணி(வயது 29)என்ற இந்தப்பெண் கூட்டுறவு ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரிந்து வந்தார்.

அங்கு பணிபுரியும் சக பெண் ஊழியருடன் இவர் பிரச்சினைப்பட் டதை அடுத்து மாகாணக் கூட்டுறவு அமைச்சுக்கு அவர் மாற்றப்பட்டிருந் தார்.

இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து அவர் விடுமுறையில் இருந் துள்ளார் என்று பொலீஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இவர் தங்கியிருந்த மருத்துவ மனை சிற்றூழியர் விடுதியைப் படையினர் சோதனை செய்தனர் என்றும் -

அச்சமயம் ஓர் ஆணுடன் இருக் கும் இவரின் படம் மீட்கப்பட்டுள் ளது என்றும் - பொலீஸ் வட்டாரங் கள் மேலும் தெரிவித்தன.

இதையடுத்து பிரஸ்தாப நபர் கைது செய்யப்பட்டு பொலீஸாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

## படை வாபஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் இன்னமும் எடுக்கப்படவில்லை. பாதுகாப்பு நிலைவரங்களை கவ னத்தில் எடுத்து, இது குறித்து ஓரிரு வாரங்களில் பரிசீலனை செய்வதா கவே இப்போது தெரிவிக்கப்பட்டுள் ளது. அப்படிப் பரிசீலிக்கப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்படும் போது படை வாபஸ் ஆக வாய்ப்பு ஏற்படலாம்." - என்றும் அந்த அதிகாரி சஞ்சீ விக்குத் தெரிவித்தார். (உ)

## கேதீஸ்வர......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் படையினர் முழுமையாக வாபஸ் பெறப்படுவர் என்று அவர் தகவல் தந்துள்ளார் என்றும் -

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-3)

## படையினர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளம் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தப்போவதாக படைத்தரப்புக்கு அநாமதேயத் தகவல் ஒன்று கிடைத் ததாகவும் -

அதனை தொடர்ந்தே தொட ரணிச் சேவை திடீரென நிறுத் தப் பட்டதாகவும் - கூறப்படுகின்றது.

ஆனால் மட்டக்களப்பு மாவ ட்டத்தில் தொடரும் மழைகாரணமா கவே தொடரணிச்சேவை இடம்பெற வில்லை எனப் படைத்தரப்பில் அறி விக்கப்பட்டுள்ளது. (உ-7)

## சமாதான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும் அறிவிப்பை பௌத்த மதபீடங்கள் கூட்டாக வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இலங்கையின் ஆட்சி முறையை மாற்றி அமைக்கும் அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருதல், இனப்பிரச்சினை விவகாரத்தில் நோர்வே போன்ற மூன்றாம் நாட்டின் தலையீட்டை அனுமதித்தல், சட்டரீ தியாக தடை செய்யப்பட்டுள்ள புலி கள் இயக்கத்துடன் பேச்சு நடத்து தல் போன்ற அம்சங்களை எதிர்ப் பதில் பௌத்த மதபீடம் ஐக்கியப்பட் டிருப்பதாக அந்த மதபீடங்களில் செல்வாக்குப் பெற்ற தலைவர்கள் சிலரை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளி யிட்டன. (உ)

## இராணுவ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் நீதிவானிடம் விண்ணப்பம் ஒன் றைச் சமர்ப்பித்தனர்.

பிரஸ்தாப சிப்பாய் தொடர்பாக 52ஆவது படையணித் தளபதி விசாரணை மேற்கொண்டுள்ளார் என்றும் -

இருவாரங்களில் இது தொடர் பான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் -

அந்த விண்ணப்பத்தில் தெரி விக்கப்பட்டிருந்தது.

"இதுபோன்ற சம்பவங்கள் அனு மதிக்க முடியாதவை. சம்பந் தப் பட்டவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே இரு வாரத்தில் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண் டும்" என்று தெரிவித்த நீதிவான் வழக்கை ஒத்திவைத்தார். (உ-3)

## பல்வேறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் மன்னார் பகுதி யில் இடம்பெற்ற எதிர்பாராத மோத லின் போது எல்லைப்படைவீரர்க ளான ராஜா(சிறீரங்கன் ராஜா - ஓமந்தை), அழகன்(நடராஜன் அகிலன்-கிளிநொச்சி)ஆகியோரும் -

கடந்த 26ஆம் திகதி மன்னார் பகுதியில் இடம்பெற்ற தவறுத லான வெடிவிபத்தின் போது பகீர தன்(செல்வராசா பத்மநாதன்- மட்டக் களப்பு) என்பவரும் -

கடந்த முதலாம் திகதி முல் லைத்தீவு பகுதியில் இடம் பெற்ற தவறுதலான 'வெடிவிபத்தில் லெப்டி னன்ட் ரஞ்சிதன்(கதிர்காமநாதன் திருமோகன்-யாழ்ப்பாணம்) என்ப வரும் -

உயிரிழந்துள்ளதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

## வலைப்பந்தாட்ட செய்முறை பரீட்சை நாளை மட்டுமே!

யாழ்ப்பாணம்,மார்ச்4

யாழ். துரையப்பா விளையாட் டரங்கில் இன்று நடைபெறவிருந்த வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக் கான செய்முறைப்பரீட்சை நாளைக் காலை 9 மணிக்கு மேற்குறிப்பிட்ட இடத்தில் ஆரம்பமாகும் என்று யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ் தர் சங்கத் தலைவரும் மாவட்ட விளையாட்டு அதிகாரியுமான திரு மதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் தெரிவித் துள்ளார்.

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்துடன் இணைந்து - யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங் கம் இன்றும் நாளையும் இந்த செய் முறைப் பரீட்சையை நடத்துவ தற்கு ஏற்பாடுகள் செய்திருந்தது.

எனினும் மகாசிவராத்திரி தினத்தை ஒட்டி இன்றைய நிகழ்ச் சிகளை ரத்து செய்து பரீட்சையை நாளை மட்டுமே நடத்தத் தீர்மானிக் கப்பட்டுள்ளது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (உ-5)

## சிவராத்திரி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் நகரில் இருந்து இன்று பிற்பகல் திருக்கேதீஸ்வரத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

பக்தர்களை அழைத்துச் செல் வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய் வதற்காக மன்னார் செயலகத்தில் நேற்று மாநாடு ஒன்று இடம்பெற்றது.

## திட்டமிட்ட......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டடத்துக்கு முன்பாக இந்த உண் ணாவிரதத்தை ஆரம்பிக்கத் தான் திட்டமிட்டதாகவும் -

ஆனால் பலரின் கோரிக் கையை அடுத்து பம்பலப்பிட்டி கதி ரேசன் ஆலயத்துக்கு முன்பாக இந் தப் போராட்டத்தை நடத்தத் தாம் தற்போது முடிவு செய்துள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட அவரை அங்குள்ள இந்து அமைப் புக்களின் பிரதிநிதிகள் இந்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு கோரி னர் என்றும் -

நாளை போராட்டத்தை ஆரம் பித்து பின்னர் நிலைமை குறித்து ஆராயலாம் என அவர் பதிலளித் தார் என்றும்-தெரியவந்தது.

## கொழும்பு செல்லும் அதிபர்களுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்4

எதிர்வரும் 11ஆம் திகதி கொழும்பில் நடைபெறும்-அதிபர் கள் பதவி உயர்வுக்கான - நேர் முகப்பரீட்சையில் கலந்து கொள்வ தற்குச் செல்பவர்களின் பயண ஏற் பாடுகள் குறித்து ஆராய்வதற்காக் இன்று காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் கலந்துரை யாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

அதில் கலந்துகொள்ளுமாறு சம்பந்தப்பட்டோரை யாழ்.மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலா நிதி நா.தணிகாசலம்பிள்ளை கேட் டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு தோற் றுபவர்களுக்கு விசேட விமான சேவை ஒன்றை நடத்த யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரி வித்தார். (உ-3)

## தேடுதல்

திருகோணமலை நகரப்பகுதி நேற்றுக்காலை முதல் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தீவிரதேடு தலுக்கு உட்படுத்தப்பட்டது. (உ-7)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகம்மா கந்தையனார்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா கந்தையனார் நேற்று (03.03.2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையனாரின் அன்பு மனைவியும் நவ ரத்தினம் (கணக்காளர், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு), திருமதி நா.சரவணபவன் (கன்னியாமடம் மகாவித்தியாலயம், யாழ்ப் பாணம்), சந்திரன் (ஜேர்மனி), கனகாம்பிகை (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீரங்கமல்லிகா, சரவணபவன் (கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்), லோகேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற கருணாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயகஜன், நிருசியா, சௌமினி, கௌமாறன், வினோதன், வினோதிகா, காலஞ்சென்ற தினேஸ், அனுஷியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2000) சனிக்கிழமை பகல் 12.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நி.சரவணபவன்
(மருமகன்)

57/1, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.

(74192)

## திருமதி தனலட்சுமி இரத்தினசிங்கம்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, 77, மானிப்பாய் வீதியை வசிப்பிடமா கக் கொண்ட திருமதி தனலட்சுமி இரத்தினசிங்கம் நேற்று (03.03.2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் செல்வி சுபோதினியின் (எழுதுநர், சுகாதார சேவை மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்) அன்புத் தாயாரும் சி.கந் தப்பிள்ளை (வைத்தீஸ்வராக் கல்லூரி, ஓய்வுபெற்ற உப அதிபர்), காலம் சென்ற திருமதி ஜெயலட்சுமி குலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, கொழும்பு), திருமதி சரஸ்வதி பிறைசூடி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2000) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

77,மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(74195)

தகவல்
சுபோதினி (மகள்)

## கந்தர் சுப்பிரமணியம் ஆச்சிப்பிள்ளை

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தர் சுப்பிர மணியம் ஆச்சிப்பிள்ளை நேற்று (03.03.2000) வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் கந்தர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் கனகம்மா (கனடா), கமலாதேவி, சோதிமணி, இரத்தினசிங்கம், லங்காதேவி ஆகி யோரின் அன்புத் தாயாரும் மார்க்கண்டு விவேகானந்தன் (சின்னக்கிளி), கோபாலசிங்கம், தர்மகுலசிங்கம், ஆகியோரின் மாமியாரும் கண்ணதாசன், கெங்காதரன், அன்பழகன், கலியுகவரதன், மதியழகன், தர்மசீலன், தயா ளன், கேசவன், மீனா, தயாளினி, தர்மநந்தினி, தருஷா, மதியரசி, புவி யரசி, அன்பரசி, குகவரதன், கணேசன், ரகு ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2000) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயா னத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(74194)

தகவல்
விவேகானந்தன் கமலாதேவி

## சின்னையா சிவகுரு

கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் 1010/11 தலையாழி வீதி, நாச்சிமார் கோவிலடியை தற்காலிக வசிப்பி டமாகவும் கொண்ட சின்னையா சிவகுரு நேற்று (03.03.2000) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்பிள்ளையின் அன்புக் கணவரும் விமலாதேவி, சாந்தகுணதேவி ஆகியோரின் அருமைத் தகப்பனாரும் காலஞ்சென்ற குருநாதபிள்ளை, தர்மராசா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இரத்தினம், நல்லதம்பி, காலஞ்சென்ற செல்லம்மா இரா சையா, பொன்னுத்துரை (சீமெந்துகூட்டுத்தாபனம்) ஆகியோரின் சகோதர னும் சக்திக்குமார்(கனடா), காலஞ்சென்ற உதயகுமார், ஜெயக்குமார் (கனடா), திலீபன், திலீபா, ரேணுசாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2000) சனிக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு (புதிய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1010/11, தலையாழி வீதி,
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(74197)

தகவல்
வ.தர்மராசா
(மருமகன்)


உதயதாரகை சனசமூகநிலையத்தினர்
மானிப்பாய் வீதி, கோணாந்தோட்டம், யாழ்ப்பாணத்தில்
நடத்தும்

மகாசிவராத்திரி விழா

இடம்:- நிலைய முன்றல்
காலம்:- இன்று (04-03-2000) சனிக்கிழமை
தலைவர்:- திரு.நா.சுந்தரராஜா (தலைவர், உ.ச.ச.நி)
பிரதம விருந்தினர்:-
திரு.பா.செந்தில்நந்தனன் (பிரதேச செயலர் யாழ்.)
சிறப்பு விருந்தினர்:-
கந்தப்ப செட்டியார் வைத்திலிங்க செட்டியார்
(தர்மகர்த்தா, யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம்)

நிகழ்ச்சி நிரல்
சமயப் பேருரை:- திரு.செ. திருநாவுக்கரசு (விரிவுரையாளர்)
மங்கள வாத்தியம்:- முருகானந்தம் குழுவினர் (கோண்டாவில்)

பட்டிமன்றம்
'பாரதி கண்ட புதுமைப்பெண் சமுதாயத்தில் தோன்றிவிட்டாளா? தோன்றவில்லையா?'
நடுவர்:- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல்
இராகம்ஸ் இசைக்குழுவினரின் இதயராகங்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

உதயதாரகை சனசமூக நிலையம்

விளம்பர அன்பளிப்பு: நாதன் சைவ உணவகம்
வைத்தீஸ்வரா சந்தி, 87, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (74196)



நாளை ஆரம்பம்
விக்னா
கல்வி நிறுவனம்
A/L 2002
கணக்கீடு
திரு.பாலவாசன்
முதன்மைப் பதிவேடு
Sat, Sun-7-8
(74167)



INSTITUTE OF INFORMATION STUDIES

விரிவுரைகள் ஆரம்பம்

கல்வியாண்டு 99/2000 - 4DCP பிரிவுக்கான 2ஆம் பருவகாலத்திற்குரிய விரிவுரை கள், 04.03.2000 சனிக் கிழமை 12.00 மணி முதல் ஆரம்பமாகும் என்பதை மாண வருக்கு அறியத்தருகின்றோம்.

- இயக்குநர்

(C/11292)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.






## கருத்துக் கலசம்

மயூரா

### நேர்மைப்பயிற்சி

**நேர்மையாக வாழ்பவர்களின் தூய ஆற்றல் வாழ்க்கையின் தடைகள் அனைத்தையும் நிச்சயம் வென்று விடும்**

**- ஜேம்ஸ் ஆலன் -**

மனித வாழ்க்கை என்பது சோதனைகள், தடைகள், தோல்விகள், துன்பங்கள் நிறைந்ததே. இவற்றை எதிர்கொண்டு வென்றாலே வாழ்க்கையில் வெற்றியும் அதன்மூலம் வளமும் மகிழ்வும் அடையலாம்.

ஒரு நாளில் பகலும் இரவும் வருகின்றன. பகல் ஒளி நிறைந்தது; இரவோ இருள் சூழ்ந்தது. அதே போன்று மனித வாழ்க்கையும் இன்பமும் துன்பமும் கலந்தது. ஒருவன் எப்போதும் இன்பமாகவும் சிறப்புற்றும் வெற்றி பெற்றும் வாழ இயலாது. வாழ்க்கையே சலித்துப் போகும் அளவுக்கு சோதனைகளுடனும் வேதனைகளுடனும் நாள்களை நகர்த்தும் ஒரு காலமும் வரும்.

'குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடை மெலிந்து நண்ணினும் நண்ணுவர்' என்ற வரிகள் மனித வாழ்க்கையின் தன்மை எத்தகையது என்பதனை எளிதாக விளக்குகின்றது.

ஒருவன் தனது வாழ்க்கையை வளமாகவும் வசதியாகவும் அமைத்துக் கொள்வதற்கு முயற்சியும், கடின உழைப்பும், திறமையும், தளராமனமும் உடையவனாக இருப்பது இன்றியமையாதது. இந்த நான்கும் சேர்ந்தே அவனது ஆற்றல் உருவாகிறது.

ஒருவனிடம் ஆற்றல் இருப்பதால் அவன் சோதனைகளையோ, தடைகளையோ, எதிர்கொள்ள நேராது என்பதல்ல. அவற்றைத் தாண்டி வாழ்க்கையில் தனது இலக்கை எய்துவதற்கு அவனுக்குச் சமயோசித புத்தியும், விவேகமும், தோல்வியை வெற்றியாக்கலாம் என்ற மன உறுதியும் தேவை. இவை எல்லாவற்றையும் விட வாழ்க்கையில் நேர்மையைக் கடைப்பிடிப்பவனுக்கு தடைகளைத் தாண்டுவது சுலபம்; வெற்றி பெறுவது இலகு என்கிறார் ஜேம்ஸ் ஆலன்.

நேர்மையாக வாழ்பவனுக்கு அவனை அறியாமலே ஏனையோரை விட தூய ஆற்றல் பிறக்கின்றது. அந்தத்தூய ஆற்றல் ஒரு வகையில் மனஉறுதியே. மனம் போல வாழ்வு என்றனர் எமது முந்தையர். நம்பிக்கை வாழ்க்கையின் வெற்றிக்கு இட்டுச்செல்லும். பெரிய நம்பிக்கைகளால் பெரிய மனிதர்கள் உருவாகுவார்கள் என்பது பிரிட்டிஷ் பழமொழி.

ஆகையால் மனிதர்கள் தாம் நலமாகவும், வளமாகவும் வாழ விழையின் நேர்மை கொண்டு ஒழுகுவோராகப் பழகிக்கொள்ள வேண்டும். பிரார்த்தனைகள் மனிதனிடம் ஒரு தூய ஆற்றலை உண்டாக்கும் என்பது ஆன்ம ஞானிகளின் வாக்கு. அதே போல, நேர்மையும் சிறப்பாற்றல் விளைவிக்க வல்லது.

நேர்மை மனித நீதிகளில் ஒன்றெனலாம். இது மனிதனுடைய மன இயல்புடன் சம்பந்தமுள்ளது. மன உண்மை ஒருவனை நேர்மை உள்ளவனாக்குகிறது.

நேர்மையை நல்லவர்கள் சான்றோர்களிடமிருந்து 'கற்றுக்கொள்ளலாம். ஆனால் பயிற்சி செய்ய வேண்டியவர்கள் நாமே.

நேர்மை அவரவர் வளத்துக்கும், நலத்துக்கும், உயர்வுக்கும், பெருமைக்கும் என்றென்றும் அடித்தளமாகும்.

# தாய்க்குலத்தின் மறுபக்கம்

**சர்வதேச மகளிர் தினம் எதிர்வரும் புதன்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 'பெண்ணடிமை தீர...' என்ற தனது நூலுக்கு செ.கணேசலிங்கன் வரைந்த முன்னுரையின் முக்கிய பகுதிகள் மகளிர் தினத்தையொட்டி இங்கு பிரசுரமாகின்றது.**

பெண்ணடிமை நிலை மிகவும் பயங்கரமானது; கொடுமையானது; குரூரமானது. வரலாற்று ரீதியாக ஆராயும்போதே இவ்வுண்மை தெரிய வருகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் விடுதலையோடு ஒப்பிடும்போது பெண்ணினத்தின் விடுதலை மிகவும் சிக்கலானதாகவும் பாட்டாளியின் விடுதலை எளிதாகவும் தோன்றுகிறது. பாட்டாளியின் விடுதலை பற்றி அறிஞர்கள் காட்டிய ஆர்வமும் சிரத்தையும் பெண் விடுதலை பற்றி எடுக்கப்படவில்லை என்றே கூற வேண்டும். பாட்டாளி என்பதையும் ஆண்வர்க்கமாகவே அறிஞர் பலரும் எண்ணினர் எனவும் தோன்றுகிறது.

பாட்டாளி வர்க்க விடுதலையோடு பெண்ணும் விடுதலை பெற்று விடுவாள் என்றும் அறிஞர்கள் எண்ணியிருக்கலாம். ஆனால் சோஷலிசப் புரட்சி நடந்து கொண்டிருப்பதாகக் கூறும் நாடுகளிலும் பெண் பூரண விடுதலை பெற்றுவிட்டதாகக் கூறுவதற்கில்லை. ஆணினத்தின் ஆதிக்கம் அங்கு இன்னும் நிலவுதையே காண்கிறோம். ஆண்கள் தம் சிந்தனையிலிருந்து தமது உயர்நிலை என்ற பொய்மையான உள்ளுணர்வை எடுத்தெறிய முடியாதவராக உள்ளனர்.

அங்கு குடும்ப வேலைகளை சமூக உற்பத்தியாக்க முடியா நிலையும் பெண்களை பூரண விடுதலை அடைய விடாது தடுக்கிறது. பாதிப் பங்கு அரசியலாதிக்கத்தை அவர்களால் பெற முடியவில்லை. பெண்களும் தம் உயர்வை நிலை நாட்ட முடியாது குடும்பம் என்ற சிறையுள் அங்கும் அடங்கிக்கிடப்பதே விசித்திரமானது; வேதனையாகவும் உள்ளது.

பெண்ணினம் ஆணினத்திலும் தாழ்ந்தவர்கள் என்ற தவறான கருத்தை ஆண்கள் தம் ஆதிக்கத்தால் எல்லோர் சிந்தனையிலும் நிலைநாட்டி விட்டனர். பாட்டாளிகள், தாழ்ந்தவர்கள், கூலி, அடிமைகள் என முதலாளிகள் இன்றுவரை கூறி வரவில்லையா? அதைப்போலவே பெண்ணினம் பற்றியும் ஆணின வெறியர் பரம்பரையாக புகட்டி வந்தனர். பாட்டாளிகளை அடக்கி ஆள அரசு வன்முறை அரசு யந்திரங்களையும் பயன்படுத்தவில்லையா? அதே போலவே பெண்ணினத்தையும் வன்முறையாலும் ஆணாதிக்க அரசு, மதம், குடும்பம், கலை இலக்கியம் போன்ற கருத்தியல்களாலும் ஆணினம் அடக்கி ஆண்டு வந்துள்ளது.

'உலகின் பாதிப் பங்கினரான பெண்கள் ஆண்களிலும் பார்க்க இருபங்கு நேரம் உழைக்கின்றனர். நாள்தோறும் சராசரி 15 மணி நேரத்திற்கு குறையாது உழைத்து உலகின் மூன்றில் இரண்டு பங்கு வேலையைச் செய்கின்றனர். உலகின் பாதி உணவை பெண்களே உற்பத்தி செய்கின்றனர். ஆனால் கிடைப்பதோ உலகின் பத்தில் ஒரு பங்கு வருமானம்; சொத்துடைமையில் நூற்றில் ஒரு பங்கிற்கும் குறைவானது.'

இவ்வாறு உலகப் பெண்கள் நிலை பற்றிய ஐநா.சபையின் 1985ஆம் ஆண்டறிக்கை கூறுகிறது. இத்தகைய சமத்துவமற்ற, அநீதியான, சுரண்டலான சமூகம் நீடிக்கும் வேளை ஆணாதிக்க உலகம் ஜனநாயகம், சுதந்திரம், நாகரீகம் பண்பாடு கலாசாரத்தில் வளர்ந்து வருகிறோம் என்று கூறுவது எத்தனை ஏமாற்று; பொய்மை?

விலங்கடிமைக் காலகட்டத்தில் உரோமாபுரியில் ஒரு பகுதியில் அடிமைகள் உழைக்க, மறுபுறத்தில் எஜமானர்கள் ஜனநாயகம் பேசிக் கொண்டிருந்தார்கள். அதுபோலவே இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

உலகம் பௌதிக விஞ்ஞானத்திலும் புற நிலையிலும் வளர்ந்திருக்கலாம். ஆனால் பண்பாடு, கலாசாரத்தில் இன்னும் உலகம் வளர்ச்சி பெறவில்லை என்பதற்கு பெண்ணினத்தின் இன்றைய நிலையே தக்க எடுத்துக்காட்டாகும்.

பாட்டாளியின் உழைப்பு சுரண்டப்படுவதிலும் மோசமாக, பெண்களின் அடிமை உழைப்பு முதலாளிகளாலும் மற்றும் அனைத்து ஆணின் வர்க்கங்களாலும் அபகரிக்கப்படுகிறது; பாட்டாளிக் கணவன் கூட பெண் உழைப்பை அத்துமீறிச் சுரண்டும் நிலை இன்றும் நிலவுகிறது. இத்தகைய சமூக அமைப்பை முதலாளித்துவம் தன் வர்க்க நலனுக்காக பலாத்கார அரசு அமைப்பு மூலம் பேணி வருகிறது. பெண்களின் அடிமை உழைப்பு அபகரிக்கப்படும் முறையை நன்கு கிரகிக்கும் வரை பெண்ணடிமையின் அடிப்படைக்காரணங்களை நன்கு புரிந்து கொள்ள முடியாது.

பெண் விடுதலை இயக்கங்கள் ஆண்களோடு பெண்களையும் அனைத்திலும் சரிசமமாக நடத்துவதற்கே போராடுகின்றன. ஆயினும் முதலில் பெண்கள் தாம் ஆணினத்திலும் உயர்ந்தவர்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தம் இன்றைய அடிமைநிலையை பெண்கள் அனைவரும் உணரச் செய்யவேண்டும். மூன்று பிரதான அம்சங்களில் பெண்கள் ஆண்களிலும் பார்க்க மிக உயர்ந்த நிலையில் உள்ளனர். அவையாவன:-

1) பெண்களால் மட்டுமே பொருளுற்பத்தியிலும் மனித இன மறு உற்பத்தியிலும் ஈடுபட



முடியும். அதாவது மனித இனத்தின் வாழ்க்கைக்கு வேண்டிய உணவு, உடை, வீடு, பிற நுகர்பண்டங்கள் அனைத்தையும் பெண்களால் உற்பத்தி செய்யமுடியும். இவ்வுற்பத்திக்கு வேண்டிய கருவிகளையும் உற்பத்தி செய்ய இயலும். அத்தோடு, மனித இனத்தையும் உற்பத்தி செய்யப் பெண்களால் மட்டுமே முடியும். இது ஆண்களால் இயலாதது. பெண்கள் மனித இன மறு உற்பத்தியில் ஈடுபட மறுப்பின் மனித இனமே அழிந்து போய்விடும். சுருங்கக்கூறின், ஆண்கள் போல கரத்தாலும் மூளையாலும் மட்டுமல்ல உடலால் மனித இனத்தை உற்பத்தி செய்து, மார்பால் பால் கொடுத்து வளர்க்க வல்லவர்கள் பெண்களே.

2) மாதவிலக்கு, கர்ப்பம் ஆகிய துன்பச் சுமைகளுடன் சமையல், வீடு பார்த்தல், குழந்தைகளை வளர்த்தல் முதலான வேலைப் பளுக்களைச் சுமந்து, ஓய்வு நாளின்றி நாள்தோறும் 15 - 18 மணிநேரம் உழைக்கக்கூடிய வலுவும் திறமையும் கொண்டவள் பெண்ணே. (இக்கட்டான சில வேலைகளைச் செய்யும் ஆண்கள் சமூகத்தின் ஒரு சிறு பகுதியினரே. பெண்களிலும் ஒரு பகுதியினரால் இக்கஷ்டமான தொழில்களில் ஈடுபட முடியும்)

3) பெண்களை ஆண்கள் உற்றுப் பார்க்கும் (Male gaze) உளவியல் ரீதியான - பாலியல் சார்ந்த - பலவீனம் ஆண்களிடம் மட்டுமே உள்ளது. ஆண்களைப் பெண்கள் இவ்வாறு நோக்குவது பரவலாகக் கிடையாது. உளவியல் முறையில் நோக்கும் வேளையும் பெண்ணினமே உயர்ந்த நிலையில் உள்ளது.

ஆண்களே சொத்துடையவர்களாகவும் பெண்கள் அடிமை நிலையிலுள்ள பாட்டாளிகளாகவும் உள்ளனர். ஆண்களுடைய பரம்பரையையும் சொத்துரிமையையும் எடுத்துச் செல்வதற்கான குழந்தைகளைப் பெற்றுத் தருவதற்காக கணவனுடன் மட்டும் பாலுறவு கொள்ளும் கட்டுப்பாடு கொண்டவர்களாக இன்று பெண்கள் ஆக்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் விடுதலை பெற முதலாவதாக, தம் அடிமை நிலையையும் அதன் அடிப்படைக் காரணங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

அடுத்ததாக வரலாற்றுப் பொருள் முதல் வாத ரீதியாக தம் இனத்தின் ஏற்றத்தையும் அதன் வீழ்ச்சியையும் பெண்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

பெண்கள் தம் அடிமை நிலையை உணர்வதோடு ஆண்கள் தம் ஆதிக்க அடக்கு முறைகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

பெண்ணே புராதன சமூகத்தில் ஆதிக்கம் பெற்றவளாக இருந்தாள். எந்த ஆணும் தன் குழந்தை என்று அன்று உரிமை கொண்டாட முடியவில்லை. குழந்தைகள் தாயின் பின்னாலேயே திரிந்தன. உணவுதேடி வளர்க்கும் பொறுப்பு பெண்ணுடையதாகவே இருந்தது. ஆயினும் குழுக்களாக வாழ்ந்ததினால் எவரும் உணவிலேயோ இருப்பிடத்திலேயோ தனியுரிமை பேசவில்லை. பாலுறவில் எவ்வித கட்டுப்பாடும் இருந்ததில்லை. 'சகோதரி மனைவியாவது அன்றைய தர்மம்' என்று மார்க்ஸ் விவரித்தார். இதை காட்டுமிராண்டிக் காலமென மார்க்கன் பிரித்தார். தனிச்சொத்துரிமையும் குடும்பமும் ஏற்படும் வரை பொறாமையும் சுயநலமும் இருக்கவில்லை.

தனிச் சொத்துரிமையைப் பேணுவதற்காகவே தகாத பாலுறவு என்ற சில கட்டுப்பாடுகள், நெருங்கிய இரத்த உறவுகளிடை மட்டும் ஏற்பட்டன. இன்றும் இவை பல்வேறு சமூகங்களில் பல்வேறு முறையாகக் கைக்கொள்ளப்படுகின்றன. எம் நாடுகளில் பெற்றார், உடன் பிறந்தவர், ஆண்வழி தவிர்த்து அக்கா மகள், அத்தை மகளிடை திருமணம் வழமையிலுள்ளது.

புராதன சமூகங்களிடையே நிலவிய பாலுறவு முறைகளை கேலி செய்யும் இன்றைய 'நாகரிகமான' சமூகம் 70 வயதான கிழவன் 16 வயதான பெண்ணை சட்ட முறையாக திருமணம் செய்ய அனுமதிக்கிறது. திருமணம் என்பது பாலுறவுக்கு அனுமதி வழங்குவதாகும்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஏங்கெல்ஸ் 'குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' பற்றிய நூலில் மார்க்கன் என்ற அறிஞர் புராதன சமூகத்து காட்டுமிராண்டி, அநாகரிக, நாகரிக நிலைகளில் நிலவிய சமூக, குடும்ப அமைப்புக்கள் பற்றி சிறப்பாக ஆராய்ந்துள்ளார். அக்காலத்தில் கிடைத்த விவரங்களை முன்வைத்தே அவரது ஆய்வு இருந்தது. இன்றைய மானிடவியலாய்வாளர் பால் வேறுபாடு பார்க்காத சமூகக் கால கட்டம் ஒன்று இருந்தது எனக் கற்கால குகை ஓவியங்கள், பிற ஆதாரங்களை முன்வைத்துக் கூறுகின்றனர். பால்வேறுபாடு எவ்வகையிலும் வாய்ப்பானதாக அங்கு கொள்ளப்படவில்லை. தன்னொத்த பாலினத்தவர் மீதே பாலின விருப்புக்கு எவ்வித கட்டுப்பாடும் இருக்கவில்லை.

உழைப்பு, உணவு, பாலின்பம், விளையாட்டு இயல்பாக மனித குழுக்களிடையே இருந்தன. இக்காலகட்டத்திலிருந்து மார்க்கன் கூறும் காட்டுமிராண்டிக் காலம் முடிந்து அநாகரிககாலம் வரை தாயின் பொறுப்பிலேயே குழந்தைகள் இருந்தன. அநாகரிகக்கால கட்டத்திலே மனித இனம் பயிர்த்தொழிலில் இறங்கி நிலை பெறத் தொடங்கியது. அத்தோடு முன்கூறியபடி வேலைப் பிரிவினை பாலினத்தை ஒட்டி அமைந்து தாய்வழிச் சமுதாயத்தின் வீழ்ச்சி ஆரம்பமானது. 'தாயுரிமை தூக்கி எறியப்பட்டது உலக வரலாற்றில் பெண்ணினத்தின் தோல்வி' என ஏங்கெல்ஸ் வர்ணித்தார். இவ்வீழ்ச்சி 4000 ஆண்டுகளுக்கு மேலாக நீண்டு, முதலாளித்துவ சமூக அமைப்புடன் வேகமடைந்து இன்று உலக அரங்கில் தாய் வழிச் சமுதாயம் அருகி மறைந்து வருகிறது. இன்றைய நிலை ஆணாதிக்கத்தின் உச்சக் கட்டமாகும். ஆயினும் இந்நூற்றாண்டில் ஏற்பட்ட சோஷலிசப் புரட்சிகளும் பெண்களது விடுதலைப் போராட்டங்களும் விஞ்ஞான வளர்ச்சியும் பெண்ணினத்தை மீண்டும் புது உலகிற்கு வழிகாட்டி வருகின்றன.

மனித வரலாற்றில் விவசாய உற்பத்திக்கு அடுத்து கைத்தொழில் உற்பத்தி ஏற்பட்டது. இவ்விரண்டாவது உற்பத்தி ஏற்படுத்திய வேலைப் பிரிவினை தோன்றிய வர்க்க முரண்பாடே முதலாவது வேலைப் பிரிவினையால் ஏற்பட்ட முரண்பாட்டையும் உடைக்க வழிகாட்டியது. முதலாவது முரண்பாடு என்பது என்ன?

வேலைப்பிரிவினை என்பது உற்பத்தி உறவில் ஏற்படும் முரண்பாடு. ஆண், பெண்களிடையே ஏற்பட்ட வேலைப்பிரிவினையே சமுதாய வரலாற்றில் முதன்முதலில் தோன்றிய வர்க்க முரண்பாடாகும். இதைத்தொட்டு உலகில் தோன்றிய முதலடிமை பெண்ணினமே.

வேலைப்பிரிவினையைத் தொடர்ந்து குடும்பம் என்ற அமைப்பு தனிச் சொத்துடைமையுடனும் ஒரு புருஷ மணமுறையுடனும் ஏற்பட்டு பெண்ணடிமைக்கு வித்திட்டது. பாட்டாளிபோல ஒன்றுபட்டுப் போராட முடியாத நிலையில் பெண்

(XV ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு புத்திமதி

ஒரு மன்னர் இருந்தார்.

அவர் ஒருநாள் தன் அமைச்சரை அழைத்துக்கொண்டு காட்டுக்குச் சென்றார்.

அங்கே ஒரு முனிவர்.

அவர் முன்னால் அரசர்போய் நின்று: "சுவாமி.... என்னை ஆசீர்வதியுங்கள். எனக்கு ஏதாவது புத்திமதி சொல்லுங்கள்!" என்று கேட்டுக் கொண்டார்.

முனிவர் அரசனை ஆசீர்வதித்தார். பிறகு கூறினார்:-

"மகனே! நீ எந்தக் காரியத்தைச் செய்தாலும், அதைச் செய்வதற்கு முன்னால் ஒரு தடவை அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நன்றாக யோசித்துப்பார். உன் மனதுக்கு 'அது சரி!' என்று தெரிந்தால் மட்டும் அதை நீ செய்யவேண்டும்!" என்றார்.

அரசர், முனிவர் சொன்னதை அப்படியே மனதில் வாங்கிக் கொண்டார்.

அவர் முனிவர் காலடியில் விழுந்து வணங்கினார்; நூறு பொற்காசுகளை முனிவர் காலடியில் வைத்து விட்டுத் திரும்பினார்.

அரசரின் செயலை அமைச்சர் கவனித்தார்.

அவர், 'என்ன இது! நமது அரசர் இவ்வளவு ஏமாளியாக இருக்கிறாரே..இந்த ஒருசாதாரண யோசனை சொன்னதற்காக மன்னர் முனிவருக்கு நூறு பொற்காசுகளை கொடுத்துவிட்டாரே!' என்ற நினைத்தார்.

அமைச்சர் இப்படி நினைப்பது அவர் முகத்தைப்பார்த்ததுமே அரசருக்குப் புரிந்தது. இருந்தாலும் அதைப் பற்றி அரசர் ஒன்றும் கேட்கவில்லை!

இரண்டுபேரும் அரண்மனைக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

அதற்குப் பிறகு அரசர் என்ன செய்தார் தெரியுமா?

காட்டில் முனிவர் சொன்ன அந்தப் புத்திமதியை ஒரு கல்லில் கல்வெட்டாகச் செதுக்கினார். அதைத் தன் அறையில் எல்லோருடைய கண்ணிலும்படும் வகையில் பதித்து வைத்தார்.

இப்போதும் அரசரின் செயலைக் கவனித்த அமைச்சர், 'என்ன இது?.. நம் மன்னரின் அறியாமையைப் புரிந்து கொள்ளமுடியவில்லையே! இதைப்போய் கல்லில் செதுக்கி வைக்க வேண்டுமா?' என்று நினைத்துக் கொண்டார்.

சில நாட்கள் கடந்தன.

ஒரு நாள் அந்த மன்னருக்குக் கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது.

உடனே அவர் அரண்மனை வைத்தியரைக் கூப்பிட்டார்.

வைத்தியர் வந்து சேர்ந்தார்.

அவர் மன்னரைச் சோதித்துப் பார்த்துவிட்டு, "சிறிது நேரம் இப்படியே படுத்திருங்கள்... நான் எங்கள் வீட்டுக்குப் போய் இந்த நோய் நீங்குவதற்குரிய ஒரு மருந்தைத் தயார் செய்து கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு விரைந்து சென்றார்.

வைத்தியர் வீட்டிலிருந்து மருந்து எடுத்துக் கொண்டு வந்த சமயத்தில் மன்னர் ஒரு கட்டிலில் கண்மூடிப் படுத்திருந்தார். அருகில் அப்போது யாரும் இல்லை.

வைத்தியர் வந்தார்... ஒரு சிறிய கோப்பையில் கொஞ்சம் மருந்தை ஊற்றினார். சுற்றும் முற்றும் பார்த்தார். ஏதோ ஒரு பொடியை மருந்தில் கலந்தார்...கலந்து எடுத்துக் கொண்டு மன்னரை நெருங்கினார். கொஞ்சம் யோசித்தார். பிறகு திரும்பிப் போனார். கையிலிருந்த மருந்தைக் கீழே கொட்டிவிட்டு வந்தார். அந்தக் கோப்பையை நன்றாகச் சுத்தம் செய்துவிட்டு மறுபடியும் சிறிது மருந்தை ஊற்றி எடுத்துக் கொண்டு வந்து, "மன்னா!" என்று மெதுவாகக் கூப்பிட்டார்.

மன்னர் எழுந்தார்! "வைத்தியரே...நான் கண்களை மூடிக்கொண்டிருந்தாலும் அவ்வப்போது நீங்கள் செய்ததைக் கவனித்துக் கொண்டு தான் இருந்தேன். முதலில் எதையோ கலந்தீர்கள்... பிறகு அதைக் கொட்டிவிட்டு இப்போது வேறு கொண்டு வருகிறீர்கள்...என்ன விஷயம்? உண்மையைச் சொல்லுங்கள்!" என்று மிரட்டினார்.

வைத்தியர் பயந்து போய் விட்டார்.

அப்படியே மன்னரின் காலில் பொத்தென்று விழுந்தார். உண்மையைச் சொன்னார்:

"மகாராஜா... உங்களுடைய படைத்தளபதி உங்களைக் கொல்ல சதி செய்தார். அவர் என்னிடம் விஷம் கலந்து உங்களுக்குக் கொடுக்கச் சொன்னார். அதன் பொருட்டு அவர் எனக்கு நிறைய வெகுமதி தருவதாகக் கூறினார். நானும் அதற்கு ஒப்புக்கொண்டு உங்களிடம் வந்த போது எதிரில் நீங்கள் வைத்திருக்கும், 'நீ எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதைச் செய்வதற்கு முன்னால் ஒரு தடவை அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை நன்றாக யோசித்துப் பார்... உன் மனதுக்கு 'அது சரி' என்று தெரிந்தால் மட்டும் அதை நீ செய்ய வேண்டும்!' என்ற வாசகம் என் கண்ணில்பட்டது. அது என்னை யோசிக்க வைத்தது. நான் செய்யும் செயலால் என் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்பதைப் புரிந்துகொண்டேன். உடனே திரும்பிப்போய் விஷத்தைக் கொட்டி கழுவிவிட்டு.. வேறுமருந்து ஊற்றிக் கொண்டு வருகிறேன்!" என்று தெரிவித்தார்.

இப்போது இந்த மன்னர் அமைச்சரைக் கூப்பிட்டு, "பார்த்தீர்களா... இந்தப் புத்திமதியை அலட்சியமாக நினைத்தீர்கள். இன்றைக்கு அதுதான் என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது!" என்றார்.

அமைச்சர் தலையைக் குனிந்து கொண்டார்.

அதனால்... பெரியவர்கள் நமக்குச்சொல்லும் புத்திமதி ஆரம்பத்தில் சாதாரணமாகத்தான் தெரியும்! அதற்காக நாம் அதை அலட்சியம் செய்யக்கூடாது.

-தென்கச்சி சுவாமிநாதன் -

## இந்தப் பேச்சும் முறிந்திட்டால்...!

எங்களின் பிரச்சினை தீர்ப்பதற்காய்
எதிர்வு கூறுவோர் பலராகும்
இங்குள நிலைமை அறிந்தவரே
ஏற்ற தீர்வைத் தரமுடியும்
மங்கள மான தீர்வொன்றே
மக்களும் இன்று வேண்டுவதாம்
பொங்கிடும் உணர்வுகள் இருபுறமும்
பூட்கை ஒன்றிற்(கு) அமைவாக
இங்கித மாக நோர்வேயார்
இருபுறம் ஓம்பி அவரவரின்
பங்குகள் பகிரப் பணிசெய்தும்
பரஸ்பரம் விட்டுக் கொடுத்திட்டும்
சிங்களர் தமிழர் சேர்ந்திட்டும்
சிறப்பாய் உரிமைகள் வழங்கிட்டும்
செங்களம் ஆடுதல் விட்டிட்டும்
தேசச் செழிப்பை(க்) கருத்திட்டும்
இங்குள மக்கள் அனைவருமே
இலங்கைத் தாயின் சேய்களெனும்
சங்கதி நிலைக்கச் செய்திட்டால்
சாந்தியும் சகிப்பும் நிலைத்திடுமே!
நடுநிலை செய்வோர்; அனுசரணை
நாடி நிற்போர்; சமரசத்தை
இடுமுறை காண்போர் என்போர்கள்
இருதரப் பிற்கும் இடைநின்று;
முகம்நக நடந்து முக்காமல்
முகத்துதி கூறி முரணாமல்
அகம்நக நடந்து இடித்துரைத்து,
ஆக்கம் கருதி அனைவருமே
பகைமையை மறந்து மேசைக்கு(ப்)
பற்றுடன் வரவே செயல்வேண்டும்
தகைமை இதுவே தக்கோர்கு(ச்)
சரித்திரம் கண்ட உண்மையிது
பண்பும் பயனும் இல்லாத
பசப்புப் பேச்சில் பயனிலையே!
முன்பும் பலபேர் பலமுறையும்
முயன்று தவறிய முயற்சிகள்போல்
பின்பும் வந்தால் பிணக்குகளை(ப்)
பெயர்த்தும் தீர்க்க முடியாது
என்பது உறுதி மட்டுமல
இலங்கை இரண்டு நாடாகும்!
இன்று போய்நீ நாளைவா
என்பது மட்டும் நடக்காது.
சென்ற காலப் படிப்பினைகள்
செய்து தந்தது இதுவேயாம்
குளிரில் காயும் எடுபிடிகள்
குழப்பிக் குட்டையைக் கலக்காமல்
வெளியில் வேடம் தரிப்போரின்
வெற்றுப் பேச்சைக் கேட்காமல்
ஒளியை ஊட்டி உளமார
உடன்பா(டு) ஒன்று செய்வதுவே
களிபேர் உவகை தந்துதவும்
கண்ணியம் எண்ணிடக் கைகூடும்
இந்தப் பேச்சும் முறிந்திட்டால்
இனிமேல் உருப்படி ஆகாது
சிந்தித்(து) இதனைச் செய்கருமம்
சீராய் நேராய்(ச்) செயவேண்டும்

- தீவகன் -

## தருமவழி ஆட்சிக்குத் தடையாய் அமைவன

பழந்தமிழகத்தை, முடியுடை மூவேந்தர் ஆட்சிபுரிந்தனர் என்பதை அனைவரும் நன்கு அறிவோம். அவர்கள் வாடா வஞ்சியை, பீடார் உறந்தையை, மாட மதுரையைக் கோநகர்களாகக் கொண்டிருந்தனர். அம்மாமன்னர்களின் மாண்பையும், ஆட்சிச் சிறப்பையும், குடிகளை ஓம்பிய அருமைப் பாட்டையும், பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் பகர்ந்து நிற்றல் வரலாற்று உண்மையாகும்.

எட்டுத்தொகையுள் நான்காவதாகத் திகழும் நூல், பதிற்றுப் பத்தாகும். அது பப்பத்தாக அமைந்துள்ள பத்துத் தொகுப்புக்களை உள்ளடக்கி இருந்தது. மொத்தம் நூறு பாடல்களில் இடம்பெற்றிருந்தன. ஒவ்வோர் பத்தும் ஒவ்வோர் சேரமன்னர் குறித்து வெவ்வேறு புலவர்பெருமக்களால் பாடப்பட்டிருந்தன. முதற் பத்தும், பத்தாம் பத்தும் காலவெள்ளத்தில் மூழ்கிப்போயின.

எட்டுத்தொகையுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறத்திணையின் பாலனவாம். ஏனைய நற்றிணை முதலிய ஆறும் அகத்திணையின் பாலனவாம். புறத்திணை நாட்டாட்சி என்றும், அகத்திணை வீட்டாட்சி என்றும் தெரிந்திருக்கின்றோம்.

ஒவ்வொரு பத்தின் முன்னும் பதிகம் என்னும் உறுப்பு இடம் பெற்றிருக்கின்றது. அது பாடப்பெற்ற சேரவேந்தனின் மெய்க்கீர்த்தியையும், பாடிய புலவோர்களின் பெயர்களையும் பாடிய பாட்டுக்களையும் பாடிப்பெற்ற பரிசில்களையும் கூறாநிற்கின்றது. .

இன்று மூன்றாம்பத்தில் எமது கருத்தினைச் செலுத்துவோம். மூன்றாம்பத்தை பாலைக்கௌதமனார் பாடியிருக்கின்றார். இமயவரம்பன் தம்பி பல்யாகசாலைச் செல்கெழுகுட்டுவன் என்னும் சேரவேந்தன் மீது இது பாடப்பட்டிருக்கின்றது.

யாம், மூன்றாம்பத்தில் வரும் இரண்டாவது பாடலாகிய 'கயிறு குறு முகவை'யில் எமது கருத்தினைச் செலுத்துவோம். 'கயிறு குறு முகவை' என்றது பாடலில் வரும் ஒரு தொடர். அதாவது கொங்கநாட்டுக் கூவல்களின்– கிணறுகளின்–அயலே நீண்ட கயிற்றிற் கட்டப்பட்ட சிறிய முகவை – வாளி – கிடக்குமாம். நீர்வேட்கை – தாகம் மிக்க – பசுக்கூட்டம் அங்கு மொய்த்திருக்குமாம். நயம் மிக்க இத்தொடர் காரணமாக இப்பெயர் உண்டாயிற்று என்பர்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

இப்பாடலில் குட்டுவனின் முன்னோர், அறம் அறிந்து ஆட்சி செய்த சிறப்பு – அவனது படைப்பலம் – விஞ்சுதரு தோற்றம் – அகப்பா என்னும் பெரு நகரை அழித்த திறமை – பேராற்றல் – எத்தகைய பகைவருடனும் தொடுக்கும் போரை ஒரே நாளில் உச்சிப்பொழுதின் முன்னே முடிக்கும் வன்மை , பாழாக்கும் பான்மை முதலியன குறிப்பிடப்படுகின்றன.

குட்டுவனின் முன்னோர் தருமவழியில் அரசுசெய்ததற்கு வேண்டிய உயிர்ப்பண்புகளை ஓம்பினர் என்பதை மட்டும் தெரிந்து கொள்வோம். அப்பகுதிவருமாறு:-

*'சினனே காமம் கழி கண் ணோட்டம்*
*அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை*
*தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்(து)*
*அறம் தெரி திகிரிக்கு வழியடையாகும்.*
*தீது சேண் இகந்து நன்று மிகப் புரிந்து*
*......கானமும் பலபயம் உதவ*
*...................................................*
*ஊழி உய்த்த உரவோர் உம்பல்*
*...................................................*
*பெரும்பாழாகும் மன்! அளிய தாமே'*

- பதிற்றுப்பத்து 22

ஆசிரியர்,முதற்கண் சினம்,காமம்,கழி கண்ணோட்டம், அச்சம், பொய்ச்சொல், அன்பு மிகவுடைமை, தெறல் கடுமை முதலலொடு செருக்கு, நன்மையில் நீங்கிய ஞானம் என்பன எல்லாம் நல்லாட்சிக்குத் தீது பயப்பன என்கிறார். அவற்றை நீக்கி, நற்கருமங்களை இயற்றி, ஒருவரை ஒருவர் வருத்தாது, பிறர் பொருள்களை விரும்பாது, நல்லறிவானே, நன்

**தேன்கூடு**

நெறிக் கண் ஒழுகி, வாழ்க்கைத்துணைவியைப் பிரியாமல், பிறர்க்குப் பகுந்தளித்து, தாமும் உண்டு, குடிமக்கள் நிறைந்த ஆயுளுடன் பிணியற்று நீடூழி வாழ்ந்தனர் என்று குறிப்பிடுகின்றார். இன்று நாமும் உலகில் வாழ்வாங்கு வாழ இவை பெரிதும் உதவும் என்பது திண்ணம்.

நல்லாட்சிக்கன்றி, நமது இகவாழ்வுக்குமே இடையூறாக அமைந்த சினம் முதலிய இழிகுணங்களைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம்.

சினம் என்பது கோபம்; கோபம் மன்னவர்க்கன்றி மன்பதைக்குமே பாபம் விளைவிப்பது. வள்ளுவப் பெருந்தகையார், சினத்தினை நெருப்பு என்பர்; அது தன்னையன்றித் தனக்கு இனமானவர்களையும் அழிக்கும் திறம் கொண்டது. மன்னரும் மக்களும் கோபத்தை நீக்கிக்கொள்ள வேண்டும்.

காமம் இச்சையாகும். இங்கும் அளவிறந்த என்னும் பொருள் தரும் 'கழி' என்பதைக் கூட்டிக்கொள்ள வேண்டும். சச்சந்த மன்னன் கழிபெருங் காமத்தால் விஜையுடன் இல்லத்தே இருப்ப, அவன் அமைச்சன், கட்டியங்காரன் நாட்டினை அகப்படுத்திய செய்தியைச் சீவகசிந்தாமணி கூறும்.

கரிகண்ணோட்டம், அளவிறந்த உவகையாகும். மாணா உவகை என்றும் மொழிவர். திருவள்ளுவதேவரும்'இவறலும் மாண்பிறந்த மானமும், மாணா உவகையும் மன்னர்க்கு ஏதம் தரும்' என்பர்.

அச்சம், அஞ்சுதலாகும். அனைத்து வாய்ப்புகள் அமைந்திருந்தபோதும் அச்சம் உடைய மன்னனுக்கு அவ்வாய்ப்புப் பயனபடா அன்றோ! அச்சமுடையார்க்கு அரண் இல்லை. 'அஞ்சாமை அன்ன விழுப்பொருள் இல்லை' என்று தமிழ்மறை கூறுகின்றது.

பொய்ச்சொல், பொய்கூறுதல், அது ஒருவர் புகழைக் கெடுக்கும்; காரியத்தை அழிவு செய்யும். அரிச்சந்திரன் 'பதி இழந்தனம், பாலனை இழந்தனம், படைத்த நிதி இழந்தனம், வீடுபேறுதான் எஞ்சி இருக்கின்றது. அதுவும்தான் இழக்க நேரினும் கூடப் பொய் சொல்ல மாட்டோம்' என்று கூறியமை உளங்கொளற்பாலதாம்.

அன்புமிக உடைமை, இதனை உலக வழக்கில் உலோபம் என்று கூறிவிடலாம். திருவள்ளுவதேவர் இதனைப் பற்றுள்ளம் என்பர்.

தெறல் என்பது தெறுதல் ஆகும் அஃதாவது தன் கீழ்வாழ்வார்க்கு மிகுதண்டம் விளைப்பதாகும். திருவள்ளுவர் வாய்மொழியில் கையிகந்ததண்டம் எனலாம். பிற என்றதனால் செருக்கு, நன்மை நீங்கிய ஞானம் முதலியனவும் கொள்ளப்படும்.

இவற்றை மண்ணாளும் மன்னர் அன்றி மக்களும் நீக்கி வாழ்வரேல் வாழ்வு இனிக்கும். இன்றைய குடியாட்சியில் மக்களின் தலைவர்களும் இந்த, அறம் தெரி திகிரிக்கு இடையீடு விளைக்கும் தீமைகளைத் தம் ஆளுகையின் கீழ் உள்ள பிரதேசத்தில் இல்லையாக்கி நாட்டையும் குடிகளையும் நடத்த வேண்டும். அப்போது வையக வாழ்வு வானக வாழ்வாய் மலரும்.

தொடரும்

- *சிகண்டியார்.*

# பிரிக்கப்படாத வடக்கு - கிழக்கு பிராந்தியம் தீர்வின் ஒரு தூணாக அமைய வேண்டும்

இனப்பிரச்சினை சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னரே வேரூன்றிய நச்சு மரம். அதனை நினைத்த மாத்திரத்தே தறித்து வீழ்த்தி நல்ல காற்றைச் சுவாசிக்க நினைக்க இயலாது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை வகுப்பதற்கு, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, மூன்று மாத அட்டவணை ஒன்றைத் தயாரித்த போதே அதன் பிரகாரம் அலுவல்கள் வேகமாக நடைபெறுமா



**தந்தை கூறியதையே சொல்வாரா?**

என்ற சந்தேகம் எல்லோருக்கும் எழுந்தது. முதலில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் கூடி ஆராய்ந்து தீர்வை வடிவமைப்பது. அதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு முதலில் தமிழ்க்கட்சிகளுடனும் பின் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் பேசுவது. அவற்றுடன் இணக்கம் கண்ட பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவது என்பதே அரசாங்கத்தின் அட்டவணை. ஜனவரியில் ஆரம்பித்து முதல் மூன்று கட்டங்களையும் மூன்று மாதங்களில் - இந்த மாதத்தில் - பூர்த்தியாக்குவது என்பது திட்டம்.

ஆனால் இதுவரை முதலாவது கட்டம் - ஆளும் கூட்டணியில் உள்ள கட்சிகள் சேர்ந்து ஒரு தீர்வு வடிவத்தை அமைப்பது - மட்டுமே முழுமையாக நடந்தேறி உள்ளது. தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைதானும் இன்னும் முற்றுப்பெறவில்லை. இணக்கமான நிலை ஏற்படுமா என்பது வேறு விடயம்-அடுத்த பக்கம் அரசாங்கத் தரப்பும் தமிழ்க்கட்சிகள் தரப்பும் இதுவரை மூன்று தடவைகள் சந்தித்துப் பேசிவிட்டன. ஆனால் இனப்பிரச்சினையின் மூலாம்சமான ஆட்சிப் பகிர்வு குறித்து முழுமையான வடிவம் இன்றித் தடங்கலுற்று ஸ்தம்பித்து நிற்கிறது.

அரச தரப்புக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்ற மூன்று கட்டப் பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்ட இரு முக்கிய அம்சங்களில் ஒன்று நாடு பிரிக்கமுடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக விளங்கும் என்பதாகும். இது முற்றுமுழுதான சமஷ்டி அமைப்பல்ல. இந்தியாவில் உள்ளது போன்ற அரைச்சமஷ்டி முறையுமல்ல. கால்வாசி சமஷ்டித் தன்மை கொண்டது என்று மட்டுமே கொள்ளலாம்.

இந்தக் கால்வாசி சமஷ்டி தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு அருகிலும் வரவில்லை என்பது ஒரு புறமிருக்க, தமிழ் மக்களின் பூர்வீக நிலப்பிரதேசமான, தாயகமான வடக்கு-கிழக்கு பிரிக்கப்படாதிருப்பது குறித்து ஓர் எழுத்துத்தானும் இன்னும் ஆராயப்படவில்லை.

பிரிக்கப்படாத வடக்கு-கிழக்கில் தன்னாட்சி அரசு ஒன்றை நிறுவி தம்மைத்தாமே ஆளவும், தமது மண்ணின் அபிவிருத்தியை தாமே மேற்கொள்ளவும், தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கவும் வகை செய்யும் ஆட்சியமைப்பு முறையே தமிழ் மக்களின் ஆகக்குறைந்த

## உள்ளும் புறமும்

குறுமுனி

கோரிக்கை என்பதனை அரசாங்கம் புரிந்து கொண்டதாக இல்லை

அது குறித்தே முதலில் ஆராயப்படவேண்டும். வடக்கு-கிழக்குப் பிரிக்கப்பட முடியாத ஒரு பிராந்தியமாக, ஆட்சி அலகாக அமைய வேண்டும் என்பதில் பேரம் பேசுவதற்கு எதுவுமிருக்க நியாயமில்லை. ஆனால் இது குறித்து இன்னும் அரசதரப்பால் எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மிக அடிப்படையாக விளங்குவது பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு. இப்போது இரண்டு மாகாணங்களும் இணைக்கப்பட்டே உள்ளன. 1987 ஜூலையில் கைச்சாத்தான ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த இணைப்பை நிரந்தரமாக்குவதற்கு கிழக்கிலங்கையில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவேண்டும். இணைப்புக்கு மக்களின் ஆதரவு கிடைக்காவிடில் பிரிக்கப்படலாம் என்கிறது அந்த ஒப்பந்தத்தின் ஒரு சரத்து.

ஒப்பந்தப் பிரகாரம் அது கைச்சாத்தாகிய ஒரு வருட காலத்தில் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெற வேண்டும் என்று இருந்த போதிலும், பன்னிரண்டு வருடங்கள் கடந்தும் அப்படியொரு சர்வஜனவாக்கெடுப்பு நடத்தப்படவில்லை!

வடக்கு - கிழக்கை பிரிப்பதா இல்லையா என்பதை நிச்சயிக்க சர்வஜனவாக்கெடுப்பு ஒன்று ஐம்பது வருடங்கள் சென்றாலும் இங்கு நடைபெறாது என்று யாழ்ப்பாண நகரத்தில் உயர் சிவில் இணைப்பு அதிகாரியாகப் பணி புரிந்த இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் இப்பத்தியாளரிடம் கூறியிருந்தார். இந்தியா அவ்வாறு ஒரு சர்வஜனவாக்கெடுப்பினை நடத்த அனுமதியாது என்ற தொனியில் அவரது கருத்து அமைந்தது. காஷ்மீர் விவகாரத்தில் இணைக்கப்பட்ட சர்வஜனவாக்கெடுப்பு 40 வருடங்கள் (அப்போது) சென்று நடைபெறவில்லை என்பதனையும் அவர் தமது கருத்துக்கு ஆதாரமாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

ஆனால், சந்திரிகா அரசு அதற்குப் பின்னர் சுமார் பத்து வருடங்களின் பின்னர் - 1997 ஒக்ரோபர் 24 ஆம் திகதி - நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த தெரிவுக்குழு அறிக்கையில் (அதிகாரம் - பதினைந்தில்) வடக்கு-கிழக்கை நிரந்தரமாக இணைத்து வைத்திருப்பதானால் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட மக்கள் மத்தியில் சர்வஜனவாக்கெடுப்பு நடத்தப்பட்டு, அவர்கள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்றும் -

சர்வஜனவாக்கெடுப்பில் இணைப்பை நிராகரித்து வாக்களிக்கப்பட்டால், வடக்கு ஒரு பிராந்திய சபையாகவும் கிழக்கு ஒரு பிராந்திய சபையாகவும் இயங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் - அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கிழக்கில் சர்வஜனவாக்கெடுப்பு நடத்தவே வகை செய்தது. ஆனால் இன்றைய அரசின் 1997அறிக்கையோ அம்பாறையில் தென்-கிழக்குப் பிராந்திய சபை ஒன்றை நிறுவுவதற்கும் இரண்டாவது சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவும் சிபார்சு செய்கிறது.

வடக்கு-கிழக்கை பிரிக்கக்கூடாது என்பது தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருக்கும்போது, கிழக்கை இரண்டாகப் பிரிக்கும் "சதி" அம்சம் ஒன்றும் அந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு உருவாவதற்குப் பங்களித்த - இப்போது அதில் அங்கமாக

## இனப்பிரச்சினை, அரசமைப்புத் திருத்தம்; இரண்டையும் ஒன்றாகப் பிசைவது ஏன்?

உள்ள - ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக சேர்க்கப்பட்ட புதிய விவகாரம் இது!

1957 ஜுலை 26ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட, அதாவது பொ.ம.ஐ. முன்னணி அரசின் தீர்வாக 1997 ஒக்ரோபர் 24ஆம் திகதி தெரிவுக்குழு அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நாற்பது வருடங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்துடன் ஒப்பிடும்போது தமிழர் நலன்கள் பெரிதும் சிதைக்கப்பட்டுள்ளதை எவரும் அவதானிக்கலாம்.

பண்டா-செல்வா ஒப்பந்தம் மற்றும் 1965இன் டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பனவற்றுக்கு ஒத்ததாக இன்றைய அரசின் தீர்வுப்பொதி - தெரிவுக்குழு அறிக்கை- அமைந்திருப்பதாக அப்போது (1997இல்) அரசாங்கத் தரப்பில் மிகப் பிரமாதமாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்தது.

### எந்த வகையில் ஒத்தது

பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் பிரகாரம் வடமாகாணம் ஒரு பிரதேச சபையாகவும், கிழக்கு மாகாணம் ஒரு பிரதேச சபையாகவும் இயங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் -

மாகாண எல்லைகளையும் தாண்டி இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகள் இணைவதற்குச் சட்டத்தில் விதி இடம்பெறும் - என்று பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் மூன்றாவது அம்சம் உறுதி செய்கிறது.

நாற்பது வருடங்களுக்கும் பிந்திய இன்றைய அரசின் தீர்வுப் பொதியில் வடக்கையும் கிழக்கையும் பிரிக்கச் சதி செய்யப்படுகிறது என்றால், எந்த வகையில் முந்தியவற்றுடன் இது ஒத்திருக்கிறது என்று அரச தரப்பிடம் தமிழ் மக்கள் சார்பில் கேட்கிறோம்!

அரசாங்கத்தின் புதிய தீர்வு வடிவம் குறித்து மூன்று தடவைகள் பேசிய தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்கள் 1997 ஒக்ரோபர் தெரிவுக்குழு அறிக்கை, இப்போதைய வடிவத்தைவிட எவ்வளவோ மேல் என்று கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் தமது இயலாமையை ஒப்புக்கொள்ள மனமில்லாமல், ஜனாதிபதி தாராள மனதுடன் உள்ளார், 1997 அறிக்கைக்கு - யோசனைகளுக்கு - கிட்டச் செல்லவும் தயாராகவுள்ளார் என்று கூறித் தம்மைத் தாமே ஏமாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்!

ஜனாதிபதியின் தாராள மனது வடக்கு - கிழக்கைப் பிரிக்காதிருக்கும் விடயத்தில் எவ்வாறு உள்ளது என்பதனைப் பார்ப்பதற்கு இன்னும் சில வாரங்கள் ஆகலாம் என்று சொல்லப்படுகிறது.

தமிழ்க் கட்சிகளுடன் தனது புதிய தீர்வு வடிவத்தை ஆராய்ந்த பின்னரே ஐக்கிய தேசியக்கட்சியுடன் ஆலோசனை கலப்பது என்று சந்திரிகா முதலில் அறிவித்திருந்தார். திடீரென அந்த அட்டவணையை மாற்றி, தமிழ்க் கட்சிகளுடனான கலந்துரையாடலை இடையே நிறுத்திக் கொண்டு, ஐக்கிய தேசியக்கட்சியைப் பேச வருமாறு அழைத்தார்.

இது குறித்துப் பெப்ரவரி 18ஆம் திகதி எதிர்க்கட்சித்தலைவருக்கு ஒரு கடிதத்தை அனுப்பி 22ஆம் திகதி பேச்சுக்கு வருமாறு அழைத்திருந்தார். கால அவகாசம் போதாது என்று கூறியும், 1997 அறிக்கையில் சில பகுதிகளைத் தாம் ஏற்றுக்கொள்ளாவிடினும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தாம் தயார் என்று கூறிய பின்னர், புதிய தீர்வை வடிவமைப்பது தங்கள் மீது அரசு நம்பிக்கை வைக்கவில்லை என்று கூறியும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா 22ஆம் திகதி பேச்சுக்கு வர முடியாது என்று ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார்.

எதிர்க்கட்சியினரைச் சந்தித்துப் பேசிய பின்னர் தமிழ்க் கட்சிகளைப் பெப்ரவரி 28 ஆம் திகதி சந்திக்க அரச தரப்பில் திட்டமிடப்பட்டது. ஆனால் அன்று பேச்சுக்கள் நடைபெறவில்லை. அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடு குறித்த விவாதம் நடைபெறவுள்ளதால் ஒத்திப்போடப்படுவதாகக் காரணம் கூறப்பட்டது.

ஆனால் அது காரணம் அல்ல. எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுடன் வடக்கு-கிழக்குப் பிராந்திய சபை, உத்தேச சர்வஜனவாக்கெடுப்பு என்பன குறித்துப் பேச அரச தரப்பு முடிவு செய்திருந்தது. பிராந்தியங்களின் ஒன்றியம் சரத்தையும் ஐக்கிய தேசியக்கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்த உத்தேசித்திருந்தது. இந்த விடயங்களில்தான் தனித்து நின்று முடிவெடுத்ததாக இல்லாமல் ஐக்கிய தேசியக்கட்சியின் ஒத்துழைப்புடன் செய்ததாகக் காட்ட விரும்புகிறது அரசு. தமிழ்க்கட்சிகளுடன் கடந்த 28ஆம் திகதி பேச்சு நடத்தாது திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்ததற்கு இதுவே உண்மைக் காரணம் என்று அறியப்படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியுடனான பேச்சுக்கள் நடைபெற்ற பின்னரே இனித் தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுக்கள் நடைபெறும். ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி இப்போதைக்கு அரசாங்கத்துடன் விருப்பத்தோடு பேச்சுக்குப் போகும் நிலையில் இல்லை என்று அறியப்படுகிறது. புதிய தீர்வு வடிவம் ஒன்று குறித்துப் பேசும் நிலையில் (Mood இல்) அக்கட்சி இல்லை என்று நாடி பிடித்துப் பார்க்க முடிகிறது.

* வடக்கு-கிழக்கில் சுமுகநிலையை உருவாக்குதல். தமிழ்ப்பிரதேசங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள உணவு, மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கான தடையை நீக்குதல். போரை நிறுத்தி இடைக்கால நிர்வாக சபை ஒன்றை நிறுவி வடக்கு-கிழக்கில் இயல்பு நிலைக்கு வழி செய்தல்.

* பொலீஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, பொது நிர்வாக ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு ஆகியவற்றை நிறுவிச் செயற்படுத்த வகைசெய்தல்.

* நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் 1997, 1998 ஆண்டுகளில் ஆராயப்பட்ட யோசனைகளையே ஆராய்ந்து வேண்டிய திருத்தங்களைச் செய்து நிறைவேற்றுதல்.

மேற்படி விடயங்களில் அரசாங்கம் அக்கறை காட்டிச் செயற்படவேண்டும் என்று ஐ.தே. கட்சி வட்டாரங்கள் விரும்புகின்றன. ஆனால் இதனை வைத்துக்கொண்டு இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி நிபந்தனைகளை விதிப்பதாக அரச தரப்புப் பிரமுகர்கள் பிரசாரம் செய்கிறார்கள் என்பதும் எதிர்க்கட்சித் தரப்பின் முறைப்பாடு. உண்மையில் அரசின் போக்குக் குறித்தும் அணுகுமுறை பற்றியும் எதிர்த்தரப்பு அதிருப்தி கொண்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வும் சரி, அரசமைப்புச் சீர்திருத்தமும் சரி மிக அவதானமாக ஆராய்ந்து முடிவு எடுக்கப்படவேண்டியவை. இனப்பிரச்சினையோ நீண்டகாலப் பிரச்சினை. இதனை ஒரு சில வாரங்களில் தீர்த்துவிட முடியாது. நாங்கள் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து அரசு பதில் கூறாமல், எம் மீது பழிபோடுகிறது -

ஆறஅமர இருந்து கலந்தாலோசித்துத் தீர்வுகாண வேண்டிய விவகாரத்தை ஒரு சில வாரங்களில் செய்துவிடலாம் என்று அரசு நினைக்கிறது. இதனை அரசின் குறுகிய அரசியல் இலாபம் தேடும் முயற்சியாகவே கருத வேண்டியுள்ளது. இந்த முயற்சிக்கு நாம் எவ்வாறு ஆதரவு வழங்கமுடியும்? - என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நெருங்கிய வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

எதிர்க்கட்சியின் இந்த நிலைப்பாட்டை ஓரளவு மணந்து பிடித்த அரசாங்கம் அதனை முறியடிப்பதற்கான சில உத்திகளை ஆலோசித்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஐக்கியதேசியக் கட்சியின்



**தாயார் சொன்னதைச் செய்வாரா?**

ஒத்துழைப்பு இல்லாமல் எதனைச் செய்தாலும் விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களை முன்னெடுப்பது கடினம் என்று அவதானிகள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

வடக்கு-கிழக்கில் தன்னாட்சி அதிகாரம் உள்ள ஆட்சி முறைக்கு வகை செய்யாத எந்தத் தீர்வையும் விடுதலைப் புலிகள் என்ன, தமிழ் மக்களே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

இத்தனை அழிவுகள், அவலங்கள் இழப்புக்களின் பின்னர் வெறும் அதிகாரப்பரவல் எலும்புத் துண்டை ஏற்பதற்குத் தமிழ்மக்கள் தயாரில்லை. 1976இல் தனிநாட்டுப் பிரேரணை நிறைவேற்றி பிரதிநிதிகளைத் தெரிவு செய்த தமிழ் மக்களுக்கு, வெறும் அதிகாரப் பரவலைக் கொடுத்துத் திருப்திப்படுத்த முடியாது - என்று அரசியல் தெரிந்த கல்விமான் ஒருவர் அண்மையில் கருத்துத் தெரிவித்தார்.

மேலும், விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு வெறும் ஆரவாரம் காட்டாமல் தமிழ் மக்களுக்கு உருப்படியாக எதனை வழங்கி அவர்களைத் திருப்திப்படுத்த முடியும், பிரச்சினையைத் தீர்க்க இயலும் என்ற உணர்வோடு அரசு செயற்படவேண்டிய காலம் இது.

போரை உடனடியாக நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத்தவறினால் எதிர்காலச் சந்ததி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மீது பழி சுமத்தும் - என்று தமது தாயாரும் பிரதமருமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறியதை ஜனாதிபதி சந்திரிகா மனதில் ஆழமாகப் பதித்து விவேகத்துடனும், துணிச்சலுடனும் செயற்படுவது இன்றியமையாததாகும்.

தமது தந்தையார், தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் செய்தவேளை -

சமஷ்டி அரசமைப்பையோ, பிரதேச சுயாட்சியையோ ஏற்படுத்துவது குறித்துப் பேசவோ அல்லது உத்தியோக மொழிச்சட்டத்தை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவோ அரசாங்கத்தின் இன்றைய நிலையில் என்னால் முடியாது - என்று கூறியது போல மகள் சந்திரிகா இப்போது சொல்லமுடியாது!

நாற்பத்து மூன்று வருடங்களுக்குப் பின் இப்போது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. உலக நாடுகளிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. பல இனமக்கள் வாழும் நாடுகளின் பிரச்சினைக்குச் சமஷ்டி ஆட்சி முறையே உகந்த தீர்வாக அனுபவ மூலம் அறியப்பட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்கு பிரிக்கப்படாதிருத்தல், பிராந்திய சுயாட்சி, சமஷ்டி அரசமைப்பு என்ற நிலைகளுக்கேனும் அரசு இறங்கிவராவிடில் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது கானல் நீராகவே முடியும். இதனை மக்கள் விரும்பவில்லை.

மேலும் இனப்பிரச்சினைக்கென ஒரு தீர்வைக் காண்பதற்கு முதலில் முயற்சிக்க வேண்டும். அதன் பின்னரே அரசமைப்பில் அதனைச் சேர்த்து சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இரண்டையும் சேர்த்துக் குழைத்தால் இரண்டையுமே உருப்படியாக முன்னெடுக்க முடியாமற் போகும். இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பது ஒரு பெரிய விவகாரம். அரசமைப்பை சீர்திருத்தம் செய்வது இன்னொரு விடயம்.

இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துப் பிசைந்தால் ஒன்றுக்குத் தடங்கல் போடும் உத்தியைக் கையாண்டு, இரண்டையும் தறுக்கணிக்கச் செய்ய எதிரணியினர் முயல்வர். முதலில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தை முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் இந்த விவகாரத்தில் எதிரணி எங்கே நிற்கிறது என்பதனை மக்களுக்கு வெளிச்சப்படுத்த முடியும்!

மேற்கு நாடுகள் பலவும் பின்னணியில் நின்று கொண்டே நோர்வேயை அனுசரணையாளராக முன்னுக்குத் தள்ளிவிட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. எனவே அரசு தனது அணுகுமுறைகளையும் உத்திகளையும் மாற்றவேண்டும். இல்லையேல் அதுவே சிக்கலுற நேரிடும்!

# சிறப்புமிக்க சிவராத்திரி இன்று

சிவனுக்குரிய சிறப்புமிக்க விரதங்களுள் ஒன்றான் சிவராத்திரி விரதம் இன்றாகும்.

ஆனந்தமயமான - கருணை வடிவமான - "சிவம்" என்னும் பரம்பொருளை நாம் ஒளிவடிவத்தில் கண்டு வழிபாடு செய்வதற்கு ஏற்ற நாள் சிவராத்திரி என சமய இலக்கியங்கள் பலவும் எடுத்துக்கூறியுள்ளன.

மாசி மாதத்தில் வரும் கிருஷ்ண பட்ச சதுர்த்தசி நாள் சிவராத்திரி நன்னாளாகும்.

அன்று நள்ளிரவின் பின் மூன்றே முக்கால் நாழிகை 'லிங்கோற்பவ காலம்' என்று சிறப்பாகக் கூறப்படுகின்றது. இக்காலகட்டமே சிவராத்திரி விரதத்தின் மிகவும் முக்கியமான நேரம்.

## ஐந்து வகை சிவராத்திரி

மாதந்தோறும் வரும் கிருஷ்ண பட்ச, சுக்கிலபட்ச சதுர்த்தசி தினங்களில் வரக்கூடியது நித்திய சிவராத்திரி எனப்படும்.

தை மாதத்தில் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில் வருவது பட்சசிவராத்திரி எனப்படும்.

மாதந்தோறும் வருவது மாதசிவராத்திரி.

இது மாசி கிருஷ்ணபட்ச சதுர்த்தசி, பங்குனி திருதியை, சித்திரை கிருஷ்ண பட்ச அஷ்டமி, வைகாசி அஷ்டமி, ஆனி சுக்லபட்ச சதுர்த்தி, ஆடி கிருஷ்ணபட்ச பஞ்சமி, ஆவணி சுக்லபட்ச அஷ்டமி, புரட்டாசி திரியோதசி, ஐப்பசி சுக்லபட்ச துவாதசி, கார்த்திகை சப்தமி, பின் அஷ்டமி, மார்கழி இரண்டு பட்சங்களிலும் வரும் சதுர்த்தசிகள், தை சுக்ல பட்ச திருதியை ஆகிய நாள்களாகும்.

சோம வாரத்தன்று, பகல் இரவு இரு பொழுதுகளிலும் அமாவாசையாக இருந்தால் அது யோக சிவராத்திரி எனப்படும்.

ஆண்டுதோறும் வரும் மாசி மாத கிருஷ்ணபட்ச சிவராத்திரிதான் மகா சிவராத்திரி எனப்படும்.

சிவம் என்பது அனைத்தையும் தன்னுள் அடக்கக் கூடியது; பாவங்களை போக்க வல்லது; ஆனந்தமானது; கருணை மயமானது.

ஆகவே சிவராத்திரி என்பதும் சிவபெருமானின் தெய்வீகக் குணங்களையே கொண்ட மகிமை வாய்ந்த திருநாளாகும். சதுர்த்தசி நாளின் சிறப்பு, அதற்கு மறுநாள் அமாவாசையாக இருப்பதாகும்.

அமாவாசையன்று சூரிய சந்திரர்கள் ஒன்றாக இருக்கிறார்கள். இது பரமாத்மாவும், ஜீவாத்மாவும் இணைந்திருப்பது போன்றது.

மாசி மாதம் என்பது கௌர ஆண்டின் இறுதி நாள். ஒன்றன் முடிவும், மற்றொன்றின் ஆரம்பமுமே உலக தத்துவம். எனவே அந்த நாளில் விரதம் தொடங்கி முடிப்பது சிறப்புக்கு உரியது.

விரதம் என்றால் என்ன? விரதம் என்பது விரும்பிய பலனைக் கொடுப்பது ஆகும்.

விரதத்திற்கு மிகவும் முக்கிய பலன்கள் "பொறுமை, வாய்மை, தயை, தானம், ஈகை, தூய்மை, புலனடக்கம், வழிபாடு, ஆனந்தம், பிறர் பொருளை அபகரிக்காமை" என்று பவிஷ்ய புராணம் இலக்கணம் கூறுகின்றது.

சிவராத்திரி விரதம் மேற்கொள்பவர்கள் நீராடி, சிவ சந்நிதியில் சிவ பூஜையை மேற்கொள்ளுவது சிறந்தது. அவ்விதம் சிவபூஜை மேற்கொண்டு பூஜையைச் செய்து முடிக்க முடியாதவர்கள் கோயிலுக்குச் சென்று அங்கு நடக்கும் பூஜையைக் கண்டுகளிக்கலாம்.

அன்று முழுவதும் உபவாசம் இருக்கவேண்டும். பகலில் உறங்கக் கூடாது


இரவில் நான்கு காலங்களிலும் நடக்கும் பூஜைகளில் கலந்து கொள்ள வேண்டும்.

பக்தியும், முத்தியும் வேண்டுபவர்கள் தவறாமல் கடைப்பிடிக்கும் விரதம் மகாசிவராத்திரி விரதம் எனக் கூறப்படுகின்றது.

ஆண், பெண், குழந்தைகள் மற்றும் அந்தணர்கள், இல்லறத்தில் இருப்பவர்கள், துறவியர்கள் என்ற பாகுபாடு இன்றி அனைவரும் பக்தி சிரத்தையுடன் கடைப்பிடிக்க வேண்டிய விரதம் இது எனவும் கூறப்பட்டுள்ளது.

சிவராத்திரி அன்று சிவனை மனத்தில் இருத்தி, இரவில் உறக்கத்தை நீக்கி, நான்கு சாமங்களிலும் வழிபாடு செய்து, அடுத்தநாள் காலை அடியார்களுடன் திருவமுது செய்து, விரதத்தை நிறைவு செய்ய வேண்டும் என்று "மகாஸ்கந்த புராணம்" தெரிவித்துள்ளது.

இதேவேளை வேறு நூல்கள் சிவராத்திரித் தினத்தில் இரவும், பகலும் - நாள் முழுவதும் - பஞ்சாட்சர ஜபம் செய்தபடி சிவனைத் தியானித்தபடியே இருப்பவர்களே மிகவும் தலை சிறந்த முறையில் சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் என குறிப்பிடுகின்றன.



அவ்வாறு விரதம் அனுஷ்டிக்க முடியாதவர்கள் சிவனுடைய பெருமைகளைக் கூறும் சிவபுராணம், தேவராம், திருவாசகம், சிவசகஸ்ர நாமம், சிவானந்த லகரி, ஸ்ரீருத்ரம், லிங்க புராணம் ஆகிய அருள் நூல்களைப் படித்து மனதை சிவனது நினைவிலே வைத்திருக்க வேண்டும் எனவும் -

சிவராத்திரி அன்று காலையிலே நீராடி, தூய ஆடை அணிந்து "சிவபெருமானே! இன்று சிவராத்திரி விரதம் இருக்க விரும்புகின்றேன். அதற்கு உகந்த மனநிலையையும், சூழ்நிலையையும் தந்தருள்வாய். காமம், கோபம், மோகம் போன்ற விரோதிகள் என்னை அணுகாமல் இருக்க அனுக்கிரகம் செய்வாய்" என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்யவேண்டும் என்றும் - குறிப்பிட்டுக் கூறியுள்ளன.

அத்துடன் பகல் முழுவதும் ஜபம், தியானம், நாம சங்கீர்த்தனம், பாராயணம் போன்றவற்றில் ஈடுபட வேண்டும் என்றும் -

மாலையில் வீட்டில் சுத்தம் செய்த இடத்தில் அல்லது பூசையறையில் சிவபெருமானின் படத்தையோ அல்லது சிவலிங்கத்தையோ ஒரு பீடத்தில் அலங்கரித்து பிரதிஷ்டை செய்யவேண்டும் என்றும் -

இரவு நான்கு ஜாமங்களிலும் தவறாமல் சிவபூஜை செய்ய வேண்டும் என்றும் - குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு ஜாமம் என்பது மூன்று மணிநேரத்தைக் குறிக்கும். மாலை ஆறுமணி முதல் அடுத்தநாள் காலை வரை பூசையில் ஈடுபடவேண்டும்.

இதற்கிடையில் இரவு 11.30 மணிமுதல் 1 மணிவரை உள்ள காலம் "லிங்கோற்பவ காலம்" எனப்படும். இதுவே பிரம்மாவும், விஷ்ணுவும் சிவபெருமானின் அடிமுடியைத் தேடிச் சென்றபோது, இறைவன் சோதிப்பிழம்பாக (ஒளிவடிவமாக) விஸ்வரூபம் கொண்ட நேரமாகும்.

இரவு முழுவதும் கண் விழிக்க முடியாதவர்கள் குறைந்த பட்சம் "லிங்கோற்பவ" காலத்திலாவது கண் விழித்து சிவபூசை செய்யவேண்டும் எனவும் -

குறிப்பிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சிவராத்திரி தினங்களில் முக்கியமாக இடம்பெறுவது நான்கு சாமப் பூசைகள் எனவும் -

அவற்றை முறைப்படி காண்பவர்கள் எல்லாவகையான செல்வங்களையும் பெற்றுக்கொள்வர் எனவும்-

சமய இலக்கியங்கள் தெளிவுபடுத்திக் கூறியுள்ளன.

## நான்கு சாமப் பூசைகள்

நான்கு சாமப் பூசைகளும், அவற்றில் கடைப்பிடிக்க வேண்டியவையும் வருமாறு:-

## முதலாம் சாமப்பூசை

முதலாம் சாமப் பூசையில் பஞ்ச கௌவ்யம் கொண்டு சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து, செம்பட்டு ஆடை அணிவித்து, அரிசி அட்சதை இட்டு, பொன் ஆபரணங்கள் சாற்றி, வில்வஇலை, தாமரை, அலரி மலர்களால் அர்ச்சித்து, பச்சைக் கர்ப்பூரம், சந்தனம் சேர்ந்த தூபமூட்டி, புஷ்பதீபம் காட்டி, முற்கான்னம், வில்வம் பழம், பாலன்னம் நைவேத்தியம் செய்து ரிக் வேத பாராயணம் செய்து பூசை செய்ய வேண்டும்.

## இரண்டாவது சாமப் பூசை

இரண்டாவது சாமப் பூசையில் பஞ்சாமிர்தத்தால் அபிஷேகம் செய்து, மஞ்சள் ஆடை சாற்றி, யவை அட்சதையிட்டு, மரகத ரத்தினாபரணம் அணிவித்து, துளசி, வில்வ இலைகள், சண்பகம், தாமரை மலர்களால் அர்ச்சித்து, அகிற்புகை காட்டி, நட்சத்திர தீபம் ஏற்றி, பலாப் பழம் மற்றும் பாயாச அன்னம், பரமான்னம் நைவேத்யம் செய்து யஜுர் வேதம் ஓதி வழிபட வேண்டும்.

## மூன்றாம் சாமப் பூசை

மூன்றாம் சாமப் பூசையில் தேன் அபிஷேகம் செய்து, வெண்பட்டு அணிவித்து, கோதுமை அட்சதையிட்டு மாணிக்க ஆபரணம் சாற்றி, முட்கிலுவை, வில்வம், அருகு இலைகளாலும், செங்கழுநீர், அத்தி, பிச்சி பூக்களாலும் அர்ச்சித்து, கஸ்தூரி கலந்த சந்தனம்,பச்சைக் கர்ப்பூர தீபமூட்டி, பஞ்சமுக தீபம் காட்டி, கிருசரான்னம், மாவும் நெய்யும் சேர்ந்த பலகாரங்களைப் படைத்து சாமவேதம் பாராயணம் செய்து, சிவபெருமானை வழிபடவேண்டும்.

## நான்காம் சாமப் பூசை

நான்காவது சாமப் பூசையில் கருப்பஞ்சாறு அபிஷேகம் செய்து நீலப்பட்டு அணிவித்து, அரிசி, உளுந்து, பயறு போன்வற்றை அட்சதையாக இட்டு, முத்தாபரணம் சாற்றி விளா இலை, நந்தியாவர்த்தம், நிலோத்பலம் போன்ற நறுமணப் பூக்களைச சாற்றி புனுகு சேர்த்த சந்தனம், குங்குமப்பூ, தூபமூட்டி, வில்வ தீபமேற்றி, சுத்தான்னம், கோதுமை, சர்க்கரை, நெய் சேர்த்த உணவு வகைகளையும் பழவகைகளையும் படைத்து அதர்வண வேத பாராயணத்துடன் பூசை நிறைவு செய்து கொள்ளவேண்டும்.

வேதம் ஓதத் தெரியாதவர்கள் தேவாரம், திருவாசகம் போன்றவற்றை ஓதலாம்.

நிவேதனம் செய்பவர்கள் தம் வசதிக்கு ஏற்ப தமக்குப் பிடித்தவற்றைப் படைப்பதில் தவறில்லை. இந்த உண்மை அபிஷேகம் செய்வதற்கும் ஆபரணங்கள் அணிவதற்கும் கூடப் பொருந்தும்.

பூசையுடன் சேர்த்து இசையால் இறைவனை வழிபடலாம். சிவபெருமானின் பெருமைகளைக் கூறும் நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

சிவராத்திரி நாளன்று முற்றிலும் உபவாசம் இருப்பதுதான் நல்லது. அது முடியாதவர்கள், முதல் சாமம் வரையிலாவது உபவாசம் இருந்து விட்டு, விரதத்தை முடிக்கவேண்டும்.

விரத சமயத்தில் பாலும் நீரும் பழமுமே உண்பதற்கு உகந்தவை. பலகாரம் உட்கொள்வது உகந்ததல்ல.

சிவராத்திரி முடிந்த மறுதினம் மகேஸ்வர பூசை தினமாகும். அன்று பாரணை எனப்படும் உபவாசத்திற்குப் பிறகு உட்கொள்ளும் முதல் உணவை - சிவபெருமானுக்கு நிவேத்தியம் செய்தபிரசாதத்தை உட்கொள்ள வேண்டும். பகல் பொழுதில் சிவ்புராணங்களைக் கேட்க வேண்டும்.

## புராணக் கதைகள்

மகா சிவராத்திரியைப் பற்றி பல புராண வரலாறுகள் வழங்கி வருகின்றன. அவை அனைத்தும் மக்கள் மத்தியில் பக்தி உணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் அமைந்தவையாகவுள்ளன.

அத்தகைய கதைகள் சில வருமாறு:-

ஒரு சமயம் பார்வதி தேவி குறும்புத்தனமாக சிவபெருமானின் கண்களைப் பொத்தினாள். சிவபெருமானின் கண்களாக சூரியனும், சந்திரனும் விளங்குகின்றார்கள். எனவே விளையாட்டுக்காக பார்வதி தேவி இறைவனின் கண்களைப் பொத்தியதும் உலகெங்கும் இருள் சூழ்ந்தது.

உலக உயிர்கள் எல்லாம் இருள் சூழ்ந்த உலகிலே செய்வதறியாது கலங்கி அச்சம் கொண்டன. இந்தத் துன்பத்தில் இருந்து தங்களைக் காத்தருளும்படி தேவர்கள் சிவனைப் பூசித்துப் பிரார்த்தனை செய்தார்கள்.

தேவர்களின் பிரார்த்தனைக்கிணங்க சிவபெருமான் தமது நெற்றிக் கண்ணைத் திறந்தார். அப்போது அவரது நெற்றிக் கண்ணிலிருந்து பெரும் நெருப்புப் பிழம்பு தோன்றி வெளிப்பட்டது.

அதனைப் பார்த்து உமாதேவியார் அஞ்சினார். அம்பிகையின் அச்சத்தைப் போக்கும் பொருட்டு சிவபெருமான் அந்த நெருப்புப் பிழம்பைச் சந்திரனின் தண்ணொளியாக மாற்றியருளினார். அந்த இரவில் சிவனைப் பூஜிக்கும் வழக்கம் ஏற்பட்டு அதுவே சிவராத்திரியாக மாறியது என்று கூறுவது ஒருகதை.

பல கல்பங்கள் முடிந்து மக கல்பம் என்னும் பேரூழி முடிவி இறைவனிடம் அனைத்தும் ஒடுங்க இரவு - பகல் எதுவுமற்ற அந் நிலையில் அம்பிகை மட்டுமே ஈசனின் பேரூழிப் பெருந்தாண்டவ தைக் காணும் ஒரே சாட்சியா விளங்கி, மீண்டும் உலகங்க தோன்றவும், உயிர்கள் தழைக்கவு பொருட்டு இறைவனை அந்தக் கா ருள் வேளையில் போற்றி அர்ச்சித் வழிபட்டாள் எனவும் -

அந்த வழிபாடு உலகத் தோ றத்திற்கும் இயகத்திற்கும் காரண மாயிற்று எனவும் -

அதை நினைவு கொள்ளு வகையில் தோன்றியதே சிவராத்தி வழிபாடு எனவும் -

மகாஸ்கந்தபுராணம் கூறுகின்றது.

இறைவன் ஆலகால விஷ உண்டு உலகைக் காத்த அந் நாளின் இரவே சிவராத்திரி என்று ஒருகருத்து நிலவுகின்றது.

அடிமுடி காணஇயலாத அண்ண மலையாய் - சோதிப் பிழம்பாய் இறைவன் உயர்ந்த நாள் இரவே சிவராத்திரி என்பது மற்றொரு நம் பிக்கை.

புலிக்குப் பயந்து உயர்ந் வில்வ மரத்தின் உச்சியில் ஓர் இர முழுவதும் விழித்திருந்த வேட ஒருவன், இரவில் தூங்கி விழாம இருப்பதற்காக மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகக் கிள்ளிப்போட்டா எனவும் -

அந்த வில்வம் இலைகள் மரத் தின் கீழிருந்த சிவலிங்கத்துக்கு அர்ச்சனையாக வீழ்ந்தன என்றும்

தன்னையறியாமலேயே ஒரு சிவ ராத்திரி இரவில் உபவாசம், இர கண் விழிப்பு, அர்ச்சனை என் கடைப்பிடித்த வேடனுக்கு சிவபெரு மான் காட்சிகொடுத்து சிவபதப் பே ளித்தார் எனவும் -

**தொகுப்பு:- நித்தி**

வைதீகக் கதை ஒன்று உண்டு

சைவ நெறியில் எளிதில் மோட சம் அளிக்க வல்லவை நான்கு எனக் கூறப்படுகின்றது. அவை:-

அ) ஸ்ரீ ருத்ரம் அல்லது திரு முன்று பாராயணம்.

ஆ) காசியில் மரணம்.

இ) சிவார்ச்சனை.

ஈ) சோம வார, பிரதோஷ, சிவ ராத்திரி விரதங்கள்.

இத்தகைய சிவராத்திரியின் சிறப் புணர்ந்து அந்நாளில் பக்தியுடன் ஒழுகி சிவப்பேறு பெறுவோமாக!

*

## வீசுவதேன் குண்டை?

மனிதனை மனிதன் சுட்டு விழத்தும்
வஞ்சம் தொலையாதோ? ~ புவியில்
மனிதனை மனிதன் மதித்து நடக்கும்
வாழக்கை நிலையாதோ?

அன்பும் பண்பும் அறமும் மனிதர்
ஆளுமை ஆகாதோ ~ என்றும்
துன்பம் பகைமை துவேசம் எல்லாம்
தொலைந்தே போகாதோ?

மானிடர் யாவரும் ஒன்ற கலந்து
வாழ்ந்திடல் தீதாமோ ~ இங்கு
வீணிடர் பட்டுச் செத்து மடிந்து
வீழுதல் தோதாமோ?

வந்தவர் எல்லாம் போவது திண்ணம்
வாழ்க்கையில் ஏன் சண்டை? ~
இடையில்
வெந்து மடிந்து மானிடர் வீழ
வீசுவதேன் குண்டை?

புரிந்து கொள்வீர் தீராக் கோபம்
போராய் தானே முடியும் ~ இதனைத்
தெரிந்து கொண்டால் தர்ம உலகம்
சீக்கிரம் இங்கே விடியும்!

ஒன்று கலந்து பேசித் தீர்த்தால்
உண்மை இன்பம் வேர்விடுமே ~ என்றும்
கொன்று குவித்தால் மானிட வாழ்வே
குட்டிச்சுவராய்ப் போய்விடுமே!

தொல்லைகள் எல்லாம் நாமே இங்கு
தொடக்கி வைக்கின்றோம் ~ அந்தத்
தொல்லைகள் எல்லாம் நாமே இங்கு
தொலைத்து வைப்போமே!

- வ.சின்னப்பா -
தனங்கிளப்பு

# இந்த வார இராசி பலன்

**04-03-2000 இலிருந்து 10-03-2000 வரை**

| | | | |
|---|---|---|---|
| செவ் | வியா. சனி | | |
| சூ புத | இராசிச்சக்கரம் | | ராகு |
| வெ கே சந் | | | |
| | | | |

*மாற்றம்: அவிட்டம் - மகரம்இராசியில் சந்திரன் நிற்கும்.*

*9-3-2000 இல் - வெள்ளி கும்பம் இராசியில் மாறும்.*

*அரசியலில் திடீரெனச் சமாதானம் வரும் என எதிர்பார்க்க முடியாது. விதைத்தவர்கள் அறுவடை செய்யும் மட்டும் அவதிகள் இருக்கத்தான் செய்யும். சமாதானத்தை எல்லோரும் வரவேற்கிறார்கள். அதைச் செயற்படுத்துவதில்தான்*

## சோதிட சஞ்சீவி

*பலவித பேதங்களை நடைமுறைப் படுத்த முயல்கிறார்கள். நோயாளர், மருந்து, அதைக்கட்டும் வைத்தியர் முத்தரப்பும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். மக்கள், மாணவர்கள், தொழிலாளர்களைச் சமாதானப்படுத்துவது அரசியல்வாதிகளின் உச்சக் கட்ட செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. இந்தியா வடக்கே மனத்தையும், தெற்கே கண்பார்வையையும் செலுத்தியபடி இருக்கும். இலங்கை, இந்தியா மீது மேற்குலகம் சில அழுத்தங்களைப் பிரயோகிக்கும். கிழக்கு நாடுகளில் பொருளாதார மாற்றங்கள் தோன்றும். மழை, காற்று, பூகம்பங்கள் சில பகுதிகளில் தோன்றிச் சேதங்களைக் கொடுக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

## மேடம்

ஏமாற்றம் என்பது சட்டத்தால் வந்தால், உண்மைச் சுற்றவாளி மனம் கலங்கியபடி இருப்பார். தொழில் ஸ்தானத்தில் எவராவது ஏமாற்ற நினைத்தால் கொதித்து எழுவீர்கள். எனக்கென்ன மற்றவர்கள் ஆலோசனை சொல்வது? எனச் சீறுவீர்கள். என்னமாதிரி இந்த ஆள் நம்மை மடக்கப் பார்க்கிறார் எனச் சிலரை எண்ண வைப்பீர்கள். வசீகரப் பேச்சு, காணி பூமி சம்பந்தப்பட்ட செலவுகள் என்பன காணப்படும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். மாமன், மாமி, மச்சாள்போன்றவர்களுடன் மதிப்பாக நடந்து கொள்ளுங்கள். கண்கூச்சம், இருதய நோய், வயிற்றுவலி, சளி, வாய்வுத்தொல்லைகள் என்பன ஏற்படச் செய்யும். மருந்துத்துறை, பத்திரிகைத்துறை, நகைவேலைகள், போக்குவரத்துத்துறை, வியாபாரத்துறை போன்றவை தொடர்பான துறையினர் மாற்றங்களும் நன்மைகளும் அடைவார்கள். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.*

## இடபம்

சிலர் தாங்கள் நினைத்தமாதிரி சோதிடத்தை திசை திருப்பலாம் எனக்கருதுவது தவறாகும். உறுதியான அமைப்பு உள்ளவர்கள் தனி வழி, தன்வழியே சென்று கொண்டிருப்பார்கள். தொழில் ஸ்தானத்திலும் நீங்கள் தனிப்பாதையிலேயே சென்று கொண்டு இருப்பீர்கள். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். நண்பர்கள் ஊக்கம் தருவார்கள். தூரதேசப் பிரயாணங்கள் சிலருக்கு ஏற்படலாம். அமைதியான செயற்பாடுகள், எதிலும் கூடிய கவனம் செலுத்துதல் என்பன காணப்படும். உழைப்பதற்கும் உழைப்பவர்களுக்கும் கூடிய ஆதரவு தந்தபடி இருப்பீர்கள். கலைத்துறையில் கூடிய ஆர்வம் இருக்கும். நரம்புப்பலவீனம், சலவருத்தம், நெஞ்சுப்பதற்றம் என்பன இருக்கலாம். நிர்வாகத்துறை,ஹோட்டல் வேலைகள், தொழில்நுட்பத்துறை, மருந்துத்துறை, குருத்துறை போன்ற துறையைச் சேர்ந்தவர்கள் நல்ல இலாபங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வெள்ளி.*

## மிதுனம்

பெரியவர்களால் ஆக்கப்பட்ட சட்டதிட்டங்கள் சிறியவர்கள் விடும் பிழைகளைத் திருத்த மாத்திரமல்ல, பெரியவர்களையும் திருத்தும் என்பதை மறக்கக்கூடாது. தொழில் ஸ்தானத்தில் பெரியவர் - சிறியவர் எனப் பேதங்கள் காட்டாது நடந்து கொள்வீர்கள். அவசரப்பட்டு சில தவறுகள் விடுவீர்கள். குடும்பத்தில் வாக்குக் கலகம் ஏற்படும். எல்லோரும் உங்களை வாழ்த்த வேண்டும் என்ற எண்ணம் போலும். வரட்டுக் கௌரவம், உங்கள் அவசரபுத்தி உங்களைப் பல சங்கடங்களில் மாட்டிவிடலாம். என்வே நிதானமாக இருங்கள். இருமல், காய்ச்சல், சளி, வயிற்றுநோ, தலைவலி வாதவிறைப்பு என்பன கொடுக்கலாம். இடமாற்றங்களால் பொருள்கள் களவு போகலாம். வியாபாரம், நகைத்துறை, பத்திரிகைத்துறை, கடல்துறை, போக்குவரத்துத்துறை, கமிஷன்வேலை போன்ற துறைகளுடன் தொடர்பானவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:-புதன்.*

## கடகம்

மனிதர்களுக்குமனிதர் பிடிவாதத் தன்மை வித்தியாசப்படும். நன்மை தரும் பிடிவாதத்தால் பலர் நன்மை அடைவர். தனிமனிதப் பிடிவாதம் இழப்பைக் கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் உங்கள் நல்ல மனதைப் புரியாத சிலர் அவதூறு சொல்லித் திரிவர். நண்பர்கள் உதவி செய்வார்கள். அதனால் இலாபங்கள் அதிகரிக்கும். வீடு, வாகனச் செலவுகள் ஏற்பட்டாலும் சுகம் அடைய இடமுண்டு. புத்திரரால் அல்லது சகோதரங்களால் பலவித உதவிகள் கிடைக்கும். எதிர்ப்பாளரால் அவமானம் அடைபவராகவும் இருக்க நேரிடும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். வாய்வுத்தொல்லை, நெஞ்சுப் படபடப்பு, கைகால் பிடிப்பு, காய்ச்சல் என்பன கொடுக்கும். இடமாற்றம், தூரதேசச் செய்திகள் என்பன சர்வசாதாரணமாகும். செய்தித்துறை, கமிஷன்வேலை, மருந்துத்துறை, நகைத்துறை, புடைவை, சாய்ப்புச் சாமான் விற்பனைத்துறைபோன்றவை தொடர்பான துறையினருக்கு மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, புதன், வியாழன்.*

## மகாதேவா ஜோதிடம்

## சிங்கம்

நாம் ஊரை, பாடசாலையை விட்டுப்போனாலும் உறவை, உரிமையைப், பழக்கத்தை விட்டுப்போகவோ மாற்றவோ முடியாது அல்லவா? தனி வழியில் செல்லும் உங்களை சமுதாயத்தார் தப்பாக நினைக்கலாம். ஆனால் உங்கள் உறுதி நிலையில் நீங்கள் தளம்பக்கூடாது. சிங்கம் தனிராசா. எதற்கும் பின் வாங்க முடியாது. எனவே தொழில் ஸ்தானத்தில் வரும் சில எதிர்ப்புக்களைச் சமாளித்து வாருங்கள். நடப்பவை நல்லவையாகவே இருக்கும். எதையும் ஆராய்ந்தபடி இருப்பீர்கள். "எதையும், எவரையும் நம்பக் கூடாது. எந்தப்புற்றில் என்னபாம்பு இருக்குமோ?" என எண்ணாமல் இருக்க மாட்டீர்கள். வாய்வு, நெஞ்சுப்பதற்றம், கிருமித்தாக்கம், தலைப்பாரம், தடிமன், காய்ச்சல் என்பன வரலாம். விவசாயத்துறை, ஆசிரியத்துறை, கலைத்துறை, போக்குவரத்துத் துறை, வியாபாரத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, புதன், வியாழன்.*

## கன்னி

தோஷமுள்ள பூமியில் வீட்டு நிலையங்கள் எடுப்பதில் தடைதாமதங்கள் ஏற்படலாம். இதனால் எடுப்பவருக்கும் பூமிச் சொந்தக்காரர்களுக்கும் தர்க்கங்கள் வரலாம். எனவே நிதானமாக இருந்து செயற்பட வேண்டும். தோஷமுள்ள பூமியில் தொழில் செய்தாலும் விருத்தியோ, பொருளோ வந்து நிலைக்காது. நிதானமான பேச்சு எதிலும் வெற்றிதரும். வாகனச்செலவுகள் அதிகரிக்கும். மேலதிகாரிகளுடன் வாக்குவாதப்படச் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். சிரித்துச் சிரித்து காரியமாற்றி வெற்றி பெறுவீர்கள். நரம்புப் பலவீனம், நெஞ்சுச் சளி, வாய்வுத் தொல்லை, கைகால் பிடிப்பு, இடுப்புவலி என்பன ஏற்படும். செய்தித்துறை, கமிஷன், வியாபாரத் துறை,ரீ.வித்துறை, கடல்துறை, வியாபாரத்துறை போன்றவற்றில் முன்னேற்றங்கள் ஏற்படும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, புதன், வியாழன், வெள்ளி.*

## துலாம்

தகுதிக்கு முதலிடம் கொடுக்கும் சமநீதி கொண்ட மனம் உங்களுக்கு. இதைத் தவறாக எவரும் நினைக்க முடியாது. தொழில் ஸ்தானத்தில் நல்ல வரவேற்பு இருக்கும். தகுதிக்கு முதலிடம் கொடுப்பீர்கள். அதுபோல தரக்குறைவாக உங்களை எவர் நினைத்தாலும் மனவேதனை அடைவீர்கள். அன்பாகப் பேசி எதிலும் சாதித்து மற்றவர்களின் அபிமானத்தைப் பெற்றுவிடுவீர்கள். திடீர், திடீரெனக் கோபம் வரும். மறைமுக எதிரிகள் உங்களைக் கண்டு மனம் குழம்புவார்கள். வயிற்றுநோ, தலைவலி, தோல்வருத்தங்கள், வாய்வுத் தொல்லைகள் என்பன அடிக்கடி கொடுக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். தூரதேசச் செய்திகளால் திருப்தி இராது. போக்குவரத்துத்துறை, குருத்துறை, செய்தித் தொடர்புத்துறை, வியாபாரம், கடல் துறைபோன்றவை தொடர்புள்ளவர்களுக்கு நற்பலன்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, புதன், வியாழன, வெள்ளி.*

## விருச்சிகம்

பிறப்பு வருவதைத் தெரிந்தாலும் மனிதர்களுக்கு இறப்பு வருவது தெரியக்கூடாது. அதனால் பல துன்பங்கள் ஏற்படும். ஆனால் தொழில் ஸ்தானத்திலும் தொடக்க வளர்ச்சி தெரிந்தாலும் முடிவுகள் தெரிந்தால் எவருக்கும் மனச்சோர்வுகள் ஏற்படத்தான் செய்யும். எந்த முயற்சிகள் செய்தாலும் பயனற்றதாக இருக்கும் என்ற நிலை ஏற்படலாம். இருக்கும் இடங்களில் கள்வர்கள் தொல்லைகள் இருக்கச்செய்யும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். அல்லது அதனால் துன்பங்கள் ஏற்படலாம். பெரியவர்கள், நல்லவர்களின் உதவிகள் படிப்படியாகக் கிடைக்கும். வீட்டில் அமைதி வரும். சளி, கைகால் பிடிப்பு, தலைப்பாரம், காய்ச்சல் என்பன கொடுக்கும். போக்குவரத்துத்துறை, விவசாயம், தோட்டத் துறை, மருந்துத்துறை, இரும்புத் துறை, நிர்வாக வேலை செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

## தனுசு

ஷெல் அடித்தொல்லை, கொசுக் கடித்தொல்லை, போட்டி பொறாமைத் தொல்லை எனப்பல தொல்லைகளை மனிதசக்தி போராடித்தான் தீர்க்க வேண்டி இருக்கின்றது. எதனையும் எதிர்கொள்ள வேண்டும். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாளரால் வரும் எதிர்ப்புக்களைச் சமாளியுங்கள். மேலதிகாரிகள், நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். அயலவர்களுடன் நிதானமாக இருங்கள். செல்வாக்கு காரிய சித்திகளைக் கொடுக்கும். பொருள் வரும். படபடப்பு இருக்கும். சகோதரங்கள் உதவி செய்வார்கள். தூரதேசத்துச் செய்திகளால் நன்மைகள் ஏற்பட இடமுண்டு. வாகனச்செலவு அதிகரிக்கலாம். அடிகாயங்கள், வாய்வு, சளி, வயிற்று வருத்தங்கள் வரும். போதைப்பொருள்களை தவிர்த்து நடக்கவும். புதியதுறையில் நாட்டமொன்றுக்க திட்டமிட்டு வெற்றி பெறுவீர்கள். மருந்துத்துறை, ஹோட்டல்துறை, பத்திரிகைத்துறை, வியாபாரத்துறை, தொடர்பானவர்கள் பலவித நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:-புதன், வியாழன், வெள்ளி.*

## மகரம்

ஒவ்வொருவரும் தன் தொழில் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்க வேண்டும். என்ன மனச்சோர்வு? எதற்காக மௌனமாக இருக்கிறீர்கள்? தொழில் நிலையில் நேர்மையாகச் செயற்பட எவ்வளவு போராட வேண்டி இருக்கின்றது? போராடினாலும் அதிலொரு திருப்தி உண்டு. தொடர்ந்து நீங்கள் செயற்பட்டபடி இருங்கள். வீட்டில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டாலும் வெளியில் எல்லோரின் ஆதரவும் பெருகிவரும். வாகனச்செலவு உண்டு. வயிற்றில் பொருமல், நரம்புச்சோர்வு, தலையிடி, கைகால் பிடிப்பு, வாத உளைவு என்பன இருக்கும். நாடி வந்தவர்களெல்லாம் தேடித்தருவார்கள் பொருளை என நம்பாதீர்கள். தூரதேசச் செய்தியோ, இடமாற்றங்களோ பெரிதாக நன்மை தரா. பத்திரிகைத்துறை, ஆடைத்தொழில்,நகை வேலைகள், ரீ.வி, தொழில்நுட்பத் துறை, சாப்பாட்டுக் கடைகள், சாய்ப்புச்சாமான் விற்பனையாளர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, வியாழன், வெள்ளி.*

## கும்பம்

நாட்டிலும் சரி, வீட்டிலும் சரி, தலைமைப்பீடத்தில் ஒற்றுமை குறைந்தால், உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்புக்கள் கிளம்பியபடி இருக்கும். எனவே தொழில் ஸ்தானத்தில் தலைமைப்பீடத்தை அனுசரித்து நடவுங்கள். பல நன்மைகளும் மாற்றங்களும் தேடி ஓடி வரும். கலகம் பிறந்து, நியாயம் பிறக்கும் காலமாகும். மாற்றங்கள் செய்தால் நன்மைகள் கிடைக்கும். நாரிநோ, நரம்புச்சோர்வு, நெஞ்சுப் படபடப்பு, வாய்வுத் தொல்லைகள் என்பன வருத்தும். இடமாற்றங்கள் மனக்கவலையைக் குறைக்கும். பிரயாணங்களைச் செய்வதனால் இலாபங்கள், நன்மைகள் கிடைக்கும். தாயாருக்கு அல்லது தாய் வழியினருக்கு சுகயீனம் கொடுக்கும். பிரயாணத்துறை, செய்தி, பத்தரிகைத்துறை, கலைத்துறை, உணவுத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு பலமாற்றங்கள் ஏற்பட்டு நன்மைகள் கிட்டும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, வியாழன்.*

## மீனம்

மனிதர்களின் செயற்பாடுகளால் செல்வாக்குப் பெற்றுச் சிலர் விளங்குகின்றார்கள். இவர்களின் செல்வாக்கிற்கு எப்பொழுதும் பெறுமதி இருந்தபடி இருக்கும். அதனால் பல காரியங்களைச் சாதித்துக் கொள்கின்றார்கள். எனவே உங்கள் தொழிலில் நீங்கள் செல்வாக்குப்பெற - முன்னேற - உழையுங்கள். ஏழரைச்சனி 03.08.2000 உடன் நீங்கிவிடும். இதன் பின்பு நல்ல பலன்கள் வரும். சொந்தபந்தங்களின் உதவிகளால் நன்மை பெறுவீர்கள். இடமாற்றம், பிரயாணங்களால் அவதிகள் வரும். எனவே பொருள்களில் கவனமாக இருங்கள். நரம்புப் பிடிப்பு, தலைப்பாரம், சளி, காய்ச்சல், நாரி நோ, நெஞ்சழுத்தம் என்பன வரலாம். தொழிலால் இலாபங்கள் அதிகரிக்கும். குருத்தொழில், செய்தித்துறை, நிர்வாகத்துறை, வியாபாரம், விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, வியாழன்.*

## உயர்வு செய்ய வேண்டும்

மனிதன் என்ற பெயரைக் காக்கும்
மாண்பு உள்ளம் வேண்டும் – புது
வனிதம் சேர்க்கும் அன்பு நீதி
வாழ்வு தோறும் வேண்டும்.

அறிவினாலே உள்ளம் தன்னை
அடக்கி ஆள வேண்டும் – ஓர்
வெறி கொள்ளாத தெளிந்த உள்ளம்
வெற்றி காண வேண்டும்.

கல்வி என்னும் ஒளியின் வெள்ளம்
கலந்த இதயம் வேண்டும் – உயர்
செல்வம் அதனின் சிறப்பினாலே
சிறுமை அகல வேண்டும்.

எதையும் ஆழ்ந்து அனுகித் துணியும்
இயைபு நாளும் வேண்டும் – நம்
உதய காலப் பொழுது போல
ஒளிரும் உள்ளம் வேண்டும்.

பழமை என்று வெறுத்துத் தள்ளும்
பழக்க வழக்கம் யாவும் – உயர்
நிலமை நல்கும் புதுமைக் கோலம்
நியதி காக்க வேண்டும்.

அலையின்மீது துரும்பு போல
அலையும் உள்ளம் விட்டு – ஒரு
நிலையின் மாறா விரிந்த உள்ளம்
நிதமும் வளர்க்க வேண்டும்.

தத்துவங்கள் சொல்லி வைத்த
தர்மவான்கள் வாழ்வு – நம்
புத்தி தன்னை பட்டை தீட்டி
புதுமை புரிய வேண்டும்.

பிஞ்சு மனங்கள் நன்மை தீமை
பிரித்து அறிவதில்லை – அவர்
நெஞ்சு மீதில் வாழ்க்கை நீதி
நித்தம் உரைக்க வேண்டும்.

இன்று செய்யும் தவறை எண்ணி
இதயம் நாளை நோகும் – நாம்
ஒன்று கூடி உலக வாழ்வில்
உயர்வு செய்ய வேண்டும்.

- வளலாய் ரஞ்சன

# வெள்ளை றோஜா முள்



## பாகம் II

15

கரோலுக்கு வாழ்க்கை வெறுத்தது. என்னதான் ஜெசியும் ஜோனும் அன்பாக இருந்தாலும் மீண்டும் மனக் கட்டுப்பாட்டை இழக்கும் நிலைமையில் அவள் இருந்தாள். அவளுக்கு வேண்டியதெல்லாம் டானியல். அவளது தேவையும் தேடலும் ஜெசிக்கும் ஜோனுக்கும் புரிந்தன.

டானியலையும் கரோலையும் சேர்த்து விட ஜெசி துடித்தாள்; ஜோனிடம் வாதாடினாள்.

சேர்த்துவிட்டால் பின்பு பிரிக்கக் கூடாது. மேனோ மேவினோ வரும்போது கூறுபோட இயலாமற் போய்விடும் என்பது ஜோனின் வாதம். கொடுத்த வாக்கை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்பது ஜோனின் இலட்சியம்.

மேனோ மேவினோ இந்தப்பக்கம் வரப்போவதில்லை என்பது ஜெசியின் வாதம். வங்கி லொக்கரைக் காலிபண்ண மேன் தன்னிடம் விவரங்களைக் கேட்டதாக கரோல் கூறி



இருக்கிறாள் . வங்கியில் கொள்ளை நடந்தும் விட்டது.

கொள்ளையடித்ததை இங்குதான் புதைக்க வருவான் என எதிர் பார்த்த ஜோனுக்குச் சற்று ஏமாற்றம். கொள்ளை முடிந்ததும் டானியலை ஏற்படைப்பதாக மேன் கொடுத்தவரம் பற்றிக் கரோல் அடிக்கடி புலம்புகிறாள்.

கொள்ளை போன செய்தி கேட்டுக் கரோல் அதிரவில்லை. மாறாகச் சந்தோஷப்பட்டாள். டானியலை எட்டும் நாள் நெருங்குவதாகக் கனவு கண்டாள்.

**சிவநேசன்**

காட்டில் உலாவரும்போது டானியலுடன் இந்தக் காட்டிலேயே வாழலாம் என்று கரோல் சொல்வதைக் கேட்டு ஜெசி பரிதாபப்படுவாள்.

கதையைக் கேட்டுக் கேட்டு உருகிய ஜோன் டானியலைச் சற்று வசதியாகச் சிறைவைத்தான். ஆள் ஆளாக மைக், டானியல், கரோல் என்று வைத்துப் பராமரிப்பது அவனுக்கோ மிகவும் ஜோலியாகப்பட்டது.

இவர்களின் இளக்கத்தைக் கண்ட கரோல் அடம்பிடித்தாள்; உண்ணாவிரதம் இருந்தாள்; கலகலவென்று சிரிப்பாள்; பைத்தியம் போலாகிவிட்டாள்; கெஞ்சுவாள்; அழுவாள், மிரட்டுவாள்; மிஞ்சுவாள்.

கரோலின் மனநிலை மீண்டும் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் ஜோனிடம் பிறந்தது. அவளை இயன்ற அளவு தெம்புடன் வைத்திருக்க அவன் படாதபாடுபட்டான். ஆனால் டானியலைப்பற்றிய ஏக்கம் அவளை அமைதியடைய விடுவதாக இல்லை.

இருள் கவியும் நேரம். இனி மேன் வரமாட்டான் என முடிவெடுத்த ஜெசியும் ஜோனும் கரோலை டானியலுடன் சேர்த்துவிடுவது பற்றிச் சிந்தித்தார்கள். காலக்கெடு முடிவடைந்துவிட்டது. இவர்களைக் கொண்டு போய் நகரத்தில் விட்டு விட்டு மாறிவிடல் வேண்டும்.

அதற்கிடையில் இருந்ததோடு இருந்ததாக பத்து நாள்கள் இருவரும் சந்தோஷமாக இணைந்து நிம்மதியாக இங்கே இருந்துவிட்டுப் போகட்டும். போகிற இடத்தில் நிம்மதி கிட்டுமோ என்னவோ என்றாள் ஜெசி.

இணையவைக்க முதல், இறுதியாக மேனிடமும் மேவினிடமும் கண்டிப்புடன் பேசிவிட நினைத்தான் ஜோன். இன்றிரவு புறப்பட்டுப்போய் இருவருக்கும் கோல் கொடுத்து விட்டுத் திரும்பவேண்டும். தனது தொலைத்தொடர்பு சாதனங்களை இதற்கெல்லாம் பாவிப்பது புத்திசாலித்தனமாகாது எனக் கருதினான் அவன்.

தலைக்குமேல் வெள்ளம் போய்விடுமோ என்ற ஏக்கத்தில் மேன் இருந்தான். கரோலை ஜோனின் இஷ்டத்துக்கு விட்டுவிடுவதாகக் கூறிவிட்டான். மைக்கைப் பராமரிக்கத் தேவையானதெல்லாம் தருவதாகவும் உறுதி கூறினான். மேவினோ தன்னால் பொலீஸ் தொல்லை தாங்கஇயலவில்லை என்றும் எந்த நடவடிக்கையிலும் இறங்கி விட இனி இயலாது என்றும் வாயலாகிவிட்டான்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு இனி இவர்கள் சோலிக்குள் தான் நுழையக் கூடாது என நினைத்தபடி காட்டுப் பண்ணைக்குத் திரும்பினான் ஜோன்.

ஜோனின் வருகையையும் முடிவையும் எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தாள் ஜெசி. மேசையில் விதவிதமாக இறைச்சி வகைகளை அவித்தும் சமைத்தும் பொரித்தும் குவித்து வைத்திருந்தாள் அவள்.

கைபட்டால் பூப்போல பிய்ந்து வரும் சதைத்திரள்கள் அவளின் சமையல் பாகத்தை எவரும் எட்டி விட இயலாமையைக் காட்டிநிற்கும். காட்டு இறைச்சிச் சமையலில் அவள் படு சூரி.

இயன்றளவு இயற்கையோடு ஒட்டி வாழவேண்டும் என்ற ஆவல் கொண்ட ஜோனுக்கு சூழலும் ஜெசியின் போக்கும் மிகவும் பிடித்திருந்தன.

டானியலும் கூட தன்னைப்போல ஓர் இயற்கைப் பிரியன் எனத் தெரிந்து கொண்டதால் அவன் மீது ஒருவகைப் பாசம் இழையோடி இருந்தது.

இரவுச் சாப்பாட்டு மேசையில் கரோலையும் டானியலையும் சந்திக்க வைக்கும் திட்டம் ஜோனையும் ஜெசியையும் இரட்டிப்பு உற்சாகத்துடன் செயற்பட வைத்தது.

படிப்படியாக தனது வசதிகள் அதிகரிக்கப்படுவதை அவதானித்து வந்த டானியல் இன்றைய விருந்துக்கான அழைப்பை வியப்புடன் ஏற்றான். ஜோனே நேரில் வந்து தன்னை உடை மாற்றுவித்து அழைப்பது ஏதோ நல்லது நடக்கப் போகிறது, என்ற அறிகுறியையே காட்டி நின்றது எனக் கருதினான். விருந்து மண்டபமோ மிகச் சிறியது. நவீன வசதிகள் பல கொண்ட காட்டுக் குடில்தான் அது. இப்படிப் பல குடில்கள் ஆங்காங்கே தென்படுவதை அப்பிரதேசத்தில் அவன் கண்டிருக்கிறான். ஒவ்வொன்றிலும் ஜோனின் இயற்கை ரசனை ஜொலிக்கும்.

மேசைக்கு வந்து அமர்ந்ததும் போத்தலை உடைத்து டானியலின் கிளாஸை நிரப்பிக்கொண்ட ஜோன் இன்று கரோலைச் சந்திக்கலாம் - இனி அவளோடு வாழலாம் என்று கூறிவிட..... கிளாஸில் நுரைபோல் மிதந்தது டானியலின் மனமகிழ்ச்சி.

அவன் ஏதும் பேசவில்லை. கேள்விகள் கேட்கவில்லை. ஜோன் சொல்லிக்கொண்டே போனான்.

"நீங்கள் இருவரும் இங்கு வேண்டுமானாலும் வாழலாம். எங்கு போயும் வாழலாம். மீண்டும் சிக்கல்களில் மாட்டுப்படக்கூடாது என்பதே எனதும் ஜெசியினதும் விருப்பம்.

"மைக்கிடம் இருந்து இனி உங்களுக்கு ஆபத்து ஏதும் வரமாட்டாது. வேறு யாராவது சோலி தரக் காத்திருக்கக் கூடும்."

இருவரும் பேசியபடி விஸ்கியைத் தொண்டைக்குள் இறக்கிக் கொண்டிருந்தனர். கரோலை இப்போது இந்த மேசைக்கே ஜெசி அழைத்து வருகிறாள் என்ற சேதி டானியலை என்னென்னவோ செய்தது. அடிக்கடி வாசலைப் பார்த்தபடி அவன் கிளாஸைக் காலி பண்ணிக் கொண்டிருந்தான்.

*　　*　　*

இவரும் இன்று இணைகிறார்கள் என்பது உறுதி செய்யப்பட்ட நிலையில் மிகவும் உற்சாகமாக இருந்தாள் ஜெசி. விரக்தியின் எல்லையைத் தாண்டி நிற்கும் கரோலுக்கு நிச்சயம் இந்தச் செய்தி பாலவார்க்கும் என்பதில் ஜெசிக்கு ஆனந்தம்.

செய்தியைச் சொல்லி கரோலைச் சாப்பாட்டு மேசைக்கு அழைத்துவர அவசரப்பட்டாள் ஜெசி. கரோலிடம் வந்து மெல்லக் கூப்பிட்டாள். கரோல் குரல் கொடுக்கவில்லை. இப்படி அடம்பிடிப்பதே அவளது வழக்கமாகிவிட்டது.

இருளில் கரோலைத் தேடித் துழாவின ஜெசியின் விழிகள். அவள் எங்காவது ஒளிந்திருப்பாள். அழுது கொண்டு சுருண்டு படுத்திருப்பாள். இன்னும் சில நிமிடங்களுக்குள் தான் செய்தி சொன்னதும் துள்ளிக்கொண்டு கிளம்புவாள் என்றெல்லாம் ஜெசி சிந்தித்தாள்.

டோர்ச் லைட்டை எடுத்து ஒளியைப் பாய்ச்சிக் கரோலைத் தேட முயன்ற கணம் ஒரு கராட்டி அடி விழ...டோர்ச் பறந்து மோதி விழுந்து உருண்டு உடைந்து போனது. மீண்டும் இருள்.

கரோலின் உலோகங்கள் குலுங்கும் சிரிப்பொலி அந்த அறையை நிரப்பியது. இன்று எப்படியும் தப்பிவிடல் வேண்டும் என நினைத்த அவள் கொடுத்த அடியில் ஜெசி மயங்கிப் போனாள். வெளியே இருளில் ஓட்டமெடுத்தாள் கரோல். திக்குத் தெரியாத காட்டில் ஓட்டமெடுத்த கரோலின் கால்கள் ஆங்காங்கே தொலைவில் தென்படும் குடிசைகளைத் தவிர்த்து ஓடின. கலைத்து வந்த ஜோனின் வேட்டைநாய்கள் அவளை மணந்து விட்டுத் திரும்பின.

பாதைகளைத் தவிர்த்து ஓட வேண்டியிருந்ததால் கால்கள் கரடு முரடான தரையில் மோதி வலியெடுத்தன. எக்கேடு கெட்டாலும் இனி இச்சிறையில் வாழவே முடியாது என்று ஓடிக்கொண்டிருந்தாள் கரோல்.

குடிசையொன்றிலிருந்து மூர்க்கமாகப் புறப்பட்டு வந்த மூன்று நாய்கள் அவளைக் கடித்துக் குதறின. கதறிக்கொண்டு அக்குடிசையை நோக்கி ஓடினாள் கரோல். உள்ளே போனவளுக்கு தாகம் தாங்க இயலவில்லை. மயக்கம் வருமாப்போல் இருந்தது.

அவள் குடிசைக்குள் வந்ததும் நாய்களை அதட்டி அடங்கிய குரல் எங்கோ கேட்ட ஞாபகம் இருந்தது. இருளில் உருவம் சரிவரத் தெரியவில்லை.

நடுவில் மேசையில் இருந்த கூஜாவில் உள்ள தண்ணீரை எடுத்து மூக்கு முட்டக் குடித்தாள். சுமார் அரைமணிநேரமாக ஓடிக் களைத்திருந்தாள். இரண்டு அல்லது மூன்று மைல்கள் ஓடியிருப்பாள். மயக்கம் பேட்டுத் தடாலென விழுந்தவளைச் சக்கர நாற்காலியில் இருந்த மைக் ஏந்திக் கொண்டான். கரோல் நிறையத்தேறி காட்டு உணவில் உருப்படியாகி இருந்ததாகப்பட்டது அவனுக்கு.

வேடன் கையில் வந்து விழுந்ததோ புறா?

(தொடரும்)

---

## உள்ளத்தில் நல்ல உள்ளம்

புன்னகை குடியிருக்கும் புகழ்வண்ணம் சேர்ந்திருக்கும்
மலரிதழினின் மென்மையதாம் மங்கையரின் மென்மையுள்ளம்
கற்பின் நெறியிருக்கும் கவின் கலைகள் நிறைந்திருக்கும்
இதயமெனும் வீணையிலே இசைக்கின்ற இராகமதாம்

பொன்னகை சூடாவிருக்கும் புன்னகை நிறைந்திருக்கும்
கவலைகள் தனையடக்கும் களங்கமிலாத் தாயுள்ளம்
தியாகத்தின் ஒளிச்சுடராம் திகழ் க்காவியங்கள் போற்றும்
திறமையான மதியினால் விதிதனை வெல்லுமுள்ளம்

குலமகள் குடியிருக்கும் நிறைவினையே கண்டிருக்கும்
கொண்டவன் தெய்வமாக கொலு விற்றிருக்குமுள்ளம்
மாது உள்ளம் கனிந்திருக்கும் மனைமாட்சி நிறைந்திருக்கும்
வறுமை வாட்டும் போதும் பொறுமை காட்டும் உள்ளம்.

சத்தியத்தின் பொக்கிஷமாம் சங்க இலக்கியம் கூறும்
வித்தாரக் கன்னியாய் விளங்கிடுவாள் கவிதையிலே
தாய்மை நிறைந்திருக்கும் தாலியது வேலி நிற்கும்
சேய்களின் வாழ்வினில் நிதம் சேவிக்கும் பண்புள்ளம்.

*- தர்ப்பணா சிறிமகாதேவன் -*

## 'ஏர் பிடிப்போன் தத்துவம்'

முதுகோடு பசியினால் வயிறொட்ட,
மூலையில் கிடந்த காற்புசல் நெல்லை
மனைவியின் கண்சுட்ட,
மணந்தவன் கையில் சிறிது பரபரப்பு,
ஆனாலும்,
பரபரப்பு சிலநொடியில் மறைய,
உறுதி பிறக்கிறது
ஆம்!
மூலையில் கிடப்பது விதைநெல்
'எதிர்காலப் பசி நீங்க, இன்றைய பசி தாங்கி'
ஏர்பிடிப்போன் உள்ளத்தில் உருவான
பொருளியல் தத்துவம், அரசியல் புத்தகம்

- புத்தூர் வே. இளையகுட்டி -

---

## குறள்வெள்ளம்

தத்துவம் பேசிப் பயனில்லை. எப்படியும் பழிக்குப் பழி வாங்கும்போது ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது. அதை வள்ளுவரே ஒப்புக்கொள்கிறார்.

நாக்கைப் பிடுங்குமாப்போல் நாலு கேள்வி கேட்டு வீராவேசம் கொண்டு விட்டால் கொஞ்சம் நிம்மதியும் தெம்பும் பிறக்கத்தான் செய்யும். அந்த இன்பம் ஒரு நாள்தான் நிலைக்குமாம் என்பதும் உண்மைதான். இதனையே *'ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்'* என்கிறார்.

அப்படியானால் பொறுத்தார்க்கு ஏது இன்பம்? ஒறுத்தார்க்கு ஏற்படும் இரத்தக்கொதிப்பு பொறுத்தார்க்கு ஏற்படுதல் இல்லை. பொறுமை தரும் சுகமோ பெரிதாகத் தென்படாவிட்டாலும் நிலைத்து நிற்கும்.

பொறுத்தார் என்ற பெயரும் புகழும் அவர் வாழும் வரை மட்டுமல்ல இவ்வுலகம் வாழும்வரையும் *'பொன்றும் துணையும்'* நிலைக்கும். எனவே ஒருநாள் சுகத்துக்கு அலைய வேண்டா என்கிறார்.

**ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்.** - 0156

*- அம்பிகைபாகன்.*

# என் பிரிய பூமிக்காக...

விஞ்ஞான ரீதியான கற்பனைத் தொடர்

15

நீலக் கதிர்கள் அவர்கள் கடந்து வந்த பிரதேசத்தை அங்குமிங்குமாய் வெட்டிப் பரந்தன. இவானின் குரலில் அளவற்ற திகில் கலந்திருந்தது.

"சிசிலியா...அவர்கள் எச்சரிக்கையடைந்து விட்டார்கள்... தாங்கள் புதைத்த வில்லைகளை யாரோ எடுத்து விட்டதாகச் சந்தேகிக்கிறார்கள். அவர்கள் எங்களைத் தேட முயற்சித்தால்..."

"முடியாது இவான்...எனக்கு. இனிச் சற்றுத் தூரமேனும் ஓடுவதற்கு முடியாது...நீ விரைந்து செல்...எப்படியேனும் அவர்களின் கதிர்களுள் அகப்படாமல் தப்பித்து விடு..." சிசிலியாவின் குரலுக்கு பதிலளிக்காமல் ஒரு கணம் சிந்தித்த இவான் தன் தோள் பையைத் திறந்து தலைகீழாய்க் கவிழ்த்தான்.

கதிர்கள் இன்னமும் அவர்கள் இருந்த இடத்தைத் தாண்டிச் செல்லவில்லை. நாசகாரிகள் இன்னமும் சில மீற்றர்கள் இவர்களை நோக்கி வந்தால் போதும். கதிர்கள் இலகுவாய் இவர்களைத் தாக்கும்!

இவான் கீழே சிதறுண்டிருந்த பொருள்களுள் தேடி அவற்றை எடுத்தான்.

"சிசிலியா இந்தக் குளிசையை மென்று விழுங்கு...இதுதான் இப்போதைக்கு நம்மால் முடிந்த அதி உச்ச முயற்சி..."

"என்ன இவான் இது...?"

கதிர்கள் மிக அருகே வரத் தொடங்கியிருந்தன.

"இது உடம்பின் மற்றைய பகுதிகளுக்கு இரத்த ஓட்டத்தை அதிகரித்து... மூளைக்குச் செல்லும் இரத்தத்தின் அளவைக் குறைத்துவிடும். அதனால் விழுங்கிய சில நிமிடங்களிலே மயக்கம் வந்து விடும். நினைவுகள் எதுவும் எழாத வெற்று உடலாக மாற்றி விடும் மயக்கம்...!" சிசிலியா குளிசையை மென்று விழுங்கினாள்.

"அப்படியெனில் அவர்கள் எங்களிலிருந்து 400 மீற்றர் தூரத்திற்குள் வந்தாலும் எங்களிலிருந்து எண்ண அலைகள் வெளிப்படாதாகையால் அவர்கள் எங்களை அறிந்து கொள்ள முடியாது.. அப்படித்தானே?"

"ஆம் சிசிலியா... சிலமணி நேரங்கள் வரை எங்களுக்கு மிக அருகில் அவர்கள் வந்தாலும் எங்களை அவர்கள் கண்டுகொள்ள முடியாது. எண்ண அலைகளின் அதிர்வை வைத்து மட்டுந்தானே அவர்களால் மனிதர்களை அறிந்து கொள்ள முடியும். கட்புலன், செவிப்புலன், மோப்பப்புலன் எதுவும் அவர்களிடம் இல்லை..."

இவானின் கடைசி வார்த்தைகளைக் கேட்காமலேயே சிசிலியா விழிகள் செருக மெல்ல மயங்கிச் சரிந்தாள்.

"இதுதான்... இது மட்டுந்தான் இப்போது எங்களால் இயன்ற செயல்...இனி...இனி..."நினைவுகள் முற்றுப் பெறாமலே இவானையும் மயக்கம் தழுவிற்று.

மிகப் பிரமாண்டமான அந்தக் காட்டில், சருகுகள் நிறைந்திருந்த அந்த மரங்களடர்ந்த பகுதியில் உலகின் நன்மைக்காய்த் தங்களை அர்ப்பணித்த அந்த இளம் விஞ்ஞானிகள் நினைவற்றுத் தரையில் சரிந்திருந்தார்கள். உயிர் கொல்லும் அபாயக் கதிர்கள் தங்களுக்குச் சில அடி உயரமாய்க் காற்றைக் கிழித்துக் கொண்டு போனதைக் கூட அறியாமல் அவர்கள் நினைவிழந்து விழிமூடி மயக்கத்துள் அமிழ்ந்திருந்தார்கள்.

காற்றும் அசையாது நின்றிருந்தாற் போலிருந்தது. சூரியன் மேற்கினுள் முற்றாய் அமிழ்ந்துவிட அப்பிரதேசமெங்கணும் இருள் கவியத் தொடங்கியிருந்தது. அலைவுகளின் கதிர்வீச்சுக் குறைந்திருந்தது.

இப்போது அந்த நாசகாரிகளின் புரியாத மொழியிலான உரையாடல் காற்றின் அமைதியைக் குலைத்தது. வெண்கலத்தாலானது போன்ற அவைகளின் உருவங்கள் இவானும் சிசிலியாவும் நினைவிழந்து கிடந்த திசை நோக்கி நகரத் தொடங்கின.

சருகுகள் மிதிபடக் காலின் கீழ்ச் சின்னச் செடிகள் முறிந்து துவள அவைகள் நடந்தன. இடையிடையே தம்மிடையே உரையாடிக் கொண்டன. எந்த நிமிடமும் வெளிப்படத் தயாராயிருந்த - மரணத்தின் வாயிலுக்கு உயிர்களைத் தள்ளி விட வல்ல - தம்முடைய நீலக்கதிர்களுக்கு இரையாக எதிரிகள் அகப்படவில்லை என நினைத்தனவோ என்னவோ!

அவைகள் நடக்க நடக்க இவான், சிசிலியாவுக்கும் அவைகளுக்குமிடையான தூரம் மிகமிகக் குறுகிக் கொண்டிருந்தது. நேரமும் இரவின் கால்பாகத்தைக் கடக்கத் தொடங்கியிருந்தது.

நிக்கலஸின் பதற்றத்தைக் குறைப்பவனாய் சியாரா உரையாடிக் கொண்டிருந்தாலும் அவனுக்கும் உள்ளூரத் திகில் பிறந்திருந்தது. இரவு தொடங்கி இத்தனை மணிநேரமான பின்னும் கூட சிசிலியாவும் இவானும் இருப்பிடத்திற்குத் திரும்பவில்லை.

சாதாரணமான ஒரு நாளெனினும் அச்சமில்லாமல் அவர்கள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கலாம். இன்றோவெனில் அவர்கள் ஆராய்ச்சிக்காகச் சென்ற திசையிலேயே நாசகாரிகளின் ஊர்தியும் இறங்கியிருக்கிறது. அச்சத்தையும் திகிலையும் தள்ளிவிட முடியவில்லை.

"ஊர்த்தி இறங்குவது தெரிந்ததுமே இவர்கள் தங்கள் மின்னூர்தியை இயக்கத் தொடங்கியிருந்தால் இந்நேரம் வந்து விட்டிருக்கலாம்..." நிக்கலஸின் குரலில் துன்பங் கலந்திருந்தது.

"நல்லதையே எதிர்பார்த்துக் காத்திருப்போம் நிக்கலஸ். எங்கள் பணியின் உன்னதம் சாதாரணமாய் அந்தக் கதிர்களில் அவர்கள் மரணித்து விட அனுமதிக்காது என்று நம்புவோம்..."

"இவான் சின்னப் பையன்... யோசிக்காமல் துணிச்சலாய் செயற்படுவதாய் நினைத்து ஏதேனும் ஆபத்தைத் தேடியிருப்பானோ?"

"இல்லை நிக்கலஸ்... அவன் மிக நிதானமானவன். நிச்சயமாய் தன்னால் முடிந்தவரை தானும் சிசிலியாவும் தப்பிப்பதற்காய் முயற்சி செய்வான்..." சியாராவின் குரல் கனிவாயிருந்தது.

"அவர்களைத் தேடிப்போக வேறு ஊர்திகளும் இல்லை... அத்துடன் இந்த இருட்டில் அது சாத்தியமற்ற விடயம்..."

"நல்லதை நம்பிக் காத்திருப்போம்...!"

அவர்கள் அந்த இரவில் தம் நண்பர்களின் வருகையை எதிர்நோக்கி விழிமூடாமற் காத்திருந்தார்கள். நள்ளிரவு தாண்டிய வேளையில் இரவின் அமைதியைச் சிதறடித்துக் கொண்டு காதைக் கிழிக்கும் அதிர்வுடன் அந்த நாசகாரிகளின் ஊர்தி மண்ணை விட்டு நகர்வது தெரிந்தது. அடர் மரங்களின் மறைப்பையும் தாண்டி விண்ணில் மிக உயரமாய் எழுந்து வெண்ணீல வெளிச்சத்துடன் மேகங்களுள் அந்த ஊர்தி சென்று மறைவதை அவர்கள் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"நாசகாரிகளால் ஏதும் சிக்கல் ஏற்படாதிருந்தால் அவர்கள் விடிவதற்குள் நிச்சயமாய் வந்து விடுவார்கள்...!"

"ஆம்...இன்னும் ஐந்து மணி நேரங்களுள், விடிவதற்குள் அவர்கள் வந்துவிட வேண்டும்... இல்லாவிட்டால்..."

"வேண்டாம் சியாரா...அப்படி எதுவும் நினைக்க வேண்டாம்..."

மீண்டும் மௌனம் கனமான திரையாய் அவர்களில் விழுந்து கொண்டது. நிக்கலஸிற்குப் பொழுதை எவ்வாறு நகர்த்துவது என்பது தெரியவில்லை.

பகற்பொழுதில் செய்த பரிசோதனைகளின் ஞாபகம் வந்தது. பரிசோதனை அமைப்புகள் வைத்திருந்த இடம் நோக்கிச் சென்றான். வெவ்வேறு இரசாயனக் கலவைகளுள் வில்லை அமைப்புக்குள் இருந்த வெண்ணிறத் தூளைச் சேர்த்துப் பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறது.

கதிர்ப் பிரி கருவியின் துணைகொண்டு அவற்றில் உள்ள இரசாயன மூலக்கூறை, அதன் கட்டமைப்பை, அது ஆக்கப் பயன்பட்ட அணுக்களைப் பற்றித் தகவல்களைப் பெறமுடியும்.

இப்போது நேரமிருக்கிறது. அவர்கள் வருவதை எதிர்பார்த்தபடி நேரத்தை நகர்த்துவது கடினம். இப்போதே மிகுதி ஆராய்வுகளைச் செய்தாலென்ன? சியாராவிடம் சொல்ல அவனும் எழுந்து வந்தான். அவர்கள் ஆய்வைத் தொடங்கினார்கள். நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. சூழலும் நேரமும் தூக்கமும் மறந்து போக அவர்கள் தம் செயலுள் மூழ்கினார்கள்.

திடீரென்று நிக்கலஸின் குரல் நிசப்தத்தைக் கிழித்தவாறு உரத்து வியப்புத் தொனிக்க ஒலித்தது.

"சியாரா...இதோ...இங்கேபார்...!"

நிக்கலஸின் விழிகள் மின்அணு உருப்பெருக்கியுள் உற்று நோக்கிய வண்ணமிருந்தது.

சியாரா அருகே வர "இதோ இதைப் பார்...!" நிக்கலஸ் சற்றே நகர்ந்து கொண்டான்.

"ஆம்! மிகத்தெளிவான இரசாயனக் கட்டமைப்பு...உன் செயல் வெற்றியளித்திருக்கிறது. பாராட்டுக்கள் நிக்கலஸ்!"

"நன்றி. இன்னும் சற்றே உற்றுப் பார்...!"

"நீ எதைச் சொல்ல வருகிறாய்...?"

"அதன் மொத்த அமைப்பையும் கவனி சியாரா..."

சியாரா ஆழ்ந்து கவனித்தான். அவன் முகத்தில் இப்போது வியப்பின் ரேகைகள் தெளிவாகத் தெரிந்தன.

"உனக்கு எதனுடனேனும் இந்த அமைப்பை ஒப்பிடத் தோன்றுகிறதா சியாரா?"

சற்று நேர மௌனத்திற்குப் பிறகு சியாரா தலையை நிமிர்த்தினான்.

"ஆம்! மிக நன்றாக...!"

"எத்துணை அபாயமான ஒரு சேர்வை என்று தெரிகிறது..."


"மனிதகுலம் மொத்தமுமே மறக்கமுடியாத அந்த இரசாயனச் சேர்வையின் அமைப்பே இங்கும் தென்படும் என்பதைச் சற்றேனும் எதிர்பார்க்கவில்லை நான்!"

"பழைய உலகக் கட்டமைப்பு யுத்தங்களால் சிதைந்துகொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்தப் பல சமாதான அமைப்புக்கள் முயன்று கொண்டிருந்தவேளையில் ஓர் ஆக்கிரமிப்பு அரசாங்கத்தினால், மிகச் சரியாக இதே கட்டமைப்பைக் கொண்ட இரசாயனச் சேர்வையிலான ஓர் அணு ஆயுதம் கண்டு பிடிக்கப்பட்டது..."

"எனக்கும் அந்த வரலாறு ஞாபகமிருக்கிறது. இறுதியாய் ஏற்பட்ட மிகக் கோரமான அழிவுகள், இழப்புகள் எல்லாவற்றிற்கும் அந்த ஆயுதம்தானே காரணமாயிற்று!"

"ஆம்! நைதரசன் எனும் மூலகத்தை அடிப்படையாகக் கொண்ட அந்த இரசாயனச் சேர்வையைப் போன்ற மிக ஒத்த வடிவமுள்ள ஓர் இரசாயனச் சேர்வைதான் நாங்கள் கண்டெடுத்த வில்லை அமைப்புக்களிலும் மூலப்பொருளாக இருக்கிறது..."

"அப்படியானால்... மிகப் பயங்கரமான அணுவாயுதங்களைத் தயாரிக்கவல்ல இச்சேர்வைகளை இந்தவில்லை அமைப்புடைய உயிரிதானே இயல்பாய்த் தயாரித்து தன் உடலினுள் சேமித்து வைக்கிறதா?"



"அப்படியாகத்தான் இருக்க வேண்டும்... ஆனால் இதற்கு அந்தக் குறிப்பிட்ட வகையான 'பப்பிலியோனொய்டியே' உப குடும்பத் தாவரங்கள் எந்த வகையில் உதவி செய்கின்றன.?"

"..... ....... .........."

"என்ன பயங்கரமான ஒரு நிலை! பூமியின் தாவரங்களைப் பயன்படுத்தி இந்த வில்லை அமைப்பு உயிரிகள் மூலம் உற்பத்திசெய்யும் மிக ஆபத்தான ஒரு சேர்வை, ஒரு வேளை அவர்களினால் அழிவின் நோக்கத்துக்காகப் பயன்படுமானால்......"சியாராவின் முகம் திகிலில் உறைந்துபோனது... மௌனமாய்ச் சில நிமிடங்கள் கழிந்தன.

"சியாரா...பொழுதைப் பார்...! மிக நன்றாக விடிந்துவிட்டது. நாங்கள் கவனிக்காமல் இருந்துவிட்டோம்... இவானும் சிசிலியாவும் இன்னமும் வந்துசேரவில்லை...ஒருவேளை... அவர்கள் ஆபத்தில் சிக்கியிருப்பார்களோ...?"

அடுத்து என்ன செய்வது என்பது புரியாமல் அந்த விஞ்ஞானிகள் திகைத்து நின்றனர்.

*   *   *

வாரக்கணக்காகப் படுக்கையில் தஞ்சமடைந்திருந்ததனாலே நடை தள்ளாடியது. மெல்லச் சமாளித்து நடந்த சீலியா ஜோர்ஜின் அறை வாயிலை அடைந்துவிட்டாள்... கதவில் கையை வைத்து மெல்லத் தள்ளக் கதவில் அசைவு தெரிந்தது.

யாருமே எந்த நாளிலும் அவர் செயலை இடையூறு செய்ததில்லை என்பதனாலோ என்னவோ ஜோர்ஜ் கதவைத் தாளிடாமல் விட்டிருந்தார். சீலியா மெதுவாய்க் கதவை உட்புறமாய்த் தள்ளினாள். இதயத் துடிப்பு காதுகளில் துல்லியமாய்க் கேட்டது. நெற்றியோரமாய் வியர்வை அரும்பிற்று.

கதவு இன்னும் திறபட்டபோது அறையின் ஒருபக்கம் இருட்டாய்த் தெரிந்தது. 'ஏன்...? ஏன் அறை இருளாய் இருக்கிறது?' நினைவில் கேள்வி எழுந்தது. கதவை இன்னமும் நன்றாய்த் திறந்தபோது......

அறையின் மற்றப் பக்கத்தில் இருளைக் கலைத்துக்கொண்டே மென்னீல ஒளி பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதன் முன்னே... கண்களை மூடியவாறே ஜோர்ஜ் அமர்ந்திருந்தார்.

குமுதினி
(சங்கத்தானை)

சீலியாவுள் வியப்புப் பரவிற்று. 'எதற்காக...எதற்காய் இப்படி அமர்ந்திருக்கிறார்...?' ஓர் அடி உள்ளே எடுத்துவைத்தவள் அறையின் நிசப்தத்தைக் கலைத்த ஜோர்ஜின் குரல் கேட்டு அப்படியே நின்றுவிட்டாள். 'யாருடன் கதைக்கிறார்...?' புலன்கள் கூர்மையாகின. அவள் சிந்தனையைத் தொடர விடாமல் மீண்டும் ஜோர்ஜின் குரல் ஒலித்தது.

"உன் குரல் தெளிவாயிருக்கிறது..."

'.........................'

"நேற்று மாலை நான் சொல்லியிருக்கிறேன்..."

'.........................'

"மிக விரைவில் செயல்கள் தொடங்க வேண்டும்..."

'.........................'

"அவர்கள் உனக்குத் தகவல் தருவார்கள்..."

'....................'

சீலியா அசைவற்றுச் சிலையாய் நின்றாள். அவளால் நனவா கனவா என்பதைத் தீர்மானிக்க இயலவில்லை. அதுவும் கடைசியில் ஜோர்ஜின் வாயாலே அந்த வார்த்தையைக் கேட்ட பிறகு அவளுக்கு ஒரு கணம் எதுவுமே புரியாமல் போய்விட்டது...! அவர் சொன்ன வார்த்தைகள்...?

(தொடரும்)

## காலைக்கும் ஒரு பள்ளியெழுச்சி

குங்குமம் பூசியே குளித்தது வானம்
குளிரில் விறைத்தது பூக்களின் தேகம்
பொங்கியே வழிந்தது புதுக்குயிற் கீதம்
புவியிலே நடந்தது "இனிமையின்" பாதம்
மங்கையர் விழித்தனர்... கமழ்ந்தது வாசம்
மணிகளும் சிரித்தன... எழுந்ததே ஊரும்
கங்கைபோற் பரந்தது கடவுளின் நாமம்
காலையே... உடன்பள்ளி எழுந்திரு நீயும்

நீ எழுந்தே வரின் இருண்மைகள் போகும்
நீ முகம் காட்டினால் பனிக்குளிர் ஓடும்
நீ எழின் எம் விழி ஒளியினை மூழ்கும்
நீ வரின் உலகிலே எழில்... கொடி யேற்றும்
நீ வரின் புத்துணர்வு ஊறியே பாயும்
நீ வரின் துர்க்குணம், தாமசம் சாகும்
ஆக... நீதான் முதல் எழுந்திடல் நியாயம்
அழுகையை நாம்விட... உன்கரம் வேணும்


கனவுகள் நனவென மாறிடப் பண்ணு
கவிதையாய் மழைவரப் பூக்களும் மண்ணு
பிணங்களை மறைத்தெரி நிணங்களை உண்ணு
பிணிகளின் தலையெடு... பிழைகளை எண்ணு
இனிவரும் பொழுதெல்லாம் இனிமையே என்று
இயம்புக; புவியதின் முடியிலே நின்று
மனசிலே குறையிலா மனிதனே வென்று
மகத்துவம் புரியவை.... விடியலாய் வந்து

- அருணன் -

# "இயற்கையன்னை வடித்துத் தந்



விக்ரோறியா மகாராணி, அவரின் அலங்கார உடையில், கெம்பீரமான தோற்றத்தில்.



மலைக்கோட்டையும், சுவரில் காவலர்களும், மலைச்சரிவில் பார்வையாளருக்கென வெட்டப்பட்ட பாதையும் தெரிகின்றது.



சேர, சோழ, பாண்டியர்கள் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர் பட்டியலின்படி இப்பாறைகளின் பெயர் மூன்று புத்தியுள்ள மனிதர்கள் (THREE WISE MEN). பைபிள் கதையில் வருபவர்கள்.

**இயற்கை நியதிகளாகிய நீர், காற்று, வெப்பம் போன்றவை, சூழலில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றன, பூமியின் மேற்பரப்புத் தோற்றத்தை எங்ஙனம் வடிவமைக்கின்றன என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மண் அடைந்து பாறைகள் தோன்றிய இடங்கள் தொல்லுயிரியல் அறிஞர்களுக்கு நல்ல 'வேட்டையை'த் தரும் இடங்களாக அமையும்.**

## கல்லும் சொல்லாதோ கதை?

பூமியின் மேற்பரப்பு இயற்கை விசைகளினால் எங்ஙனம் வடிவமைக்கப்பட்டது என்பதற்கு வட அமெரிக்காவில் உற்றா(UTAH) மாநிலத்தில் உள்ள பிறையிஸ் மலைக் கணவாய் (BRYCE CANYON) ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. பிறிதொன்று இதற்கண்மையிலிருக்கும் உலகப் புகழ்பெற்ற பெரிய மலைக் கணவாய் (GRAND CANYON). மலைகளைச் செதுக்கி வடிவமைக்கும் இயற்கை விசைகளாவன:- வெப்பம், நீர், துகள்பனி (SNOW), பனிக்கட்டி, காற்று போன்றவையாகும். இவற்றினால் ஏற்படும் அரிப்பே (EROSION) பூமியின் மேற்பரப்பை வடிவமைக்கும். காற்றினால் அள்ளி வீசப்படும் மண் துணிக்கைகள் சிற்றுளிகளாகத் தொழிற்படும். இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக நிகழும் நிகழ்ச்சி. ஆயினும் இயற்கை விசைகளின் ஒருமித்த தொழிற்பாடு திறமைவாய்ந்த சிற்பியின் கைத்திறனையும் விஞ்சுவதுண்டு. பிறையிஸ் மலைக்கணவாயை உதாரணமாகக் கொண்டு கல்லின் கதையை ஆராய்வோம்.


பிறையிஸ் மலைக்கணவாயின் கதை அறுபது மில்லியன் வருடங்களுக்குமுன் ஆரம்பமானது. இப்பொழுதும் தொடர்கின்றது. இதுவொரு முடிவில்லாத தொடர்கதையாகும். (அரேபிய இரவு எறும்புக்கதை ஞாபகத்திற்கு வருகின்றதா? முடிவில்லாத கதைக்கு உதாரணமாக). அறுபது மில்லியன் வருடங்களுக்கு முன் இப்பிரதேசம் ஒரு பள்ளத்தாக்கு; நீரினால் நிரம்பியிருந்தது. அதனால் வண்டல், மணல், சுண்ணாம்பு 2000 அடிகள் தடிப்பளவிற்குப் படிந்தன. பூமிக்குள் ஏற்பட்ட மிகையான அழுத்தம் தென் உற்றாவை (UTAH) ஆறுதலாக மேலெழச் செய்தது. இங்ஙனம் கடல் மட்டத்திலிருந்து கிட்டத்தட்ட பத்தாயிரம் அடிகள் உயரம் வரை மேலுந்தல் நிகழ்ந்தது. அதனால் தேங்கியிருந்த நீர் வடிந்தோடவேண்டிய நிலை ஏற்பட்டது. மேலுந்தலின் போது பாரிய பாறைப் படுக்கைகள் வெடித்து தனிதனித்தொகுதிகளாகப் பிரிந்தன. இங்ஙனம் பிரிந்த பாறைத் தொகுதிகளில் ஒன்றுதான் பிறையிஸ் மலைக் கணவாய். இப்பாறைத் தொகுதியின் கூறுகள் சமமாக இல்லாமல், சில உயரமாகவும் சில பதிவாகவும் இருந்தன. அதனால் இவற்றின் மேல் அரிப்பு வேறுபட்ட அளவுகளில் நிகழ்ந்துள்ளன. பாறை எவ்வளவிற்கு உயரமானதோ அவ்வளவிற்கு அரிப்பு அதிகமாக விருக்கும். இங்ஙனம் பாறையின் முகங்கள் அரிக்கப்பட்டுப் பலவடிவங்கள் தோன்றின. இப்பிரதேசத்தில், வடிவமைப்பில் முக்கிய பங்காற்றிய "சிற்பிகள்" மழைநீர்,உருகும் துகள்பனி(இறுகுவதும் உருகுவதும், மீண்டும் இறுகுவதும் ஆகிய மாறி மாறி நிகழும் நிகழ்ச்சி), காற்றினால் அடிக்கப்படும் மண்துணிக்கைகள் ஆகும். (எறும்பூரக் கல்தேயுமானால், மண்துணிக்கைகள் உராய ஏன் தேயாது? ஆற்றுப் படுக்கைகள், கடற்கரைகளிற் கிடைக்கும் அழுத்தமான உருண்டைக் கற்கள் உராய்வின் பயனாகவும் அரிப்பின் பயனாகவும் ஏற்பட்டவையே).

## சிற்பங்களின் பெயர்கள்

தோற்றங்களைக் கொண்டு சிற்பங்களுக்கெல்லாம் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அவற்றுட் சில:- கடலாமை, அரட்டை அடிப்பவர்கள் (GOSSIPS), மகிழ்ச்சியான குடும்பம், தோரின் சம்மட்டி (THOR'S HAMMER), குரங்காட்டியின் குரங்கு, மூன்று புத்தியுள்ள மனிதர், இராணி விக்ரோறியா, பாதிரிகள், கோட்டைச் சுவரில் காவற்காரர்கள், ஊழியர்கள், பெரிய கோயில்கள் (CATHEDRALS), பிரார்த்தனையாளர்கள் - இன்னும் பல.

## சிற்பங்களினதும், பாறைகளினதும் நிறங்கள்

சிற்பங்களின் அளவுகள் ஒரு மனிதனின் உயரத்திலிருந்து பலநூறு அடிகள் உயரம் வரை பலதரப்பட்ட அளவுகளில் வியாபித்திருக்கும். இவை பலதரப்பட்ட நிறபேதங்களையும் காட்டும். சிவப்பு, வெள்ளை, ஊதா, பிரகாசமான சிவப்பு போன்ற பல வர்ணங்கள், பல அளவுகளில், ஆயிரக்கணக்கான பாறைகள் (சிற்பங்கள்) உண்டு. நாள், நேரத்திற்கு ஏற்ப ஒளியும் நிழலும் மாறுபட சிற்பங்களின் வடிவங்களும் நிறங்களும் மாறுபடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். காலையில் அழகான கபில நிறம், பொன்னிறம், ஊதா, நீலம் ஆகியவற்றுடன் நிழல் சார்ந்த இடங்களில் சிவப்பு நிறமும் தோன்றும். சூரியன் மேலெழ நிறங்களும் மாறி பிரகாசமான மஞ்சள், மஞ்சள் கலந்த பழுப்பு நிறம், செங்கற்சிவப்பு, செம்மஞ்சள் நிறங்கள் பிரகாசமான நீல வானத்தினாலும் செடிகளின் ஆழமான பசிய நிறத்தினாலும் மிகைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்படும். இந்நேரத்தில் சூரியனை மறைத்து முகில் நகர்ந்தால், மஞ்சள்களும் செம்மஞ்சள்களும் செந்நிறக்கபில நிறமாகவும், இரும்புக் கறள் நிறமாகவும் மாறும்; மீண்டும் சூரியன் தோன்றும்போது பொன்னிற செம்மஞ்சள் நிறம் தோன்றும். சில பாறைகள் நெருப்புத்தணல் போலச் சுவாலிக்கும். மிக உயர்ந்த சிகரங்களின் உச்சிகள் என்பு வெள்ளை நிறத்தில் பிரகாசிக்கும். இந்த நிறபேதங்களுக்குரிய காரணம் வேறுபட்ட நிலைகளில் ஒட்சியேற்றம் பெற்றிருக்கும் உலோகங்கள், சிறப்பாக மங்கனீசியம், இரும்பு. அதனால் இதைப் பாறையின் கறள் என்று குறிப்பிடலாம். பரும்படியான தாக்கம் செஞ்சிவப்பு ஒளி. அதனால் இச்சிகரங்கள் செஞ்சிவப்பு சிகரங்கள் (PNK CLIFS) என அழைக்கப்படுகின்றன.



கோபுரக்கூட்டம் பாறை முகப்பின்

## தொப்பிக்கடை (HAT SHOP)

இப்பிரதேசத்தில்,ஓர் இடத்தில், கற்தொப்பிகளை அணிந்த மெல்லிய தூண்கள் பல



கணவாயில் வளைந்து வளைந்து செல்லும் பாதை, மின் ஒளியில் பிரகாசிக்கின்றது.



கோயில்கள், கோபுரங்கள், பரிவாரங்கள் எனப் பலதும் பத்தும்.



பாறை முகப்பின் ஒரு பார்வை. பாறை முகப்பில் மனித உருவங்களும் முகங்களும் இலேசாகத் தெரிகின்றன. பாறை முகட்டில் பார்வையாளர்களும் 'போஸ்' கொடுக்கின்றார்கள்.

வுண்டு. இதைத்தான் தொப்பி
குறிப்பிடுவார்கள். இத்தூண்கள்
15 அடிகள் வரை உயரமுன
வொன்றும் தமது நிறையைத்
அளவிற்கு மெல்லியவை. ஆ
யாக ஒரு பாரிய பாறையை அ
இத்தொப்பிகளிற் சில தோன்க
யிருக்கும். இந்த இயற்கை
ஙனம் தோன்றியிருக்கும்? இப்ப
தில் மலைச் சிகரங்களில் இ
வரப்பட்ட களிமண்ணாலும்,
கூழாங்கற்களாலும் நிரம்பியி
இதற்குக் காரணமாகவிருந்த
மாறிவிட்டது. அண்மையில்
கால்வாயை ஏற்படுத்தியது. உ
பிரதேசத்தில் மழைத்துளிகள்
வேலையை ஆரம்பித்தன.
இடைப்பட்ட பகுதிகளிலுள்ள
கூழாங்கற்களும் அரித்துச்
பாறைகள் குடை போலச் செ
அவற்றிற்குக் கீழேயுள்ள பகு
களின் பாதிப்புக்கு உள்ளா
போன்ற அமைப்பைப் பெற்ற
தொப்பியணிந்த தூண்கள் தே

## குகன்

### அரிப்பின் வேக

இப்பிரதேசத்தில் வெளிப்ப
வேர்கள் அரிப்பின் வேகத்திற்
யாக அமைகின்றன. ஒவ்வொ
டத்திலும் கணவாயின் விளிம்பு
டப்படுகின்றது. புவிச்சரிதையிய
யில் நோக்கும் பொழுது இது
மான செயல். ஒரு மழை
தொடர்ந்து பிறையிஸ் கணவ
இருபதாயிரம் தொன் கூழாங்க
லும், அடையலும் புறியா
RIVER) வாயிலாக அள்ளிச்
இது கொலறாடோ ஆற்றைச்
RIVER OF GRAND CANY
டையும். இதிலிருந்து அரிப்பி
நீங்கள் உய்த்துணரலாம். அ
இங்ஙனமிருப்பதனால் கணவா
இடங்களைச் சென்று பார்
பாதைகளை சீர்நிலையில்
பெரும் பிரச்சினையான ஒரு

### சீவராசிகள்

இப் பிரதேசம் குடிமனையற்
விருப்பினும், தாவரங்களும்
முண்டு: சிறப்பாகத் தாவரங்
பிரதேசம் பச்சைப் பசேலென்

### புவிச்சரிதைக்கு அங்கிக் சுாப்பிர ஆதாரங்கள்

கணவாயில் பாயும் ஆறு பி
ஆழமாக வெட்டியுள்ளது. சி
தரை மட்டத்திலிருந்து அரை
மைல் ஆழம் வரை. அதன
படையமைப்பைக் கொண்டு
யையும், காலத்துக்குக்கா

## அங்கிகள் பல ஒவ்வொன்றும் ஒ

# ...த் தந்திருக்கும் சிற்ப விநோதங்கள்"



...ட்டம் பாறை முகப்பின் ஒரு பார்வை.

...இதைத்தான் தொப்பிக்கடையென்று
...வார்கள். இத்தூண்கள் 10 தொடக்கம்
...கள் வரை உயரமுடையவை. ஒவ்
...ம் தமது நிறையைத் தாங்கமுடியாத
...கு மெல்லியவை. ஆயினும் தொப்பி
...ந பாரிய பாறையை அணிந்திருக்கும்.
...பிகளிற் சில தொன்கணக்கில் நிறை
...ம். இந்த இயற்கை விசித்திரம் எங்
...தான்றியிருக்கும்? இப்பகுதி ஒருகாலத்
...லைச் சிகரங்களில் இருந்து அடித்து
... களிமண்ணாலும், பாறைகளாலும்,
...ற்களாலும் நிரம்பியிருந்தது. பின்,
... காரணமாகவிருந்த சிற்றாறு திசை
...டது. அண்மையில் ஆழமானதொரு
...யை ஏற்படுத்தியது. உலர்ந்த கரைப்
...தில் மழைத்துளிகள் தமது அரிப்பு
...யை ஆரம்பித்தன. பாறைகளுக்கு
...ட்ட பகுதிகளிலுள்ள களிமண்ணும்
...ற்களும் அரித்துச்செல்லப்பட்டன.
...ள் குடை போலச் செயற்பட்டதனால்
...குக் கீழேயுள்ள பகுதி மழைத்துளி
...பாதிப்புக்கு உள்ளாகாமல் தூண்
... அமைப்பைப் பெற்றன. இங்ஙனம்
...ணிந்த தூண்கள் தோன்றின.

## குகன்

### அரிப்பின் வேகம்

...தேசத்தில் வெளிப்படுத்தப்படும் மர
... அரிப்பின் வேகத்திற்கு ஒரு சுட்டி
...மைகின்றன. ஒவ்வொரு ஐம்பது வரு
... கணவாயின் விளிம்பு ஓர் அடி வெட்
...ன்றது. புவிச்சரிதையியல் அடிப்படை
...க்கும் பொழுது இது மிகவும் வேக
...செயல். ஒரு மழைவீழ்ச்சியைத்
...து பிறையிஸ் கணவாயின் அடியில்
...ிரம் தொன் கூழாங்கற்களும், மண
...டையலும் பறியா ஆறு (PARIA
... வாயிலாக அள்ளிச் செல்லப்படும்.
...லறாடோ ஆற்றைச் (COLORADO
...OF GRAND CANYON) சென்ற
... இதிலிருந்து அரிப்பின் வேகத்தை
...உய்த்துணரலாம். அரிப்பின் வேகம்
...ருப்பதனால் கணவாயின் முக்கிய
...ளச் சென்று பார்வையிட உள்ள
...ள சீர்நிலையில் வைத்திருப்பது
...ரச்சினையான ஒரு விடயமாகும்.

### சீவராசிகள்


...தேசம் குடிமனையற்ற பிரதேசமாக
...ம். தாவரங்களும் விலங்குகளு
...சிறப்பாகத் தாவரங்கள். அதனால்
... பச்சைப் பசேலென்று இருக்கும்.

### புவிச்சரிதைக்குரிய அங்கிக் கூர்ப்பிற்கும் ஆதாரங்கள்

...யில் பாயும் ஆறு பிரதேசத்தை மிக
... வெட்டியுள்ளது. சில இடங்களில்
...த்திலிருந்து அரை தொடக்கம் ஒரு
...ழம் வரை. அதனால் தரையின்
...ப்பைக் கொண்டு புவிச்சரிதை
... காலத்துக்குக்காலம் நிகழ்ந்த

நிகழ்வுகளையும் அங்கிக் கூர்ப்பையும் அறியக் கூடியதாயுள்ளது. சிறப்பாக பெரிய மலைக் கணவாயில் (GRAND CANYON) அங்கிகளின் உயிர்ச்சுவடுகள் (FOSSILS) படை படையாகவிருப்பதனால் ஒரு திறந்த புத்தகத்திலிருப்பது போல அங்கிக் கூர்ப்பை அறிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது. புவிச்சரிதைக்குரிய காலத்தைக் கொண்டு அங்கியின் காலத்தையும் தெரிந்த அங்கியின் காலத்தைக் கொண்டு புவிச்சரிதைக் குரிய காலத்தையும் கணித்துக் கொள்ளமுடியும். மேலும் சில இடங்களில் பாறை தலை கீழாகப் புரண்டு படையொழுங்கு மாறியிருக்கலாம். "புவித்தாயின்" "...டிவயிற்றில்" ஏற்படும் குமுறல்க...க்கு இது ஆதாரமாக அமையும்.

மொத்தத்தில் இந்த மலைக் கணவாய் புவி சரிதத்தின் ஒரு பதிவுப் புத்தகம்தான்.



கனவாயின் பிறிதொரு தோற்றம்



தூணும் தொப்பியும். தொப்பிக் கடையில் ஒன்று..


## ...கிகள் பலவிதம்
## ...வொன்றும் ஒருவிதம்



மலைக்கணவாயன் ஒரு தோற்றம் சித்திர, விசித்திர வேலைப்பாடுகளைக் கவனிக்கவும்



கோபுரப்பாலம் (TOWER BRIDGE). கோபுரங்களும், மேம்பாலமும், கீழே பாதையும்.



இயற்கை அமைத்திருக்கும் மேம்பாலம்.



மாரிகாலத்தில், இயற்கை தந்த ஆடை கட்டிய எழில் பிரதேசம். துகள் பனிப்போர்வையை யும் (SNOW) மேகக்கூட்டங்களின் போர்வை யையும் கொண்டுள்ளது.

## பழக்கத்தால் ஞானம் வருமா?

புத்தருக்கு நெருங்கிய உறவினரான ஆனந்தர் புத்தரைவிட வயதில் மூத்தவர். அவர், புத்தரின் சீடராவதற்குத் தனக்கு அதிக உரிமை இருக்கிறது என்று நினைத்தார்.

புத்தரிடம் வந்த அவர், "சித்தார்த்தா! நான் உனக்கு அண்ணன் முறை. நான் என்ன சொன்னாலும் நீ கேட்க வேண்டும். எனக்காக நான் சொல்லும் மூன்றை நீ கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். நான் உனக்குச் சீடனானதும் நீ அவற்றை விட்டு விடக் கூடாது" என்றார்.

"அந்த மூன்று செயல்கள் என்ன?" என்று கேட்டார் புத்தர்.

"முதலாவதாக, நான் எப்போதும் உன்னுடனேயே இருக்கவேண்டும். எந்தச்சூழ் நிலையிலும் புத்தமதக் கருத்துக்களைப் பரப்ப உன்னை விட்டு என்னை நீ வேறு நாடுகளுக்கு அனுப்பக்கூடாது. இரண்டாவதாக, நான் உன்னைச் சந்திக்க யாருக்கு அனுமதி தந்தாலும் நீ அவரைச் சந்திக்க வேண்டும். நள்ளிரவாக இருந்தாலும் 'முடியாது' என்று சொல்லக்கூடாது. மூன்றாவதாக, நீ உறங்கும்போது உனது அருகிலேயே நான் உறங்க வேண்டும். 'வேறு அறைக்குச் சென்று தூங்கு!' என்று என்னிடம் சொல்லக்கூடாது" என்றார் ஆனந்தர்.

"அப்படியே செய்கிறேன்" என்று வாக்குறுதி தந்தார் புத்தர்.

அதன்படி ஆனந்தர் நாற்பத்திரண்டு ஆண்டுகள் புத்தருடனே தங்கியிருந்தார். என்றாலும் அவர் ஞானம் பெறவில்லை.

வெகு தொலைவிலிருந்து வந்து புத்தரின் சீடர்களான சிலர் சில நாட்களிலேயே ஞானம் பெற்றதை அறிந்தார் ஆனந்தர். தனக்கு மட்டும் ஏன் ஞானம் கிடைக்கவில்லை என்று அவர் மனம் வருந்தினார்.

இறக்கும் நிலையில் இருந்தார் புத்தர். அப்போது அவரிடம் ஆனந்தர், "இரவும் பகலும் உன்னைப் பிரியாமல் நாற்பத்திரண்டு ஆண்டுகள் கழித்துவிட்டேன். இன்னும் நான் ஞானம் பெறவில்லை. நீ இறந்த பின்பு என் நிலை என்ன ஆகும்?" என்று கண்களில் கண்ணீர் வழியக் கேட்டார்.

மெல்லிய குரலில் புத்தர், "வாழ்க்கையைப் பற்றி நீங்கள் ஒன்றும் புரிந்துகொள்ளவில்லை. நீங்கள் ஞானம் பெறுவதற்கு நானே தடையாக இருந்திருக்கிறேன். நான் இறந்தபிறகு நீங்கள் ஞானம் பெற்றாலும் பெறலாம்.

"நீங்கள் என்னிடம் மூன்று வேண்டுகோளை வைத்தீர்கள். நான் அவற்றை



ஏற்றுக் கொண்டது உங்கள் வாழ்க்கைக்குத் தடையாயிற்று. நீங்கள் எப்பொழுதும் உங்களை என் அண்ணன் என்றே நினைத்துக் கொண்டீர்கள். மற்றவர்களை விட என்னிடம் உங்களுக்கு அதிக உரிமை இருக்கிறது என்று கருதினீர்கள். உங்களுக்காகத்தான் அந்த மூன்று வேண்டுகோளை நான் ஏற்றுக் கொண்டேன். என் இறப்புதான் உங்களுக்கு உதவி செய்யும்" என்றார்.

பிறகு புத்தர் இறந்து போனார்.

ஞானம் பெற்ற சீடர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடினார்கள். கடந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளில் புத்தர் என்னென்ன அறிவுரைகள் சொன்னாரோ, அவற்றை எழுதிவைக்க வேண்டும் என்று நினைத்தார்கள்.

அங்கிருந்த யாருமே புத்தருடன் நாற்பத்திரண்டு ஆண்டுகள் தொடர்ந்து இருந்ததில்லை. அத்தனை ஆண்டுகளும் புத்தருடன் இருந்த ஆனந்தரோ இன்னும் ஞானம் பெறவில்லை. அதனால் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள அவர் அனுமதிக்கப்படவில்லை.

கூட்டம் நடக்கும் இடத்திற்கு வெளியே ஆனந்தர் அமர்ந்திருந்தார்.

அவரது நிலை பரிதாபமாக இருந்தது. "புத்தரே! நான் உங்களுடன் நாற்பத்திரண்டு ஆண்டுகள் இடைவிடாமல் இருந்திருக்கிறேன். உங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒவ்வொரு சிறிய நிகழ்ச்சியும் என் உள்ளத்தில் பதிந்திருக்கிறது. ஞானம் பெறாதவர் என்பதால் எனக்கு இப்போது கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி இல்லையே! நான் என்ன செய்வேன்?" என்று ஆனந்தர் அழுது புலம்பினார். வாழ்க்கையே அழிந்து விட்டது போல் அழுதார்.

கண்ணீர் வெள்ளத்தில் நனைந்தார் அவர். அதனால் அவருடைய ஆணவம் நீங்கியது. குழந்தையைப் போல ஆனார் அவர். அப்போதே ஞானம் பெற்றார்.

வெளியே வந்த சீடர்கள் சில விளக்கங்கள் கேட்பதற்காக ஆனந்தரைத் தேடினார்கள். ஞானம் பெற்ற அவரைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

புத்தரின் போதனைகள் எல்லாம் அதன் பிறகு ஆனந்தர் தொகுத்தார்.

# "மூன்று தற்கொலைகள்"

"Exam pressure killed medical student" என்ற தலைப்பில் "SUNDAY LEADER" பத்திரிகை சமீபத்தில் ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் அதனை போட்டோ பிரதியெடுத்து யாழ். மருத்துவபீடத்தின் வாசலில் ஒட்டியிருந்தார்கள். எனது கவனத் திசைகாட்டியும் அதனில் குத்தி நிற்கவே நானும் அதனை வாசித்து பின்னர் போட்டோ பிரதியும் எடுத்து வைத்துக் கொண்டேன். அதில் ஹிசித்தா என்கின்ற 23 வயது நிரம்பிய களனி பல்கலைக்கழக மருத்துவ மாணவனின் தற்கொலை மரணத்தின் பின்னணியும் அதன் காரணங்களும் விளக்கப்பட்டிருந்தன. ஹிசித்தா மிகவும் கெட்டிக்காரன் (Exceptionally brilliant). அவன் ஜி.சீ.ஈ (உயர்தரப்) பரீட்சை எடுத்து விட்டு பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோது ஒரு முறை அவனை அவனுடைய அன்னை அழைத்து "நீ பரீட்சை முடிவு வந்ததும் என்ன செய்யப் போகிறாய்?" - என்று கேட்டார்.

"நான் டொக்ரர் ஆக வரப்போகிறேன்" - என்று பதில் வந்தது.

"இல்லை நான் கேட்டது.... நீ கணிதப் பிரிவிலா உயிரியல் பிரிவிலா படிக்கப்போகிறாய்?"

மீண்டும் அவனது பதில் மாறவேயில்லை.

"அப்படியானால் நீ அதிகம் கஷ்டப்படவேண்டியிருக்கும்" என்று மட்டும் அவள் குறிப்பிட்டுவிட்டு சென்றுவிட்டாள்.

இச்சிறிய சம்பவத்தின் மூலம் தன்னுடைய மகன் மற்றவர்களிடத்தில் இருந்து எவ்வாறு வேறுபட்டிக்கிறான் என்று அப்போது அவள் நினைத்து ஆச்சரியப்பட்டாள். அவன் புத்தளம் மாவட்டத்தில் முதன்நிலை மாணவனாக "3A,B" உடன் சித்தியடைந்து களனி மருத்துவபீடத்தில் கல்வியைத் தொடர்ந்தான். அங்கும் அவன் தனது திறமையை வெளிப்படுத்தத் தவறவில்லை. முதல் வருட பரீட்சையில் முதன் நிலை மாணவனாக தெரிவு செய்யப்பட்டான். ஒரு முறை பேராசிரியர் கார்லோ பொன்சேகா என்பவர் உடலமைப்பியல் பாடத்தை கற்பித்துக் கொண்டிருந்த சமயம் தவறாக ஒரு குறிப்பை வழங்கியபோது ஹிசித்தா எழுந்து நின்று "சேர் நீங்கள் தவறாகக் கற்பிக்கின்றீர்கள்" என்று குறிப்பிட்டான். பேராசிரியருக்கு கோபம் வந்திருக்க வேண்டும், எனினும் அவர் கோபத்தீயை மனதுக்குள் அணைத்துக் கொண்டு தனது அலுவலகத்துக்கு திரும்பி, புத்தகங்களைப் புரட்டி ஹிசித்தா சொல்வது சரியென அறிந்து கொண்டு பிழையை திருத்திக்கொண்டு ஹிசித்தாவிடம் மன்னிப்புக் கேட்டார்.

"ஹிசித்தா..... நீதான் ஒருமுறை என்னுடைய இடத்தை நிரப்பப் போகிறாய்" என மென்மையாக பதிலும் இறுத்தார்.


எனினும் 2ஆம்வருட பரீட்சையிலும் அனைவருடைய எதிர்பார்ப்பையும் நிறைவேற்ற வேண்டுமே என்ற ஏக்கம் அவனைத் தொட்டுப் படர்ந்தது. பல நாள்கள் நித்திரையின்றி அவதிப்பட்டான். புத்தகத்தின் மீது முகம் புதைத்து நித்திரைக்கு விடை கொடுத்தான். இருந்தும் அவனுக்கு படிப்பதற்கு பல விடயங்கள் இருப்பதாகத் தோன்றவே பயம் அவனைத் தொற்றிக் கொண்டது. தீராத மன உளைச்சலால் அவன் அவதிப்பட்டான்.

வீட்டில் ஒருமுறை பாய்ந்து சென்ற எலியைக் காலால் தட்டிய போது அது திடீரென இறந்து போகவே மிகவும் வேதனையால் துடித்துப் போய்விட்டான். 'நான்தானே அந்த எலியைக் கொன்ற பாதகன்' என நெஞ்சில் அடித்து அழுதிருக்கிறான். அவனது அழுகை ஓய்ந்து போக பல நாள்கள் சென்றதாக அவனது தங்கை கவலையுடன் தெரிவித்தாள். இச்சம்பவம் சிறுவனாக இருந்தபோது நடைபெற்றதெனினும், அவனது இரக்க குணம் (sympathy) எவ்வளவு ஆழம் பொதிந்தது என்பதை புரிய முடிகிறதல்லவா? எலியின் கொலையால் தவித்த ஹிசித்தா தன்னைத்தானே கொல்வதில் இரக்கம் காட்டாமல் போனது, ஹிசித்தாவின் மனநிலையில் ஏற்பட்ட பிறழ்வு நிலையைச் சுட்டிக் காட்டுகிறது. அவன் சாவதற்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட, புத்த சமய தத்துவ நூல் (Salthara Peraninithi) அவனது மேசையில் அப்படியே இருந்தது. புத்தசமய நூல் அவன் இறப்பதற்கான ஆத்ம பலத்தைக் கொடுத்ததா அல்லது அவன்பலவீனப்பட்ட மனநிலையில் இருந்தபோது அவனுக்கு ஆறுதலைக் கொடுத்ததா என்பது தெரியவில்லை. இச்சம்பவம் நடைபெற்ற மூன்று மாதங்களின் பின்னர் இன்னொரு தற்கொலையை யாழ். மருத்துவபீட மாணவன் புரிந்துள்ளான்.

இரவீந்திரன் சுரேஷ்குமார். வயது 22. வடமராட்சி துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவன். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் முதன்மை மாணவனாக வலம் வந்து, பல்கலைக்கழக கடலில் முத்தெடுக்க நுழைந்தான்.

திருநெல்வேலி, தாழையடி ஒழுங்கையில் தனிமையாக இருந்த அந்த வீட்டைச் சுற்றி சனக்கூட்டம் நிறைந்திருந்தது. அன்றைய தினம் இச்சம்பவத்தை கேள்வியுற்று நானும் போயிருந்தேன். பொலிசாரின் வருகைக்காக எல்லோரும் காத்து நின்றனர். அப்போது அங்கு வந்த சுரேஷின் ஆசிரியரும், பிரபல தாவரவியல் ஆசிரியருமான குணசீலன் இவ்வாறு குறிப்பிட்டார்:- "நான் எண்டாலும் இந்த வீட்டில் தனிமையாக இருந்தால் இப்படித்தான் நடந்திருக்கும்" என்று அவர் அந்த வீட்டுச் சூழலினைக் குற்றம் சுமத்தினார் .

சுற்றிவர பனைமரங்கள் நிறைந்த பரந்த பிரதேசத்தின் நடுவே தனிமையாக இருந்தது போல் தோற்றமளித்தது அந்த வீடு. வெளியே நின்று யாரும் கூக்குரல் இட்டாலும் உள் இருப்பவர்களுக்குக் கேட்காத அளவுக்கு அந்தச் சூழல் அமைந்திருந்தது. பேயுறையும் வீடு என்று நினைத்திருப்பார் போலும்.



காண்டீபன் என அழைக்கப்படும் சுரேஷுடன் ஒன்றாக தங்கியிருந்த மாணவனை இது தொடர்பாக அறிய முற்பட்டேன். அவனின் முகத்தில் சோகமும் பயமும் கலந்த கலவை அப்பிக்கிடந்தது.

"நாங்கள் முந்தி வேற இடத்திலயிருந்து இரண்டு நாளைக்கு முதல்லதான் இங்க வந்தம். எங்கட ஊர் வடமராட்சி எண்ட தால..... சனி, ஞாயிறு வீட்டுக்கு போயிருவம். சம்பவம் நடக்கிறதுக்கு முதல் நாள், நாங்கள் சுரேஷை வீட்டை போகேல்லையோ என்று கேட்டம். அவன் வரமறுத்துவிட்டான். இருந்தும் நாங்கள் அவனைத் தனிய விட்டிட்டு போயிட்டம்" என்று சொல்லிவிட்டு கண்ணை கசக்குகிறான்.

இன்னும் ஏதாவது கேட்டால் அவன் பெரிய சத்தமாக அழுது விடுவானோ என்ற பயம் கவ்விக் கொள்ளவே அந்த இடத்தை விட்டு விலகிக் கொள்கிறேன்.

சுரேஷின் அறையை நெருங்கி அவன் தூங்கிக் கொண்டிருந்த காட்சியை காண முற்பட்டேன். தாழிடப்பட்ட அறைகளின் ஊடே மின்னும் பல்பு எரிவது தெரிந்தது. சன்னல் கதவு திறந்திருந்தது. திறந்திருந்த சன்னல் கம்பிகளினூடு அவனது அறையை நோட்டமிடுகிறேன். ஒருவரை நிறுத்தி வைத்து கட்டி வைத்திருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது இன்னும் அவன் உயிருடன் இருக்கிறானோ என்ற ஏக்கம் மனதைத் துளைத்தது. மஞ்சள் நிறத்திலான நைலோன் கயிறு அவனது கழுத்தில் சுற்றியிருக்க அதன் உட்புறமாக வெள்ளை நிற பெனியனைச் சுற்றி கட்டியிருந்தான். கயிறு தனது கழுத்தில் காயத்தை விளைவிப்பதைத் தடுக்க முனைந்திருப்பான் போலும். கட்டிலில் விலக்கப்பட்ட போர்வையும், விரித்து வைக்கப்பட்ட பாடக்குறிப்பும் அப்படியே இருந்தன. மேசையில் வைக்கப்பட்ட 'அலாம்' மணிக்கூடு அதிகாலை 3.30 மணியை சுட்டிக்காட்டியது. 'அலாம்' அடித்த பின்னர் எழுந்து விடியற் காலையில்தான் இதைச் செய்திருப்பான் போலும். வழமையைப் போல் சுருக்கிடுகிறவர்களைப் போல் அல்லாது - நாக்கு வெளியே தள்ளாப்படாது - இருந்தது. வீட்டின் வளையில் நைலோன் கயிறு பல தடவைகள் சுற்றிகட்டியிருந்தான். இன்னும் திறக்கப்படாத பார்சல் ஒன்று மேசையில் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஐந்து இடியப்பங்களைச் சம்பலுடன் கட்டி வைத்திருந்தான். ஐந்து இடியப்பங்கள் இவனுக்குப் போதுமானதாகத் தோன்றவில்லை, ஏதோ வழமையாகச் செய்யும் காரியங்களில் இரவுச்சாப்பாடு எடுப்பது ஒன்றென்று நினைத்து வாங்கி வைத்திருப்பான் போலும்.

மனதில் விரக்தி, அதனால் உணவை விலக்கி, பசியுடன் படுக்கைக்கு போயிருக்கிறான். "பாவம் வீட்டுக் கஷ்டமோ தெரியேல்ல. அதாலதான்" அங்கு நின்ற ஒருவர் தனது கருத்தை வெளிப்படுத்தினார். அவனுடைய உடல் இறக்கப்பட்டு பின்னர் பிரேத பரிசோதனைக்காக யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மரண விசாரணையின் பின்னர் அவனுடைய மரணம் 'தற்கொலை' எனத் தீர்ப்பளிக்கப்படுகிறது.

அவனுடைய உடல் மருத்துவ பீடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது பலரும் விம்மியுடைத்து அழுதனர். மரணங்கள் மலிந்து போன தேசத்தில் நலிந்து போனவர்களின் மரணங்கள் பெரிதாகத் தெரியாதுவிடினும், சுரேஷ் இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு வந்து விட்டு இங்குள்ள சூழல் காரணிகளால் பாதிக்கபட்டுத்தான் மரணித்திருப்பானோ என நினைத்து நாங்களும் அவனது மரணத்திற்கு துாபமிட்டோமா என நினைத்தும் சிலர் அழுது கொண்டிருந்தனர். அங்கு நின்று அழுது கொண்டிருந்த பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தனது சொந்தப் பிள்ளையைத் தொலைத்து விட்ட தாயைப் போல தனது உணர்வலையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். சுற்றிவர தோரணங்களும் பதாதைகளும் நிறைந்து காணப்பட்டன.

சுரேஷின் உடல் அவனது சொந்த ஊரான துன்னாலைக்கு எடுத்து செல்லப்பட்ட போது பெருமளவு மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். வல்லை வெளியைத் தாண்டி உயர்ந்து நின்ற பனைகளால் சூழ்ந்த ஊருக்குள் நுழைந்த போது மில்லரின் நினைவுகள் அலையாய் வந்து குத்தி நின்றது. பின்சீற்றில் இருந்த இருவர் விக்கி விக்கி அழுவது தெளிவாகக் கேட்டது. மில்லரின் தற்கொலை மரணம், தியாகம், அர்ப்பணிப்பு என்றெல்லாம் விமர்சிக்கப்பட்ட இப்பிரதேசத்தில் இப்படியொரு மரணமா என எண்ணத் தோன்றியது. என் எண்ணங்களிற்கு தாழிட்டு சுற்றியிருந்த காட்சிகளில் மனதை விதைத்தேன். அங்கு விதைநெல் அறுவடையை மேற்கொண்டிருந்த விவசாயிகள் வேடிக்கை பார்க்காது கை கட்டி நின்றனர். பெரும்பாலும் பாடசாலை மாணவர்களால் அந்த வீதி நிறைந்திருந்தது. பரீட்சை எடுத்து விட்டுப் பலருக்கு சுரேஷ் பாடம் புகட்டியதன் நன்றியை அவர்கள் மறக்கவில்லை போலும்.

அவனது தங்கை சிந்துஜா இன்னும் அழுவதற்கு முடியாமல் கஷ்டப்பட்டாள். நீண்டு செல்லும் விக்கல்களுக்கு நடுவே கண்ணீர் அவள் கன்னங்களில் கோடுகீறியது. 'அண்ணா... அண்ணா' என்று சுரேசின் உடலில் தொப்பென்று விழுந்தாள். பாவம் 8ஆம் ஆண்டில் படிக்கும் சிந்துஜாவுக்கு எத்தனை இழப்புகள்! ஒரு முறை தந்தையார் குளத்துக்குக் குளிக்கச்சென்ற போது நிரந்தரமாகவே குளத்துக்குள் மூழ்கிப் போய் விட்டார். இச்செய்தியை கேள்வியுற்ற சிந்துஜாவின் அம்மா நிரந்தர மனநோயாளியாக மாறிப் போய் விட்டாள். அப்போது சிந்துவுக்கு ஐந்து வயதுதான் நிரம்பியிருந்தது. குடும்பத்தைக் கவனிக்கும் பொறுப்பும் சுரேஷின் கைகளிற்குச் சென்றது. வசதியாக இருந்த குடும்பம் வறுமையை வேண்டாத விருந்தாளியாக ஏற்றுக் கொண்டது. சுரேஷ் வீட்டு வேலை, சமையல், பள்ளிக்கூடம் என்று ஓடித்திரிந்தான். சிந்துஜாவுக்கு அண்ணாவின் சமையல் என்றால் அளாதிப்பிரியம். அண்ணா பல்கலைக்கழகம் வந்துவிடுவதால் சிந்துஜாவுக்கு அண்ணாவின் கைகளால் சமைத்த உணவை பரிமாறும் நிலை இல்லாமற் போய்விட்டது. அவளுக்கு வெறுப்புத்தான் ஏற்பட்டது. இருந்தாலும் சனி,ஞாயிறு என்றாலே சுரேஷின் வரவுக்காய் காத்துக் கொண்டிருந்தவளுக்கு சுரேஷ் பிணமாக வந்து சேர்ந்தது எவ்வளவு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்? சுரேஷின் தம்பி கமலகுமார் தானும் அண்ணாவின் வழியில் பல்கலைக்கழகம் புக எண்ணி உயர் வகுப்பை உயிரியல் பிரிவில் கற்றுக் கொண்டிருக்கிறான். கமலகுமாரின் கனவுகள் இப்போது சிதறிப்போக, வேதனையால் வெகுண்ட தீ அவனைச் சுட்டெரித்துக் கொண்டிருந்தது.

> **உயர்கல்வியின்போது கல்விச் சுமை தற்கொலைக்குத் தள்ளுகிறதா? ஆய்வு செய்யப்பட வேண்டிய கேள்வி இது.**

சுரேஷின் மரணத்துக்கான காரணம் அவனது குடும்ப பின்னணியால் நிகழ்ந்தா? அல்லது வறுமையைச் சமாளிக்க முடியாத நிலையினாலா? இல்லை. பல்கலைக்கழகத்தில் முதல் இரண்டு ஆண்டுகளில் ஏற்படுகின்ற அதீத சுமையா? எதனையும் கண்டறிய முடியவில்லை.

இருந்தும் சமீபத்தில் பெற்றதேர்வுகளில் அவனது சட்டம் மெச்சத்தக்க வகையில் அமைந்திருந்தது. இருப்பினும் சம்பவதினங்களுக்கு முன்னதாக தன்னால் படிப்பில் ஊன்றிக் கற்க முடியவில்லையென்றும் அதனால் தனக்கு நித்திரையின்மை ஏற்படுவதாகவும் தன்னுடைய நண்பர்களிடம் கூறியிருக்கிறான். அதே வேளை குறித்த ஒரு பாடத்திற்குரிய பரீட்சையை எதிர் நோக்கியும் இருந்தான். அப்பாடத்தில் மாணவர்கள் மேல் சுமத்தப்பட்ட சுமை அதிகம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் குறித்த பாடத்திற்குரிய பெறுபேறுகளில் அனேகர் பின்தங்குவதும் உண்டு. கடைசியாக அவன் தற்கொலை செய்த அறையில் இருந்த மேசையிலும் அப்பாடக் குறிப்பே விரித்து வைக்கப்பட்டிருந்தது.

ஆகப் படிப்பு சுமை ஒரு காரணமாக இருக்கலாமோ என்று எண்ணத்தோன்றுகிறது. இருந்தும் எளிதில் அதனை நம்புவதற்கான காரணங்களைத் தேட முடியவில்லை.

சுரேஷ்குமாரின் மரணம் தொடர்பாக மருத்துவபீடாதிபதி ராஜேந்திர பிரசாத்தைக் கேட்டேன். "சுரேஷின் மரணத்துக்கு அவனுடைய பாரம்பரிய அலகில் (GENE) பிரச்சினையிருப்பதாக எனக்கு எண்ணத் தோன்றுகிறது. இருப்பினும் அதனை நிருபிக்கமுடியாமல் உள்ளது. ஹிசித்தாவின் மரணத்தைப்போன்று சுரேஷிற்கு படிப்பு அழுத்தம் ஒரு காரணமாக இருக்கும் என்று நான் கருதவில்லை. இருப்பினும் இங்கு வருகின்ற அனைவருக்கும் புதிதாக ஒரு பாட அலகை சேர்த்துள்ளோம். நடத்தையில் விஞ்ஞானம் (Behaviour Science) என்கின்ற பாடப்பரப்பில் ஒவ்வொருவருடைய மனோ நிலைரீதியான உளைச்சலைக் குறைக்க முயன்று கொண்டிருக்கிறோம்" என அவர் மேலும் விவரித்தார்.

92ஆம் ஆண்டும் ஜனவரி மாதத்தில் யாழ். மருத்துவபீடத்தில் இன்னொரு தற்கொலை மரணம் ஏற்பட்டது! காந்தலிங்கம் சதீஸ்குமார் என்கின்ற 4ஆம் வருட மாணவன் உளவியல் பயிற்சி நெறியை மேற்கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு ஒரு தத்துவத்தைப் பரீட்சித்துப் பார்க்கும் எண்ணம் ஏற்பட்டது. அக்கருத்து இவ்வாறாக அமைந்திருந்தது.

"மூளைக்கான இரத்தப்போக்கை குறைத்து ஏற்படுகின்ற ஒட்சிசன் பற்றாக்குறையை (HYPOXIA) மையமாக வைத்து அதீத சந்தோச நிலையை (EUPHORIA) அடையலாம்" என்பதே அது. அதனை அவன்கழுத்தில் சுருக்கிடுவதன் மூலம் செய்யமுற்பட்டான். கழுத்தில் கட்டும் "ரையை" கையில் எடுத்துக்



சுரேஷ்குமார்

கொண்டான். மெல்ல மெல்ல கழுத்தில் சுற்றினான். கதிரையில் உட்கார்ந்து கொண்டே ரையின் முடிச்சுகளினுள் பேனையைத் திருகியாக பாவித்து மெல்ல மெல்ல முறுக்கினான். திருகுதல் வேகமாக வேகமாக அவன் மயக்கநிலைக்கு உட்படவே மீண்டும் அதனைத்தளர்த்த அவனால் முடியவில்லை. முடிவு, இருந்த இடத்திலேயே பிணமாகச் சுருண்டு கிடந்தான்.

இம்மூவருக்கும் சில ஒற்றுமைகள் இருக்கத்தான் செய்கின்றன. மூவரும் மருத்துவ மாணவர்கள். கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை புரிந்தவர்கள். ஹிசித்தாவும், சுரேஷும் கயிறுகளைப் பாவித்தனர். இருவரும் பல்கலைக்கழகம் நுழைந்த ஒரு சில வருடங்களுக்குள் தம்மை மாய்த்துக் கொண்டனர். இருவருக்கும் குடும்ப சூழல் ஒரு காரணமாக இருந்திருந்தால் அவர்கள் பல்கலைக்கழகம் நுழைய முன்னரே அதனைச் செய்திருப்பர். ஆகவே இருவரின் மரணத்தில் கல்வியால் ஏற்பட்ட அதிகளவு அழுத்தம் காரணம் என்பது புலனாகிறது. இருப்பினும் இதனை மறுக்கும் காரணிகளும் இருக்கத்தான் செய்கிறது என சிலர் வாதிடக்கூடும்.

தற்கொலைகள் இலங்கையை பொறுத்தவரை அதிகளவாக காணப்படினும் ஓர் அறிவுசார சமூகம் - மற்றவர்களின் மரணத் திகதியை பின்னுக்கு தள்ளும் ஒரு சமூகம் - தற்கொலைக்கு வித்திடுகிறார்கள் என்கின்றபோது ஆச்சரியம் மேலிடுகிறது அல்லவா?

எல்லோருக்கும் தலைக்கு மேல் பிரச்சினைகள் உண்டு என்பதால் ஒவ்வொருவரும் எழுந்த போக்கில் காரியங்களை, கருமங்களை ஆற்றிக் கொண்டிருக்காமல் உங்களுக்கு வேண்டிய ஒருவரிடம் உங்கள் மனக்குமுறலை வெளிப்படுத்தலாம்.

ருலக்ஸன் அழகேந்திரன்
(மருத்துவபீடம்)

பாடசாலையிலும் சரி, பல்கலைக்கழகம் எனினும், ஆசிரியரை விட சிறந்த ஆலோசகர், சேவகன் இருக்கமுடியாதல்லவா? எனவே ஒவ்வொருவரும் அவர்களிடம் உங்கள் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள் இருந்தும் எல்லோருமே நல்ல சமாட்டியன் (GOOD SAMARITAN) போன்று உங்களுடன் பேசுவது என்பது அதிரஷ்டவசமானது. இங்கிலாந்தில் இதுபோன்ற அமைப்புகள் இப்போதும் உள்ளன. உங்களுக்கு ஏதாவது மனநிலை பிறழ்வு ஏற்படின் உங்கள் ரெலிபோனில் குறிப்பிட்ட இப்பிரிவுக்கு அறிவிக்கும்போது அவர்கள் உடனடியாகவே உங்களுடன் தொடர்பு கொண்டு போதிய ஆலோசனைகளை வழங்குவார்கள்.

யாழ்ப்பாணத்தில் இப்போது தற்கொலை முயற்சிகள் அடிக்கடி நிகழ்வதால் இது தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள பின்வரும் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்புங்கள் உங்கள் பெயர்கள் இரகசியமாக வைக்கப்படும் உங்களுக்குத் தகுந்த ஆலோசனை வழங்கப்படும்.

**'தற்கொலையைத் தடுப்போம்,'**
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# தோழன் புஞ்சிபண்டார

சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் பலாலிவீதி. வீதியில் ஆங்காங்கே தேங்கி நிற்கும் மழைநீர்.

எப்போதென்றாலும் மழை பெய்யலாம் என்பதற்கு அறிகுறியாக, வானப்பரப்பு கருக்கட்டி கறுத்திருந்தது.

இடையிடையே வெயிலும் சிணுங்கிக்கொண்டிருந்தது. ஆலமரத்திற்கு அருகே சேறு புளித்து நாற்றம் கண்டிருக்கும் பழங்காலத்துக் குளம்.

ஆலமரத்துக்குமுன்னே வீதியைத் தாண்டி நிழற்பிரதேசம். முன்பு இங்கே புத்தர் கோயில் இருந்ததாகவும் காலப்போக்கில் அழிந்து போனதாகவும் ஒரு வரலாற்றுக் கதை.

இப்போது புத்தர் சிலையொன்று புதிதாக இருப்பது போலவும் வரலாற்றை மெய்ப்பிப்பது போலவும் அந்தப் பிரதேசம்.

எனது தொழிலுக்காக அடிக்கடி இந்தப் பக்கம் வரவேண்டிய தேவை இருந்தது. சாவடிக்கு எதிர்த்தாற் போல எனது சில்லறைக்கடை. கழிவுக்கான் வழியாக ஓடிச்செல்லும் நாற்றமடிக்கும் ஆஸ்பத்திரித் தண்ணீரோடு மழைத் தண்ணீரும் கலந்து கொண்டு புதுவிதமாக வயிற்றைக் குமட்டும்.

வைரவர்கோயிலுக்குப் பூ வைத்துவிட்டு அந்த வழியால்தான் தினமும் நான் வருவதுண்டு. காலை தேநீர் கடைகளில் அதிக கூட்டம் நிரம்பி வழியும்.

சோதனைச் சாவடியில் இறங்கி பத்து நடை நடந்து திரும்பவும் ஏறிக் கொள்வது காலையில் ஒரு பயிற்சியாகப் பழக்கப்பட்டுவிட்டது.

எறும்புக் கூட்டங்களுக்கு முன்னரே சுறுசுறுப்பாகிவிட்ட சீருடையினரின் விதவிதமான முகங்களைச் சந்தித்தபடி ஒவ்வொரு காலையும் அந்தப் பிரதேசத்தைக் கடக்கவேண்டும்.

விட்டுவிட்டு வரும் 'சீக்காய்' ஒலிகளும் தவிப்பின் உச்சக்கட்டத்தில் முணுமுணுக்கப்படும் சிங்களப்பாடல்களும் வழமையானவை.

"ஹாய் மாத்தையா"

வழமையான முகப்பழக்கத்திற்கான அந்த உச்சரிப்புக்களைக் கேட்டவண்ணம் அந்தச் சாவடியைக் கடக்கும்போது என்னையறியாமல் ஏற்படும் தலையசைப்பு.

புஞ்சி பண்டார!

தொடர்ச்சியான தலையாட்டல் மூலம் கிடைத்த நல்ல தோழன்.

பள்ளித் தோழனாய் இருந்து எங்கோ மறைந்துபோன பார்த்திபனை நினைவூட்டுகின்ற இந்த பண்டார நல்ல உயரம், செழுமையான கறுப்பு நிறம். ஆண்களுக்கு அழகு கொடுக்கின்ற அடர்த்தியான மீசை. அவனது அழகுக்கான அத்தனை அம்சத்தோடும். மன அழகும் பிரமாதமாய் இருந்தது.

பண்டார அப்பொழுது பாதுகாப்பு அனுமதி கொடுப்பதற்கான ஒரு பொறுப்பான உத்தியோகத்தனாக பணியாற்றினான். அவனது அமைதியான தோற்றமோ அல்லது சுமுகமாகப் பழகிக்கொள்ளும் ஆற்றலோ அவன் மீது எனக்கு ஒரு பரிவையும் பாசத்தையும் ஏற்படுத்தியிருந்தன.

காலைப்பொழுதில் அந்தச் சாவடியைக் கடக்கும் போது அவனைப் பார்த்துக்கொள்வதில் ஒரு மகிழ்ச்சி எனக்குள்.

நீண்ட விரல்களோடு, அழகாக அவன், குறிப்புக்களை எடுத்த வண்ணம் வீதிப் புதினங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பான்.

அவனைக்காணாதவேளைகளில்,

"புஞ்சி பண்டார நத்த?"

'சனத்'திடம் கேட்விட்டு அப்பால் நகர்ந்து விடுவது எனது வழமையாக இருந்தது.

ஒரு தமிழன் இவ்வாறு நட்புரிமை கொண்டாடுவதை விரும்பாத ஓர் இனம்.

நம்பிக்கையற்று சந்தேகம் என்கின்ற பார்வை கொண்ட இன்னொரு இனம்.

இந்த இரண்டு இனத்திலும் உண்டான இந்த நட்புரிமை பூண்ட உள்ளங்கள் வேதனைப்பட வேண்டியது சகஜம்தான்.

'பண்டார'வை சில நாள்களாகக் காணவில்லை. சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டான். அவனுக்குத் தீங்கு ஒன்றும் நடக்கக்கூடாது என்று உள்மனது பிரார்த்தித்தது.



ஒரு வாரத்தின் பின்னர் அழுக்கேறிய உடைகளோடும் 'சட்டித் தொப்பி'யோடும் திடீரென்று வந்து குதித்தான் அவன்.

"கோமத மாத்தையா?" கட்டியணைத்து முத்தமிட்டான். உரிமையோடு கடையில் வந்து உட்கார்ந்து கொண்டான். அவனுக்குத் தமிழ் கற்பதில் நிறைய ஆர்வமிருந்தது. கொச்சைத் தமிழ் என்றாலும் அவன் தமிழ் கற்பதில் ஆர்வம் காட்டினான். சிங்கள மொழி பற்றி அவன் என்னை வற்புறுத்தவேயில்லை. மொத்தத்தில் தமிழை நேசிக்கும் அவனது பண்பு, மேலும் அவன்மேல் பற்றுதலை அதிகரித்தது.

"அம்மா சுகமில்லே. மூணு நாள் லீவு கேட்டு போயிட்டு வர்றேன்"

சொல்லி முடிக்க முன்னர் முகம் வாட்டமுற்றது. குடும்பத்தில் தான் மூத்த பையன். மூன்று தங்கைகள் இருப்பதாக முன்பு ஒருமுறை சொல்லியிருக்கின்றான்.

"இப்ப எப்பிடியிருக்கு பண்டார?"

"பரவாயில்லே அண்ணே..." சொல்லிவிட்டு வீதியை வெறித்துப் பார்க்கின்றான். பெருத்த மழை பெய்வதற்கு அறிகுறியாய் வானம் இருளத் தொடங்குகிறது.

அப்போதுதான் 'கடமை' முடித்து திரும்பி வந்திருந்த 'சமிந்த' எங்கள் இருவரின்பார்வைக்குள் அகப்படுகின்றான்.

'சமிந்த'

சமிந்தவுக்கு என்னை அவ்வளவாகப் பிடிப்பதில்லை. 'தமிழன்' என்கின்ற காரணத்தை விடவும் மேலான காரணம், பண்டார என்மேல் வைத்திருக்கின்ற உறுதியான நம்பிக்கை.

சமிந்த தொடர்ச்சியாக கடையில் கடன் எடுக்க... அளவுக்கு மீறிய கடன் என் தலைமேல் பொறுத்தது. சமிந்த கடன் கட்ட மறுக்க, பண்டார அதில் தலையிட்டு, உடனடியாக என்கடனை அடைக்க வைத்ததும் அவனுக்கு என்மேலான வன்மம் அதிகரித்தது.

"மகே யாளுவா" என்று பண்டார அறிமுகப்படுத்தியதும் சாவடியில் எனக்குத் தனி மரியாதை கிடைத்தது.

அந்தச் சந்தியில் வழமையாக கூட்டம் நிரம்பி வழியும். பயண அனுமதி பெறுவோர் முதல் ரியூசன் பிள்ளைகள் என்று தாராளமான சனக் கூட்டம் எப்போதும் இருக்கும்.

காலையில் கடை திறந்து வியாபாரம் தொடங்குவதிலிருந்து மாலை ஆறுமணிவரை தெருப் புதினங்களில் பொழுதுபோவதாக இருக்கும்.

புஞ்சி பண்டார அடிக் கடி வந்து பேச்சுக்கொடுப் பான். நாள் மிகவும் இலகுவாக நகரும்.

"காவத மாத்தையா" அடிக்கடி கேட்பான்.

தான் நொறுக்குத் தீனி கொறிக்கும் போதெல்லாம் "கண்ட கண்ட எடுங்க அண்ணே!" என்று வற்புறுத்துவான்..

அவனது அன்பான உள்ளத்தில் மெய்மறந்து லயித்துருக்கிறேன்.

இனம், மதம், மொழி எல்லாவற்றையும் கடந்த தோழமை இருவருள்ளும் குடியிருந்ததை நான் நன்றாக உணர்ந்து கொண்டேன்.

அவனுக்கு ஒரு காதலி இருந்தாள். பள்ளிக்காலத்துக் காதல் என்றெல்லாம் கூறுவான். ஒருநாள் படம் காட்டினான்.

அழகிய பெண். அவனுக்கேற்ற உருவம். அவளிடமிருந்து வரும் கடிதங்களை வாசிப்பதற்கு என் கடைக்கு ஓடி வருவான். வாசித்து முடித்ததும் ஏறியிறங்கும் புருவங்களுடன் வியப்புக்காட்டி எனக்கு விவரிப்பான். இருவரும் மெய்மறந்து சிரிக்கும் சுகானுபவத்தை நான் எனது பள்ளி வாழ்க்கையில் கூட சந்தித்ததில்லை.

ஒரு நாள்.........

அந்த வீதியை அண்டி சின்னக் கலவரம்.

சந்தேகத்தின் பேரில் கைதுகள் நடந்தன. 'சமிந்த'வுக்கு இந்தச் சந்தர்ப்பம் ஒரு சாட்டாக அமைந்தது. என்னையும் பிடித்துக்கொண்டான்.

நடந்து முடிந்த சம்பவம் ஆத்திரத்தை ஏற்படுத்துவதாய் இருந்தது.

என்னோடு கூட இருந்தவர்களுக்கு நாலைந்து உதைகள் விழுந்தன.

எந்தவிதத்திலும் குற்றமிழைக்காத என்னை இப்பிடி கைது செய்தது வேதனையாக இருந்தது.

அதற்கும் மேலாக...

'சமிந்த' என் வயிற்றுப் பகுதியில் எட்டி உதைத்தான்.

"பற தெமிழோ!"

சுருண்டு விழுந்த என்னை எழவிடாமல் அடிக்க முயன்றான். பண்டாரவின் மேல் கொண்டிருந்த அன்பு, ஒருபோதும் சமிந்தவை கோபக்கண்ணோடு பார்க்க வைக்கவில்லை.

"பறதெமிழோ" என்ற வார்த்தையால் புருவம் நெளியச் சொட்டு நீர் சட்டென கொட்ட ஆரம்பிக்கிறது.

புஞ்சி பண்டார அப்போது அலுவலக அலுவலாக எங்கோ போயிருந்தான்.

திடீரென்று எங்கிருந்து வந்தானோ தெரியவில்லை. என்னை அன்போடு எழுப்பிவிட்டான்.

அவனது இறுகிய முஷ்டி சமிந்தவின் கன்னத்தைப் பதம் பார்த்தது.

பொய் மூக்கு உடைந்து மூக்கால் இரத்தம் வழிந்தது.

பண்டார உயர்பதவி உத்தியோகத்தன். அனுபவசாலி என்பதால் யாரும் அவனை எதிர்க்கத் துணியவில்லை. சமிந்த அடிதாங்காமல் அனுங்க ஆரம்பித்தான்.

"ஏய் மாத்தையா மகே யாளுவா! எப்பிடி நீ அடிக்க முடியும்? ஏய் நாலும் நீயும் அடிபடலாம். என்னுடைய நண்பனை எப்பிடி நீ நான் இருக்கும்போது அடிக்க முடியும்? சமிந்த வன்மத்தை ஒழியடா. நண்பனாய் நேசி" சிங்கள மொழியால் பண்டார சமிந்தவை திட்டத் தொடங்குகின்றான்.

சமிந்தவின் கால்பட்ட வயிற்றுப் பகுதிக்குச் சிகிச்சை தேவைப்பட என்னை ஆஸ்பத்திரியில் அனுமதித்து... பக்கத்தில் இருந்து....

பண்டார எனக்குள்ளே ஊறிப் போனான்.

புதுமையான ஓர் உறவைக் கண்ட ஆனந்தத்தில், விக்கி விக்கி அழுகின்றேன்..

தன் இனத்தவர் பலபேருக்கு மத்தியில் எனக்காக வாதாடி அவர்களைப் பகைத்துக்கொண்ட புஞ்சி பண்டார,

என் வாழ்நாளில் காணாத ஓர் உறவு.

அதற்குப் பின்னர் அவனோடு உறவு மேலும் அதிகரித்தது. மிகவும் நெருக்கமாகப் பழக ஆரம்பித்தான்.

*  *  *

ஒரு மாதத்தின் பின்....

முகத்தைத் தொங்கப் போட்டபடி வந்து நின்றான்.

"ஏய் மொனவத பண்டார?"

விரக்தியாய் சிரித்தான்.

"மாத்தையா மம யண்டோண"

"கொய்த?"

"சண்டைக்கு"

ஒரு நிமிடம் எனது இதயக் குழந்தை கை தவறி விழுந்தவிட்ட மாதிரி ஓவென்று அலறுகின்றது.

இவன் அடிக்கடி குறும்பு, குழப்படி செய்பவன். ஒருவேளை பொய்யாக இருக்குமோ?

"உண்மையா பண்டார?"

விக்கி வெடித்த வார்த்தைகளாக அழுகையும் கலந்து கொண்டது.

"ஏய் பிசு மாத்தையா அழாத!"

கண்களைத் துடைத்துக்கொள்கின்றான். இவன் காரியாலய வேலை செய்பவன். இப்போது சண்டைக்குப் போகிறான் என்பது கேள்விக் குறியாக இருக்கிறது.

ஒருவேளை 'சமிந்த'வின் வேலையாக இருக்குமோ? இல்லை இவனுக்கான விதி நெருங்கிவிட்டதோ?

**சி.சிவாணி**

அன்று நீண்ட நேரமாகக் கடையில் இருந்து கதைத்துக் கொள்கின்றான்.

வழமையான காலைப்பொழுது ஒன்று விடிகின்றது. தூரத்தில் எங்கோ கொழுத்த சேவல் ஒன்று அடிவயிற்றைப் பிசைந்தபடி அழுகிறது. ஒற்றைத்துளியாய் இறங்கும் வானத்தின் கண்ணீர், பூமிப் பெண்ணின் மார்பகத்தை நனைக்கின்றது. சிலிர்த்து நிற்கும் அவள் கையேந்திக் கொள்கிறாள். அவளுக்குக் கூடக் கண்ணீரின் பெருக்கு வேதனையைக் கொடுக்கின்றது.

இன்று....

புஞ்சி பண்டார புறப்படப் போகின்றான்.

கட்டி அணைத்து நெற்றிப் புருவத்தில் முத்தமிடுகின்றான்.

"நல்லா இருங்க மாத்தையா"

"மங் கீல என்னங்"

என் விழி அழுவதைச் சகித்துக் கொள்ளாத அவன் வாகனத்தில் ஏறிக்கொள்கின்றான்.

'ஆக்கிரமிப்பின் மனிதாபிமானம் வெளியேறும்போது இருப்புக்கள் பெயர்க்கப்படலாம்.'

~~எங்கோ யாரோ எழுதிய கவிதை.~~

அவனுக்குச் சொந்தமான சட்டித் தொப்பி;

அழுக்கேறிக் கிடக்கும் கனதியான தோற்பை;

தோளில் தொங்கிக் கிடக்கும் துப்பாக்கி.

அவை மட்டும் அவனோடு கூடப் போகின்றன. வாகனம் மறையும்வரை சிரித்தபடி கையசைத்துப் போகின்றான்.

விம்மி இறங்கும் மார்பகத்தோடு நிற்கின்றேன்.

"என் தோழன் புஞ்சி பண்டார நூறு வருசம் வாழோணும். ஆண்டவனே.... அவனுக்கு ஒண்டும் நடக்கக் கூடாது" எனது உயர்ந்தபட்ச பிரார்த்தனையால் இறைவனிடம் மண்டியிட்டு இறைஞ்சுகின்றேன்.

(யாவும் கற்பனை)

---

# அகக்கனல்

வகுப்பறை மேசைமேல் கைமடித்துக் கைகளுள் முகம் புதைத்துப் படுத்திருக்கிறேன். வழமையான மௌனம் என் இயல்பாக இப்போதும். ஆனால் வகுப்பறை அவ்விதம் இல்லை. அதை எதிர்பார்க்கவும் முடியாது. முதலிரு பாடவேளைகளுக்கும் வரம்பான மணியோசை கேட்ட பின்னும் கூட ஆசிரியர்கள் வகுப்பறைக்கு வரவில்லை. சில நேரங்களில் பாடங்களை வரையறுக்கிற மணியோசைகள் தோற்கின்றன. அவை கருதப்படாது ஒதுக்கப்படுகின்றன. சக மாணவர்கள் இயல்பாகச் சொல்லுவார்கள் "பாடம் நடக்கவில்லை" என்று. பாடங்கள் நடக்குமா? அவ்விதமாயின் அவைகளுக்குக் கால்கள் உண்டா? குறும்புத்தனமாய் கேள்வி விசிறி ஓடிற்று மனம். உண்மையில் பாடங்கள் நடப்பதில்லை. பாடங்களோடு ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து நடக்கிறார்கள். உண்மை ஆசிரியர்கள் வெளிச்சப் பிரதேசங்களுக்கு மாணவர்களை வழிகாட்டி நடக்கிறார்கள். மீண்டும் அடுத்த வயதுக்கான மாணவர்களை வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்துவதில் இறங்கி விடுகிறார்கள். இவர்கள் வாழ்வு ஓயாத பணிகளைக் கலவியது. உண்மை. ஆசிரியத்துவம் தெய்வீகம். அதைக் கைகூப்பி வணங்கினும் தகும். நானும் அதனை வணங்குகிறேன்.

சிந்தனைக் குறுக்கீடுகள் மிகுதியாகிக்கொண்டிருக்கின்றன. வகுப்புத் தலைவனின் 'கதைக்க வேண்டாம்' கட்டளை கனதகளுள் மறைந்து தேய்கிறது. இன்னும் சிறிது பொழுதில் தன் கட்டளையின் பயன்பாடின்மை குறித்து அவன் அமைதியாகக் கூடும். அல்லது சேர்ந்து கதைக்கக் கூடும். இளம் வயதுகள் கடுதியாய்ச் சினம்கொள்ளத்தக்கன. ஆக, எதுவுமில்லாத பிரச்சினைகள் பெரிதுபடுத்தப்படும். வகுப்பு ஆசிரியரின்றிக் களேபரப்படும். மறுவகுப்புக்களின் கற்பித்தலும், கற்றலும் கூடக் குழப்பப்படும். மாணவர்கள் சிறு வயதிலெனின் தண்டனையாக எழுந்து நிற்கும்படி கட்டளையிடப்படுவார்கள். சிலர் மோசமாகத் தண்டிக்கப்படுவார்கள். எனினும் எழுந்து நின்றபடியே மறு குற்றங்களுக்காக ஆயத்தப்படுவார்கள். குற்றங்கள் பொதுமைப்பட்டிருக்கிற பொழுதிலும் மாணவர்கள் மட்டும் ஏன் தண்டிக்கப்படுகிறார்கள்? இதே வேளையில் நிர்வாகப்பூச்சோடு ஆசிரியத்துவங்கள் அங்குமிங்கும் அலையும். சில சோம்பல் பூச்சோடு எங்காவது ஒதுங்கியிருக்கும். சில கைதொடும் எல்லைக் கட்மைகளைக் கைவிட்டுப் பிற்கால அபிவிருத்தியில் மூழ்கும் - வகுப்பறை - நாளைய ஒரு சமூகம் சிதிலமாகிக் கொண்டிருப்பதை அறியாமலே.

ஆசிரியரற்ற வகுப்பறைகளும் வாழ்வின் களங்களாகும். அங்கு புதிய புதிய குற்றங்கள் அறிமுகமாகின்றன. தலைவிதிப்படியாகக் கிடைத்துவிடுகிற சில 'குரு'க்களின் அலட்சியத்தில் அவை வளர்ச்சியடைகின்றன. நாளடைவில் வெவ்வேறு விதமாய் முகங்கொள்கின்றன; உருமாறுகின்றன; விகாரமுறுகின்றன.பிள்ளைகளே பிரச்சினைகளாகிவிடுகின்ற பொழுதில் 'இந்தப் பெரிய மனிதர்கள்' சடுதியாய்க் கண் விழிப்பார்கள். ஒழுக்கம் பற்றி உக்கிரமாய்ப் பேசுவார்கள். இனிப் பிரச்சினையின் மூலம் காண்பது கஷ்டம். களைவதும் அவ்வாறே. முளைகளில் பிரச்சினைகளை முகம் கிள்ளுவது சுலபம். இப்போது அவற்றின் முகங்கள் நனிவர வைரித்த மரங்கள்போல வலிமைப்பட்டுவிடுகின்றன. அகற்றுவது கடினம்.

மாதா, பிதா, குரு, தெய்வம் - போற்றற்குரிய அம்சங்கள். தெய்வங்கள் சாத்தானாகுமா? இங்கு ஆகின்றனவே. இதுவும் இதயசாகரன் சேரின் பாடம்தான். இன்றும் கூட அவருக்குப் பாடசாலை வரவுண்டு. ஆயினும் வகுப்பறை வரவு இல்லை. இது வழமை. இவரும் தெய்வமா? இவரையும் போற்றுதல் கடமையா? அல்லது இவர் சாத்தானா? சாத்தான்கள் கொடியவை. அவை மனித வாழ்வு அழிந்துபடுவதை ரசிக்கும். அல்லது பொருட்படுத்தாதிருக்கும். ஆசிரியர்களில் தெய்வங்கள் பலவுண்டு. சாத்தான்களும் உண்டு. திடீரென மனக்கண்ணில் இதயசாகரன் சேர் கோர முகத்துடன் எழுந்தார். அவர் கைகளில் கொடிய நீண்ட நகங்களும், தலையில் கொம்பும்கூட இருந்தன. சிரிப்புடன் ஒதுக்குகிறேன். குரு நிந்தை செய்கிறேனா? இது சிந்தனையாலும் செய்யக்கூடாததா? ஆக, இங்கு நான் தவறுகிறேனா? 'ஷேட்டினுள்' உடம்போடு படர்ந்திருக்கிற பூணூல் தொட்டுப் பார்க்கிறேன். சிறுவயதில் நியாய, அநியாயங்களைச் சிந்திக்கப் பழக்கிய தாத்தா மீது கோபம் வந்தது. அமைதியான சிந்தனை மனதில் சுமையேற்றும். எனக்கும் அதே பிரச்சினை.

இரண்டு நாட்கள் முன்னதான 'நற்சிந்தனை'யில் கூட இதயசாகரன் சேர் சொன்னார். ஒழுக்கம் விழுப்பந்தரலால் அதனை உயிரினும் மேலாக ஓம்புமாறும் ..நேரத்தின் அதியுச்சப் பயன்பாடு பற்றியும்... 'பேச்சு' நன்றாக இருந்ததாகக் கைதுலுக்கப்பட்டார். உண்மை. கைதட்டல் தாராளம். அதுவும் உண்மை. ஆனாலும் பாடங்களின் நேரசூசிகை மீறுதல் எவ்வகை ஒழுக்கமாகும்? பாடங்கள் முடிவடையும் பொழுதில் வகுப்பறை வந்து பாடக்குறிப்பெழுதல் எந்த வகைக்குரிய நேரக் காப்பாகும்? அவை ஒழுக்கமில்லையெனின் 'உயிர் ஓம்புதல்' மாணவப் பருவத்துக்கு மட்டுமேயான கடமையா? அழுக்குத் தோற்றமாய் ஒரு 'சோப்கேஸ்' (Soap Case) மனதில் காட்சியாயிற்று. சவர்க்காரங்கள் அழுக்கு அகற்றும் தகைமையுடையன. ஆயினும் அவற்றை உள் வைத்தபடியே அழுக்காக அவற்றின் பெட்டிகள் காட்சி தருதல் கொடுமை. உள்ளிருக்கும் நற்கருத்துக்கள் தன்வாழ்வுக்குப் பயன்படுத்தாத ஆசிரியர் வாழ்வு பாவம். அவை அவர்களது சொந்த வாழ்வையே உருக்குலைக்கும். இங்கும் கூட அதேதான். 'இதயசாகரன் சேர் எப்பவும் இப்பிடித்தான்' பிள்ளைகள் இயல்பாய் விஷயம் சொல்வார்கள். பிள்ளைகளுக்கு



(XV ஆம் பக்கம் பார்க்க)



என்னிடம்
அடையாள அட்டை
கேட்காதீர்!
நான்
'கன்றி' களிலிருந்து
கலைக்கப்பட்டு
பன்றிகள் போல்
அலைந்து திரியும்
பரம ஏழை!
குடும்ப சுமையைச்
சுமந்து கொண்டே
தள்ளாடுகின்ற தரித்திரம்!
என்னிடம்
அடையாள அட்டை
கேட்காதீர்கள்!

**புதுமை**
ஈச்சமோட்டை

பின்னொன்று முன்னொன்று பின்தலையி லொன்றாக
என்னென்று தாங்குவா னென்றேங்காள் - பின்னின்று
தள்ளாது தள்ளுமாம் தாடகை தாண்டவம்
கொள்ளாதிவ் வுலகு காண்

**வா.விறலோன்**
கோண்டாவில்

அன்று யேசு சுமந்த சிலுவை நம் பாவம் போக்க
இன்று நீ சுமக்கும் சுமை குடும்பப் பாரம் தீர்க்க
மகனே நம்பிக்கையுடன் நடை போடு – நாளை
நிச்சயம் உன் மகன் உன் சுமை ஏற்பான்.

**லோகா**
சங்கையூர்

# உங்கள் கவிதைகள்

ஆவி துடிக்க....
அன்று.....
யேசு சுமந்தது
சிலுவையல்ல....
நேசமக்களின்
பாவங்களை.....
கால்கடுக்க
இன்று....
நீ.... சுமப்பது...
பாரச் சுமையையல்ல...
ஈழத்தமிழனின்.....
இதய..... வடுக்களை....

**க.நாகேஸ்வரா**

போராடப் பின்னின்று
பொதிசுமக்கும் கழுதையானேன்!

**சைதன்யன்**

என்ன பார்க்கிறீர்கள்?
நான் முக்கி முனகி சுமப்பது
எனக்கும்,
என் தன்மானத்திற்குமான விலை
அதிகம் இல்லை
வெறும் முப்பது இலட்சம்தான்!

**சி.சிறிதரன்**
வரணி

அம்மாவின் பொதிகளில்
உள்ளவை புரியா;
காவும் கழுதைகள்
அரசியலில்
அரைவேக்காட்டுத் தீர்வுக்காக
அரங்கத்தில் கனைக்கின்றன?!

**எம்.ஷாந்தன்**

வாழ்க்கை -
அது ஒரு சுமை
என்றும்
நீ
சுமைதாங்கியாய் மட்டும்
இருந்துவிடு
ஒருபோதும்
சுருக்குக்கயிற்றுக்கு
சுமையாகிவிடாதே

**இராஜகிருபன்**
அல்வாய்

# மௌனமொழி

'கெம்' மடிப்பு வைத்த
ஜீன்சும்
தொள தொள
'டாங்டாங்' சேட்டும்
மாட்டிக்கிட்டு
மைனர் இவர்
ஊரடங்கு வேளையிலே
ஊரவரின் சொத்துக்களை
உவப்புடனே காவுகிறார்.

**சாந்தன்**

ஓ....... மானிடனே
சொந்தங்களை விட்டு
சொந்த மண்ணை விட்டு
சொத்துப்பத்துக்களை விட்டு
மூடை முடிச்சுக்களுடன்
ஓடுவது ஏன் தெரியுமா?
நீ தமிழன் என்ற
ஒரேயொரு காரணத்தினால்!

**ஆ.யசோதன்**
மட்டுவில் வடக்கு

நிவாரணப் பொதி வாங்கித்
தீர்வுப் பொதியை நம்பி
வாக்குப் பொதியைத் தூக்கினேன்;
கண்டதோ களுத்துறைச் சிறைப்படி
கைக்கு வந்ததோ
மகனின் எலும்புப் பொதி
இப்போது மறுபடி நெஞ்சில்
உதிப்பதோ புரட்சிக்கவி!

**ப்ரசன்னன்**

நான் சுமப்பது.....
என்னை.
என் தன்மானத்தை விற்று
நான், வாங்கிய
'சீதன' மூடைகள்.
இதைவிட
கௌரவமாக - என்னை
அவமானப்படுத்த
யாரால் முடியும்?

**சி.சுபோ**
வரணி

அவிழ்க்கப்படாத
அரசின்
தீர்வுப் பொதி
தலைச் சுமையாக,
ஒடுக்கப்பட்ட
பொருளாதாரத்தடை
கைச்சுமையாக,
போரின் பெருந்துன்பம்
மறுசுமையாக
சுமைகளை சுகமாக்கும்
ஈழத்தமிழன்
இவன் பாரில்

**கவிதா ஜெயப்பிரகாசம்**

வாழ்க்கைப் பயணத்தில் - ஒரு
வழிப்பயணி நான்
ஏமாற்றங்களைத் தாங்கி
எதிர்பார்ப்புகளை ஏந்தி
கனவுகளைச் சுமந்து....
கதிகலங்கி நடக்கின்றேன்
கரை ஏறும் நாள் எதுவோ?

**சி.சு**

உலகிலே பணி சுமந்தாய்
ஊரிலே பழி சுமந்தாய்
உடலிலே பிணி சுமந்தாய்
உள்ளத்திலே கவலை சுமந்தாய்
தலையிலே பொதி சுமந்தாய்
கண்ணிலே நீர் சுமந்தாய்
இத்தனையும் சுமக்கவா - நீ
உன் உயிரைச் சுமக்கிறாய்!

**செ.தர்ஷன்**
உடுப்பிட்டி

தாம் தயாரித்த பொதிகளைச்
சுமக்க முடியாது
தவிக்கிறார்கள்
சந்தர்ப்பவாதிகள்!

**நவீன்**

மூடைகளைச்
சுமந்த வண்ணம்
நாளொரு இடம்தேடும்
அப்பாவித் தமிழ்மகனின்
நாடோடி வாழ்வின்
குறியீடு இது!!

**எம்.கீர்த்தி**

கணனியுக
சுமைதாங்கி
இதுதானோ!?

**கணனிப்பித்தன்**

ஏ வாலிபனே......
உன்னை அழுத்துவது
வாலிபச் சுமையல்ல
வரலாற்றுச் சுமை
துணிந்து நிமிர்ந்திடு!
துயரம் களைந்திடு!!

**த.தயாளினி**
கிளிநகர்

அன்று!
அராஜகத்தின் பிடியில்
சிக்கிய கருவறைப் பயிர்களுக்காகச்
சுமந்தேன்
இன்று
விடியலை நோக்கி
விரைந்து கொண்டிருக்கும்
எஞ்சிய தளிர்களுக்காகச்
சுமக்கின்றேன்
நான் யார்?
ஓயாத அலைகளின்
ஓர் அங்கம்

**ஜெனனி**
மீசாலை

அன்று
பிட்டுக்கு
மண்சுமந்த கதை
இன்று
பட்டினியில்
பாரம் சுமக்கும் கதை

**நித்தி**
அரியாலை

பாரம் சுமக்கும்
வாழ்வு.....
நம்மண்ணில்
கழுதைக்கும்
நாம்
நிகரன்றோ?

**வ.சசிக்குமார்**


உரிமைக்காக இளைஞர்
'கண்'(GUN)ணைச் சுமந்தார்
உணவுக்காக இறைவன்
மண்ணைச் சுமந்தான்
உலகிற்காக இயேசு
சிலுவை சுமந்தார்
சலுகைக்காக சிலர்
பொதியைச் சுமக்கிறார

**கதா**

தலையை அழுத்துது
தங்கையர் பிரச்சினை
முதுகை முறிக்குது
வேலைச் சுமை
இதயத்தில் இடிக்குது
இனியவள் நினைவுகள்
இத்தனையும் தீர்ந்து
இத்தரைமீதினில் - நான்
நிமிர்வதெப்போ?

**சுபோ**

## மௌனமொழி - 76



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது.
இதனை வரைந்தவர் உடுவில் அரவிந்தன்

நான் தமிழன் நெஞ்சில் பாரம்
சுமக்கிறேன்!
வந்த படையான் நெஞ்சிலும் முதுகிலும்
பாரம் சுமக்கிறான்!
நீ செய்த தவறு என்ன
பாரம் சுமப்பதற்கு?

**கம்பஸ் கும்**

மேல் பையில்
செம்மணி எலும்புகள்!
ஒருகையில்......
காணாமல் போனார் விவரங்கள்!
மறுகையில்......
பாலியல் வல்லுறவு விடயங்கள்!
வளைந்து நிற்கிறோம்
யார்தருவார் நீதி – நிம்மதி?

**முத்துமாரி**

சகோதரனே......
மனலில் பாசத்தைச் சுமந்து
தலையினில் அறிவினைச் சுமந்து
முதுகினில் எதிர்காலத்தை சுமந்து
வாழ்வையே சுமையாக்கிக் கொண்டாயோ?

**ந.தாரணி**
யாழ்ப்பாணம்

தேசச்சுமை தலையிலே
பாசச் சுமை முதுகிலே
மனித ரோசச் சுமை மடியிலே
துடியாய்த் துடித்து எம்
இளமையின் முகவரியைத் தேடி
தினம் வாடி வாழ்வுக்காய்
வழி அமைக்கின்றோம்
விழி காட்டு எம் வித்தகத் தேசமே
எம் தமிழுக்காய்!

**சி.வாகீசன்**
நெடுந்தீவு

உரிமைகளை இழந்தாய்!
உடைமைகளை இழந்தாய்!......
உறவினர்களை இழந்தாய்!.........
உன் தோளில் இப்போது என்ன!
அரசியல் சாக்கடைகளை சுமக்கின்றாயா?

**சு.சுதர்சன்**
வதிரி

# நட்பு பின் காதலாகலாம்; காதல் பின் நட்பாகலாமா?

**கரவெட்டி. வேந்தன்.**
கல்வித் திணைக்களம் ஏன் இப்படிச் சீரழிந்து போய்க் கிடக்கின்றது?
☺**தலைவன் எவ்வழி, தொண்டர்கள் அவ்வழி!**

❀ ❀ ❀

**நெல்லியடி. ஈஸ்வரி.**
இளம் பெண்களின் பின்னால் நாயாக அலைபவர்களுக்கு என்ன நோய்?
☺**நாயோமேனியா!**

❀ ❀ ❀

**நவாலி. தீபன்.**
கணவன்மாரை நாயாக ஆட்டிப் படைக்கும் தாய்க்குலம் குறித்து...?



☺**தாய்க் குலம் அல்ல; பேய்க்குலம்!**

❀ ❀ ❀

**உடுவில். சதீஸ்.**
வித்து! நட்புக் காதலாக மாறும் என்கின்றார்கள். காதல் நட்பாக மாறாதா?
☺**பால் தயிராகலாம். தயிர் எங்காவது பாலாவது உண்டா? தேவையானால் மோர் ஆகலாம். மோரைப் பாலாகக் கருதுவது உம்மைப் பொறுத்தது.**

❀ ❀ ❀

**நீராவியடி. சங்கர்.**
வாசகர்களிடம் இவ்வளவு திட்டு வாங்கியும் திருந்துகின்றீர் இல்லையே, உமக்கு வெட்கம், ரோசம், சூடு, சுரணை இல்லையா?



☺**அவை கிலோ என்ன விலை?**

❀ ❀ ❀

**கொடிகாமம். இந்து.**
உள்ளாடை தெரிய பிளவுஸ் அணிகின்றார்களே. இவர்கள் மாறமாட்டார்களா?
☺**உள்ளாடையே இல்லாமல் பிளவுஸ் அணிய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீரா?**

❀ ❀ ❀

**சுதுமலை. பாமா.**
பகலில் அலுவலகத்தில் தூங்கும் இளசுகள் குறித்து...?
☺**இரவில் 'ஓவர் டைம்' செய்கின்றார்கள் போலும்!**

❀ ❀ ❀

**மானிப்பாய். வாணி.**
முன்னர் என்னை 'மொட்டே!' என்று அழைத்த என் காதலன் இப்போது என்னைப் 'பூவே!' என்று அழைக்கின்றாரே?




☺**மொட்டு விரிந்து பூவாகிவிட்டது. இனி 'பிஞ்சு' என்று அழைக்கும் நிலை வந்தாலும் வரலாம். எதற்கும் கவனமாக இருங்கள்.**

❀ ❀ ❀

**மாசார். சுந்து.**
இனக் கவர்ச்சி அவசியமா?
☺**படைப்பின் மூலாதாரமே அதுதானே!**

❀ ❀ ❀

**மருதனார்மடம். தீபன்.**
காதலுக்கு கண் இல்லை என்கிறார்கள். உண்மையா?
☺**பல சமயங்களில் சூடு, சுரணை, வெட்கம், ரோஷம்... போன்றவை கூட இருப்பதில்லையே!**

❀ ❀ ❀

**துறையூர். டி. மெல்.**
காதல் - கவிதை. ஒற்றுமை என்ன?
☺**பல சமயங்களில் இரண்டுமே வெறும் பிதற்றலாக இருக்கும்.**

❀ ❀ ❀

**கொக்குவில். சுகு.**
பல பெண்கள் கணவன்மாரை நாயாக நடத்துவது ஏன்?
☺**காவலுக்கும், கோபம் வந்தால் எட்டி உதைப்பதற்கும், பாசம் வந்தால் தடவிக் கொடுப்பதற்கும் பொருத்தமான 'செல்ல'ப் பிராணி நாய்தானே?**

❀ ❀ ❀


**சங்கானை. சுரேஷ்.**
இந்தக் காலத்துத் தெய்வீகக் காதல் எப்படி அமைகின்றன?
☺**தெய்வம் போல திடீரெனத் தோன்றி திடீரென மறைந்து விடுகின்றன.**

❀ ❀ ❀

**கல்வியங்காடு. எம். தாசன்.**
எல்லாப் பெண்களும்சுடிதார் அணியலாமா?
☺**அது பருவத்தையும் உருவத்தையும் பொறுத்தது.**

❀ ❀ ❀

**சீரணி. ரகு.**
திருடனைக் சமாளிக்க மனைவிக்கு கராத்தே பழக்கலாமா?



☺**திட்டிய மரத்திலேயே கூர் பார்த்தால் என்ன செய்வது?**

❀ ❀ ❀

**மறவன்புலோ. வீ. சீலன்.**
பெண்ணாசையை வெல்ல என்ன வழி?
☺**திருமணம் செய்து விடும். பின்னர் துறவு ஆசை பற்றிக் கொள்ளும்.**

❀ ❀ ❀

**சங்குவேலி. எஸ். ஆனந்தன்.**
காதலிப்பதற்கு வயதுக் கட்டுப்பாடு உண்டா?
☺**காலில் வலு உள்ளவரை குதிரை பாயத்தானே செய்யும்?**

❀ ❀ ❀

**வேலணை. எம். தயாளன்.**
நடிகைகளின் கணவன்மார் விவாகரத்துக் கோருவது ஏன்?
☺**நடிகை வீட்டிலும் நடிப்பதால்!**

❀ ❀ ❀

**காரைநகர். ரூபி.**
மத்தியானச் சாப்பாடு தரக்குறைவாக இருந்தாலும் எனது கணவர் ஒன்றும் பேசாமல் சாப்பிடுகின்றாரே...?
☺**இரவுச் சாப்பாட்டின் திருப்தி காரணமோ...?**

❀ ❀ ❀

**யாழ். சயந்தன்.**
கிணற்றுத் தண்ணியை வீணாக்கலாமா?
☺**இறைக்கிற கிணறுதான் ஊறும் என்கிறார்களே!**

❀ ❀ ❀

**வேரரவில். கமலாகரன்.**
என் வீட்டுக்காரர் சுத்த சோம்பேறியாக இருக்கின்றார். எட்டு மணிக்கே படுத்துக் குறட்டை விடுகின்றார். என்ன செய்யலாம்?
☺**தேனுக்கு ஈயைப் பிடித்தா விடமுடியும்?**

❀ ❀ ❀

**சரசாலை. அம்மான்.**
முத்தம் கொடுப்பது இனிமையா? முத்தம் பெறுவது இனிமையா?
☺**குழந்தைக்குக் கொடுப்பது இனிமை. குமரியிடம் பெறுவது இனிமை. (அது சரி அம்மான்! முத்தம் கொடுத்துக் கொண்டே பெறும் 'டெக்னிக் எல்லாம் உமக்குத் தெரியாதா?)**

❀ ❀ ❀

**சுருவில். ஜீவா.**
நோர்வேயால் தீர்வு வருமா?




☺No Way.

❀ ❀ ❀

# வித்துவான் பதில்கள்

**திருநகர். கண்ணன்.**
வலது குறைந்தோரின் அரசில் ஊமைகள் மட்டும் இல்லையே ஏன்?
☺**எதிர்த்துப் பேசாமல் தலையாட்டும் அணியை மறந்து விட்டீர் போலும்.**

❀ ❀ ❀

**வட்டூர். றியா.**
"தீ பற்றி எரிகின்றது. தண்ணீர் ஊற்றி அணையுங்கள்!" என்கின்றாளே என் பக்கத்து வீட்டுக்காரி...?
☺**தண்ணீர் ஊற்றிய பின் அணைக்க வேண்டிய தேவை இருக்காது!**

❀ ❀ ❀

**திருநெல்வேலி. விவேகன்.**
மன அமைதி இல்லாவிட்டால் தூக்குப் போடுவதுதான் ஒரே வழியா...?
☺**அப்படியானால் பெரும்பாலான சம்சாரிகள் தூக்கில் அல்லவா தொங்க வேண்டும்?**

❀ ❀ ❀

**நீர்வேலி. மது.**
நல்ல குடியிற் பிறந்தவர்களும் குடிக்கின்றார்களே?
☺**குடிக்குப் பிறந்து 'ரொடி'க்கு வாய் திறப்பவர்கள்!**

❀ ❀ ❀

**புத்தூர். சந்திரன்.**
"ஆற்றில் ஒரு கால்; சேற்றில் ஒரு கால்" என்றால்...?
☺**ஒரு கால் சொந்த வீட்டில், மறுகால் சின்ன வீட்டில்.**

❀ ❀ ❀

**கட்டைப்பிராய். பிள்ளை.**
என் காதலி எனக்குத் துரோகம் செய்து விட்டாள். அப்படியிருந்தும் அவளைக் காணும் போது என் மனம் நெகிழுகின்றதே?
☺**தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்தானே!**

❀ ❀ ❀

**சங்கரத்தை. ரீ.சிவாஜி.**
வெளிநாடு சென்ற நம்மவர்கள் சிலர் அங்கு பிச்சை எடுக்கின்றார்களே?
☺**'வெளிநாடு புகினும் பிச்சை நன்றே' என்பது அவர்கள் கொள்கை போலும்.**

❀ ❀ ❀

**கந்தரோடை. அ. சுரேஷ்.**
அடங்காத பெண்ணையும் சில ஆள்கள் அடக்கி விடுகின்றார்களே...?
☺**அங்குசம் சரியாக இருந்தால் ஆனையையும் அடக்கலாம் என்பது உமக்குத் தெரியாதா?**

❀ ❀ ❀

**சண்டிலிப்பாய். ப. வரதன்.**
அறிவாளி முட்டாளாவது எப்போது?
☺**தலையணை மந்திரத்துக்கு மயங்கும்போது!**

❀ ❀ ❀

**நாயன்மார்க்கட்டு. சந்திரன்.**
ஆடி அடங்கிய பின் ஒழுக்கம் பற்றிப் பேசும் வயோதிபர் குறித்து...?
☺**பல்லிழந்த பாம்பின் பரிதாப உபதேசம் அது.**

❀ ❀ ❀

**நெடுந்தீவு. வி. சிங்கம்.**
என் காதலி என்னை நட்டாற்றில் விட்டு விட்டாள். என்ன செய்யலாம்?



☺**பெற்றோர் நிச்சயிக்கும் படகில் ஏற வேண்டியதுதானே!**

❀ ❀ ❀

**கைதடி. செந்தூரன்.**
ஆண்கள் எப்போது அடங்குவர்?
☺**பாம்பில் விஷம் இருக்கும்வரை கக்கிக் கொண்டுதானே இருக்கும்?**

❀ ❀ ❀

**அரியாலை. மகேந்திரன்.**
எங்கள் பக்கத்து வீட்டு நாய் 'லவ்! லவ்!!' என்று குலைக்கின்றதே?
☺**இதுதான் பருவக் கோளாறு. 'இழவு! இழவு!!' என்று குலைப்பது 'லவ்! லவ்!!' என்று கேட்கின்றது.**

❀ ❀ ❀

**ஆனைவிழுந்தான். கரன்.**
இக்காலப் பிள்ளைகள் அதிகம் பொய் சொல்வதேன்?
☺**வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குப் பக்கத்தில் அதிகம் இருப்பதாலும், பத்திரிகைகள் வாசிப்பதாலும்!**

❀ ❀ ❀

**அராலி. இராமர்.**
என் காதல் கடிதங்கள் அழகாக இருப்பதாக என் காதலி கூறுகின்றாளே?
☺**உங்களைப் பப்பாவில் ஏத்தி, எதிர்காலத் தேவைகளுக்கு சாட்சியங்கள், ஆதாரங்கள்களை வலுவாக்குகின்றார் போலும்.**

❀ ❀ ❀

# கணவன்மாரை நாயாக பெண்கள் நடத்துவது ஏன்?

**மானிப்பாய். சுபன்.**
எனது காதலி என்னை விட்டுவிட்டு வேறு ஒருவரைத் திருமணம் செய்துகொண்டு போய் விட்டாள். ஆனாலும் என்மனம் அவளை நாடுகிறதே?
☺**அட்டாலும் பால் சுவையில் குன்றாது என்று நினைக்கிறீரா? அது தப்புத் தம்பி.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். ராஜ்.**
இரவில் மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்கள் எதிரில் வாகனங்கள் வரும்போது தமது 'லைட்டை' 'டிம்' செய்கின்றார்கள் இல்லையே?
☺**'டிம்'மில் ஓட்டுவதுதான் காரணமோ?**

❀ ❀ ❀

**நல்லூர். யாதவன்.**
சின்னவீடு நாடும் 'பகல் கனவு' பலரையும் பீடித்துள்ளதே எப்போது திருந்துவார்கள்?
☺**கனவு நனவாகி, திருத்துபவர்கள் வரும்போது! (யாரின் கனவு என்பது உங்கள் ஊகத்தைப் பொறுத்தது.)**

❀ ❀ ❀

### இவ்வார ஜோக்

**ஆள் கணக்கெடுக்க வீட்டுக்கு வந்த குடிசன மதிப்பீட்டு அதிகாரி கேட்டார்:-**
**"அதெப்படி அம்மா, உங்கள் கணவர் இறந்துபோய் ஐந்து வருடங்கள் என்கிறீர்கள். ஆனால் உங்கள் மகனின் வயது மூன்று என்கிறீர்களே?"**
**பெண்மணி சாவதானமாகப் பதில் சொன்னாள்:-**
**"அதுதான் நான் உயிருடன் இருக்கிறேனே!"**

# திட்டு வாங்கியும் வித்துவான் திருந்தாமல் இருப்பது ஏன்?

# தமிழ்நாட்டில் 3 தொகுதிகளையும் கோட்டை விட்டார் ஜெயலலிதா!

இந்தியாவில் நான்கு மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல்களும் தமிழ்நாடு உட்பட சில மாநிலங்களில் வெற்றிடங்களுக்கு இடைத் தேர்தல்களும் நடைபெற்றுள்ளன.

ஒரிஸா, ஹரியானா, பிஹார், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம்



மூப்பனார்

கட்டம் கட்டமாக வாக்களிப்புக்கள் நடைபெற்றன.

ஒரிஸாவிலும் ஹரியானாவிலும் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. பிஹாரில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலையில் தொங்கு ஆட்சி மன்றம் ஏற்படும் நிலைமை உருவாகியிருக்கிறது. மற்றும் சிறிய மாநிலமான மணிப்பூரில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு நடைபெற்ற மூன்று இடைத் தேர்தல்களிலும், மத்தியில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க. தலைமையிலான கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது. மக்களவைத் தேர்தலுக்குப் பின்னர் ஜெயலலிதாவுக்கு விழுந்த பலமான அடி இது.

நான்கு மாதங்களுக்கு முன்னர் பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மத்தியில் பதவிக்கு வந்தது.

இந்தக் கூட்டணி பதவிக்கு வந்த பின்னர் இதன் செல்வாக்கைப் பரீட்சிக்கும் முதலாவது சந்தர்ப்பமாக நான்கு சட்டப் பேரவைத் தேர்தல்களும் இடைத்தேர்தல்களும் கருதப்பட்டன.

அத்துடன்காங்கிரஸில் சோனியா காந்தியின் தலைமைக்கு இது ஒரு விஷப் பரீட்சையாகவும் கருதப்பட்டது. ஏற்கனவே சோனியாகாந்தியின் தலைமையில் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியைச் சந்தித்தது. தற்போதைய சட்டப் பேரவைத் தேர்தல்களிலும் தோல்விகளைச் சந்தித்திருப்பது காங்கிரஸில் சோனியா காந்தியின் தலைமைக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம்.

அதே சமயம் தமிழ்நாடு சட்டப் பேரவை இடைத் தேர்தல் முடிவுகள் அ.தி.மு.க. செயலாளர் ஜெயலலிதாவுக்கு மட்டும் அல்ல, சமீபத்தில் அதனுடன் உறவு வைத்துக் கொண்ட தமிழ்மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனாருக்கும் பெரும் ஏமாற்றம் ஆகும்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக அ.தி.மு.கவை ஊழல் கட்சி என்று கூறிவந்தார் மூப்பனார். கடந்த காலங்களில் வெறும் வாய்ப்பேச்சாகவே இருந்துவந்தது இந்தக் குற்றச்சாட்டு. ஆனால் அ.தி.மு.கவுக்கு மூப்பனார் ஆதரவு வழங்க ஒப்புக்கொண்ட பின்னர் நீதிமன்றத் தீர்ப்பு மூலம் இது நிரூபிக்கப்பட்டிருப்பது த.மா.காவுக்கு பெரிய தாக்கம் என்பதில் சந்தேகம் இல்லை.

### 3 தொகுதிகளிலும் அ.தி.மு.க. தோல்வி

தமிழ்நாட்டில் கடந்த 17 ஆம் திகதி மூன்று சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்கள் நடைபெற்றிருந்தன.

நெல்லிக்குப்பம், அறந்தாங்கி, திருச்சி - 2 ஆகிய இந்த மூன்று தொகுதிகளிலுமே அ.தி.மு.க. தோற்றுவிட்டது.

நெல்லிக்குப்பம், திருச்சி - 2 தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர். அறந்தாங்கியில் தி.மு.க. கூட்டணியைச் சேர்ந்த எம்.ஜி.ஆர்., அ.தி.மு.க. வெற்றிபெற்றுள்ளது. இதன் தலைவர் திருநாவுக்கரசு கடந்த மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றதை அடுத்து இந்த வெற்றிடம் ஏற்பட்டது.

திருச்சி - 2 தொகுதி வாக்களிப்பில் தில்லுமுல்லுகள் இடம்பெற்றதாகத் தேர்தல் ஆணையகத்துக்கு அ.தி.மு.க. முறைப்பாடு செய்ததை அடுத்து அங்கு வாக்குகளை எண்ணுவது நிறுத்திவைக்கப்பட்டது. இதனாலேயே திருச்சி - 2 தேர்தல் முடிவுகள் வெளியாவதற்குத் தாமதமாகியது.

### தோல்விக்குக் காரணம் என்ன?

இந்த இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க. தோல்வியடைந்ததற்கு கொடைக்கானல் "பிளஸண்ட ஸ்டே" ஹோட்டல் ஊழல் வழங்கும் ஒரு காரணம் ஆகும். இந்த வழக்கில் ஜெயலலிதாவுக்கு ஒரு வருட கடுழியச் சிறை வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர் அ.தி.மு.கவினர் நடத்திய வன்முறையால் மூன்று மாணவிகள் பஸ் ஒன்றுடன் சேர்த்து உயிருடன் கொளுத்தப்பட்டனர்.

ஜெயலலிதா நேரடியாகச் சம்பந்தப்பட்ட 5 வழக்குகளில் டான்சி நில பேர வழக்கில் இருந்தும் நிலக்



கருணாநிதி

கரி ஊழல் வழக்கில் இருந்தும் அவர் விடுவிக்கப்பட்டார். கொடைக்கானல் "பிளஸண்ட் ஸ்டே" வழக்கில் ஜெயலலிதா மேன் முறையீடு செய்துள்ளதை அடுத்துத் தீர்ப்பை அமுல் செய்வது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா எதிர்நோக்கும் மற்றும் இரு வழக்குகளில் ஒன்று கலர் ரீவி ஊழல் வழக்கு. மற்றது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த வழக்கு.

இந்த வழக்குகள் ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலத்தைப் பாதிக்கப்போகின்றன என்பதைத் தற்போதைய இடைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஜெயலலிதா மீதான பிளஸண்ட் ஸ்டே ஊழல் வழக்குத் தீர்ப்பையும் மாணவிகள் உயிருடன் எரிக்கப்பட்ட சம்பவத்தையும் தி.மு.க. அணியினர் நடந்து முடிந்த இடைத் தேர்தல் பிரசாரத்தின்போது தேர்தல் குண்டாகப் பயன்படுத்தினர். அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

### பிராந்தியக் கட்சிகள் ஆதிக்கம்

இம்முறை சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகளில் முக்கிய அம்சமாகக் கருதப்படுவது பிராந்தியக் கட்சிகளின் வளர்ச்சியே.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிராந்தியக் கட்சிகளில் ஒன்றான பிஜு ஜனதா தள் ஒரிஸாவிலும், இந்தியத் தேசிய லோக்தள் ஹரியானாவிலும் லாலு பிரசாதயாதவ் தலைமையிலான ராஷ்ட்ரிய ஜனதா தள் பிஹாரிலும் பலம்பெற்றிருப்பது மத்தியில் ஆட்சி அமைக்கும் அதிகாரம் தேசியக் கட்சிகளிடமிருந்து பிராந்தியக் கட்சிகளுக்கு மாறுவதை எடுத்துக்காட்டுகின்றது.

கடந்த மக்களவைத் தேர்தலில் மத்தியில் கூட்டணி அரசு என்ற வாஜ்பாயின் கோஷத்துக்கு அதிக ஆதரவு கிடைத்தது இத்தகைய அரசியல்மாற்றத்தினால்தான். பிஹார் மாநிலத்தில் எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பது குறித்து வாஜ்பாய் கருத்துத் தெரிவிக்கையில், பிராந்தியக் கட்சிகள் தமது கருத்து வேறுபாடுகளை நீக்கிக் கொண்டு ஒன்றுபடவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

### கருத்து மோதல்களே பிஹார் தோல்விக்கு காரணம்

பிஹாரில் கடந்த மக்களவைத் தேர்தலில் மொத்தம் 54 தொகுதிகளில் 41 தொகுதிகளை பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி கைப்பற்றி இருந்தது. ஆனால் தற்பொழுது நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் அதனால் தனித்து ஆட்சி அமைக்க முடியாது போனதற்குக் காரணம் கூட்டணிக் கட்சிகளுக்குள் ஏற்பட்ட கருத்து மோதல்களே ஆகும்.

மக்களவைத் தேர்தலில் சமதாக் கட்சி, ஐக்கிய ஜனதா தள், லோக் சக்தி ஆகிய மூன்று கட்சிகளும்



ஜெயலலிதா

## ஒரிஸா, ஹரியானா, பிஹார் மாநிலங்களில் காங்கிரஸ் தோல்வி

ஜனதா தள் என்ற பெயரில் ஒரே சின்னத்திலேயே போட்டியிட்டன. மக்களவைத் தேர்தலின் பின்னர் மூன்று கட்சிகளும் இணைவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இவை மூன்றும் இணைந்து விட்டால் தேசிய ஜனநாயக் கூட்டணிக்குள் இவை பலம் பெற்று ஆதிக்கம் செலுத்த முற்படலாம் என்ற அச்சமும் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களிடம் ஏற்பட்டிருந்தது.

ஆனால் இந்த இணைப்பு மக்களவைத் தேர்தலின் பின்னர் கைகூடவில்லை. தற்போதைய சட்டப் பேரவைத் தேர்தலில் பிஹாரில் தேசிய ஜனநாயகக் கூட்டணியினால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது போனதுக்கு இதுவே பிரதான காரணம் ஆகும்.

பிஹார் சட்டப் பேரவைத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றும் பட்சத்தில் முதலமைச்சர் யார் என்பதில் ஏற்பட்ட போட்டியாலேயே இந்த மூன்று கட்சிகளுமஇணைந்து



சோனியா

செயற்படுவதற்குத் தவறின. சமதாக் கட்சி மத்திய அமைச்சராக இருக்கும் தனது கட்சி உறுப்பினர் நிதிஸ் குமாரை முதலமைச்சர் பதவிக்கு நிறுத்த முயற்சித்தது. ஐக்கிய ஜனதா தள் இதனை எதிர்த்தது. ராம்விலாஸ் பஸ்வானை அது முதலமைச்சர் பதவிக்கு பிரேரித்தது. இவரும் மத்திய அமைச்சரவையில் இருந்து வருகிறார். ஐக்கிய ஜனதா தள் கட்சியைச் சேர்ந்தவர். மற்றைய கட்சியான லோக் சக்தி கட்சிக்கு பிஹாரில் பெரிதாகச் செல்வாக்கு இல்லை.



வாஜ்பாய்

முரண்பாடு காரணமாகத் தனித் தனியாகப் போட்டியிடவும் தனித் தனியாகத் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடவும் இந்தக் கட்சிகள் மூன்றும் முயற்சித்தன. தேர்தலுக்கு முன்னர் இந்த இழுபறி ஓரளவுக்குத் தீர்த்து வைக்கப்பட்ட போதிலும் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கு இந்த முரண்பாடே பிரதான காரணமாகக் கருதப்படுகிறது.

பிஹார் சட்டப் பேரவைக்கான 324 தொகுதிகளில் லாலு பிரசாத் யாதவ் தலைமையிலான ராஷ்ட்ரிய ஜனதா தள் தனித்து 124 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. பாரதீய ஜனதாக்கட்சி சமதாக் கட்சி, ஐக்கிய ஜனதா தள் ஆகியவை மொத்தம் 123 ஆசனங்களைக் கைப்பற்றி உள்ளன.

ராஷ்ட்ரிய ஜனதா தள்ளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியும் ஆட்சி அமைக்க அனுமதி கோரி உள்ளன. காங்கிரஸின் ஆதரவு ராஷ்ட்ரிய ஜனதா தள் கட்சிக்கு இருப்பதால் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு அதற்கே அதிகமாக உண்டு.

### ஒரிஸா

ஒரிஸா சட்டப் பேரவை 147 தொகுதிகளைக் கொண்டது. காங்கிரஸ் தலைமையில் கடைசியாக இருந்த சட்டப் பேரவையில் 80 காங்கிரஸ் உறுப்பினர்கள் இருந்தனர். முதலமைச்சராக ஹேமானந்தா பிஸ்வல் இருந்தார். ஆனால் தற்பொழுது நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ், 26 தொகுதிகளில் மட்டும் வென்று படுதோல்வி அடைந்துள்ளது.

பாரதீய ஜனதா - பிஜு ஜனதா தள் கூட்டணி மொத்தம் 106 தொகுதிகளில் அமோக வெற்றியீட்டி உள்ளது. பிஜுபட்நாயக்கின் மகனும் மத்திய அரசில் அமைச்சருமான நவீன்பட்நாயக் ஒரிஸா முதலமைச்சராகி உள்ளார்.

ஒரிஸாவில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததுக்கு பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன. கடந்த ஒக்ரோபர் மாதம் அங்கு ஏற்பட்ட புயல் பேரழிவுகளின் போது பிஸ்வால் தலைமையிலான காங்கிரஸ் அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதுமான நிவாரண உதவிகளைச் செய்து கொடுக்கத் தவறியதாக குற்றச்சாட்டுக்கள் இருந்து வருகின்றன. மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியே காங்கிரஸ் படுதோல்வி அடையக்காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

புயல் மற்றும் வெள்ளம் காரணமாக கடந்த ஒக்ரோபர் மாதம் ஒரிஸாவில் 10 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். புயலினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் பொறுப்பு பதவி ஏற்றுள்ள புதிய அரசு மீது சுமத்தப்பட்டுள்ளது.

### ஹரியானா

ஹரியானாவில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியைத் தக்க வைத்துள்ளது. ஹரியான சட்டப் பேரவைக்கான மொத்தம் 90 தொகுதிகளில் இந்திய தேசிய லோக் தள் - பாரதீய ஜனதாக் கூட்டணி மொத்தம் 53 தொகுதிகளைக் கைப்பற்றி உள்ளது. இதில் இந்திய தேசிய லோக் தள் கட்சிக்கு தனித்து 47 ஆசனங்கள் உண்டு.

பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட போதிலும் அந்தக் கட்சியின் 6 அங்கத்தவர்களின் ஆதரவு இன்றியே ஓம் பிரகாத் சௌத்தாலா ஆட்சி அமைத்திருப்பது பாரதீய ஜனதாக் கட்சிக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்க முடியாது. ஹரியானா சட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் 21 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

மொத்தத்தில் இந்த தேர்தல் முடிவுகள் தேசிய மட்டத்தில் சோனியாவுக்கும் மாநில மட்டத்தில் ஜெயலலிதாவுக்கும் பெரும் ஏமாற்றம் என்றே கூறவேண்டும். *

## 'விடிவுகள் கணத்தில் தோன்றிடக் காண்போம்'

பட்டங்கள் வானில் பறக்க விட்டோம்
பார்த்து மகிழ்ந்து பரவசம் ஆனோம்
வட்டங்கள் கீறிக் கெந்திப் பிடித்தோம்
வளர்ந்து இளமைப் பராயம் அடைந்தோம்
பட்டங்கள் பெற்றிடப் பலகலை சென்றோம்
பலதும் படித்துப் பண்டிதம் பெற்றோம்
சட்டம் பொறியியல் கலையுடன் மருத்துவம்
சமூகம் அரசியல் அறிவால் உயர்ந்தோம்!

திட்டங்கள் வரைந்து செயற்திறன் கண்டோம்
தேடித் தேடித் தேட்டங்கள் சேர்த்தோம்
எட்டுத் திக்குகள் சுற்றியும் வந்தோம்
எங்கும் எம்புகழ் பரப்பியே நின்றோம்
கட்டடம் மாடிகள் எங்கும் அமைத்தோம்
காற்றைக் குளிராய் அறைக்குள்
எடுத்தோம்
கட்டில் படுக்கையில் சுகங்கள் கண்டோம்
கூடிக் குடித்துக் குலாவித் திரிந்தோம்!

ஒட்டு மொத்தமாய் எல்லாம் இருந்தும்
ஒற்றுமை எம்மில் காண மறந்தோம்
கட்டிய எண்ணக் கோட்டைகள் சரிந்தும்
கொடுமைகள் சூழச் சிக்கலில் கலந்தும்
விட்டுக் கொடுக்கும் பாங்குகள் இழந்தோம்
விரைந்து காக்கும் கடமைகள் மறந்தோம்
விட்டே இவைகளை ஒதுக்கிடில் நாமும்
விடிவுகள் கணத்தில் தோன்றிடக்
காண்போம்!

- அரியாலையூர் சி. சிவதாசன் -

## தாய்க்குல............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனித்தனி குடும்பம் என்ற சிறையுள் அடைக்கப்பட்டாள். ஆண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபடும்வேளை பெண்கள் தனி உற்பத்தியில், குடும்பச் சிறையில் ஈடுபட நேர்ந்தது.

குடும்பம் என்ற அமைப்பு ஆணினத்தின் நலனுக்காக ஆண்களால் ஏற்படுத்தப்பட்டதேயல்லாது பெண்ணினத்தின் நலனுக்காக அல்ல. இவ்வமைப்பின் மூலமே பெண்ணினத்தை அடிமையாக, சிறைவைக்க முடிந்ததை இன்று பல கோணங்களில் காண்கிறோம்.

இன்றைய அரசு ஆளும் வர்க்கச் சுரண்டலுக்கு குடும்பம் என்ற கருத்தியல் சார்ந்த அரசுயந்திரத்தைப் பயன்படுத்துவது பற்றி அல்தூசர் போன்ற மார்க்சிய அறிஞர்கள் விரிவாக விளக்கியுள்ளனர். மேல்மட்ட அமைப்புச் சார்ந்த கருத்தியல்களில் குடும்பமும் முதன்மை பெறுகிறது. மேலும் மதம், இன்றைய கல்வி முறை சார்ந்த கருத்தியல்களும் குடும்ப அமைப்பை வலியுறுத்துகின்றன.

குடும்ப அமைப்பை உடைப்பதன் மூலமே பெண் விடுதலையைக் காணமுடியும் என்பது சமூக அமைப்பை உடைப்பது என்பதல்ல. குடும்ப அமைப்பு ஏற்படாத காலகட்டத்திலும் சமூக அமைப்பு இருக்கவே செய்தது. குடும்ப அமைப்பு என்பது சமூக அமைப்பின் சிறு கூறு. அது பெண்களுக்கு இன்று சிறையாக உள்ளது என்பதைப் பல கோணங்களில் காண்கிறோம்.

குடும்பத் தலைவனான ஆண்மகன் தன் தனிச் சொத்துக்களுடன் குடும்பத்தவர்களையும் தன் சொத்தாகக் கருதுகிறான். இந்த யதார்த்த நிலையை அறிந்து தனி நபர்களை ஆட்சி செய்வதிலும் பார்க்க குடும்பங்களின் மூலம் அடக்கி ஆள்வது சுலபம் என்பதை அரசும் அறிந்துள்ளது.

சீனப் புரட்சிக் காலத்தில் சீனாவை ஆண்டு கொண்டிருந்த சியாங்கேஷேக் என்பவன் 1932 இல் 'பபோசியா' என்ற குடும்ப அமைப்பு வழி மூலம் பாசிச ஆட்சியை நிறுவி எதிர்ப் புரட்சியை நடத்த சிறந்த வழி ஒன்றைக் கடைப்பிடித்தான். ஒரு குடும்பத்தின் கீழ் பத்துக் குடும்பத்தின் பொறுப்பைத் திணித்தான்.

பின்னர் இப்பத்துக் குடும்பமும் ஒவ்வொரு பத்துப் பத்துக் குடும்பத்திற்கு பொறுப்பாகப் பணித்தான். இம்முறை மூலம் சமுதாயம் முழுவதையுமே கட்டி வைக்கும் வழியை அமைத்தான். இக்குடும்பப் பொறுப்பு முறை அவனது ஆட்சியை, அடக்குமுறையை எளிதாக்கியது. தலைவர் மாவோ புரட்சியின் மூலமே இத்தொடர்ச்சியான குடும்ப அமைப்பு ...திக்கத்தை உடைத்தெறிந்தார்.

...னா, ரஷ்யா போன்ற நாடுகளில் பெண்கள் ஆண்கள் போல எல்லாத்துறைகளிலும் உழைக்கின்றனர். லாரி, டாக்சி, டிராக்டர், விமானம் ஓட்டுதல் முதல் கனரக இயந்திர உற்பத்தித் தொழிற்சாலைகளிலும் ஆண்களோடு சமனாக உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். ஆனால் முதலாளித்துவ நாடுகளில் பெண்கள் நள்ளிரவில் தனியே செல்ல முடியாத நிலை இன்றும் உள்ளது.

ஆண்கள் போலவே நள்ளிரவில் வேலை முடித்து வரும் பெண்களையும் இரவில் டாக்சி ஓட்டும் மாதர்களையும் சோஷலிச நாடுகளில் சர்வசாதாரணமாகக் காணலாம். விபசாரம் என்ற மிகப்பழைய தொழில் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது. முதலாளித்துவ நாடுகளில் லைசென்ஸ் பெற்ற தொழிலாக இது இன்றும் நடைபெறுகிறது. ஒருபுறம் குடும்பப் பெண்கள், மறுபுறம் விபசார விடுதிகள். முதலாளித்துவத்தின் இம்முரண்பாடு பெண்ணடிமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. தாய்க்குலத்தின் இழிநிலைகள் எங்கள் நாடுகளிலும் மலிந்துள்ளன.

பொருளாதார வாய்ப்புப் பெற்று தம் வேலைகளைக் கூலி உழைப்பாளரைக் கொண்டு செய்விக்கும் பெண்களோடு உயர்பதவி வாய்ப்புப் பெற்று பெண்ணடிமை நிலை பற்றிக் கவலைப்படாத பெண்களும் உள்ளனர். இவர்கள் பெண்ணினத்தில் 10 சதவீதத்திற்குக் குறைவானவர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

முன்னைய பரம்பரை தம்அடிமை நிலையை உணராத போதும் புதிய தலைமுறை சார்ந்த இளம் பெண்கள் இக்கருத்துக்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து விடுதலை பெற்று புதிய சமூகத்தைக் கட்டிஎழுப்ப முன்வரவேண்டும்.

## வேண்டும்

வாழ்வை இரசிக்க
வயது வேண்டும்!
தாழ்வைப் பொறுக்கும்
தன்மையும் வேண்டும்!
ஏழை மனதிலும்
ஏற்றம் வேண்டும்!
வாழை இனம்போல்
வளம்பெற வேண்டும்!
பண்பிலே தினமும்
பணிந்திட வேண்டும்!
கண்களில் அறிவியல்
காட்சிகள் வேண்டும்!
மனதிலே தூய்மையாய்
மணம் வீச வேண்டும்!
எனதுயிர் உள்ளிலே
எழுச்சிகள் வேண்டும்!
தாய் தந்தை மகிழ்வில்
திளைத்திட வேண்டும்!
சேய்போல் குதித்து
செழித்திட வேண்டும்!
நட்புடன் சேர்ந்து
நடந்திட வேண்டும்!
கட்புலம் எங்கும்
கவிதர வேண்டும்!
சாதலை வெல்லும்
சாத்வீகம் வேண்டும்!
காதலும் அறவே
கற்றிடல் வேண்டும்!
சாதிகள் மறக்கும்
சரித்திரம் வேண்டும்!
போதிய அன்பினைப்
பொழிந்திட வேண்டும்!
இனங்களைப் புரிந்தே
இணைந்திட வேண்டும்!
சினங்களை அகற்றிச்
சிரித்திட வேண்டும்!
போரினை இன்றே
போக்கிட வேண்டும்!
பாரினில் அமைதியைப்
பேணிடல் வேண்டும்!
பூக்களின் மீதினில்
புதைந்திட வேண்டும்!
பாக்களில் எங்கனும்
பாசமழை வேண்டும்!
சீரிய செந்நெறி
சிறந்திட வேண்டும்!
பாரிய மனமதாய்
பரந்திட வேண்டும்!
ஒன்றே குலமென
ஓதுதல் வேண்டும்!
நன்றே யாவுமென
நவின்றிடல் வேண்டும்!

- புதுமை -

## அகக்............

(XI ஆம் பக்கத் தொடர்ச்சி)
விஷய ஞானம் உண்டு.

இரண்டாவது பாடவேளையும் முடிகிற தருணம். இதையே கருவாக்கிப் பாடசாலைச் சஞ்சிகைக்கு ஒரு கதையெழுதினாலென்ன? சிந்தனை வலுப்பெற முதல் இரு பாடவேளைகளையும் படிப்பதற்குரிய மனநிலையையும் தொலைத்துவிட்டிருக்கிற முப்பத்தெட்டு மாணவர்களுக்குமான கவலை என் சொந்தக் கவலையாக மனமேறிற்று. எழுதப்படுகையில் சில கதைகள் புன்னகைகளைப் பரிசாய்த்தரும். சில முகச் சுழிப்புகளை விளைவிக்கும். நான் எழுதப்போவது பின்ரகம். ஆனாலும் எப்போதும் உண்மைகள் கசப்பான மாத்திரைகளாகும். மாத்திரைகள் சமூகத்துக்குத் தேவை. விருப்பமின்றியேனும் அவை விழுங்கப்படின் பலனளிக்கும். ஆக அநீதிகளை எடுத்துக் காட்டல் அதிகம் நன்மை தரும். இதயசாகரன் சேரும் அநீதியே.

குனிந்து படுத்திருக்கக் காலடியில்... சிறு வெண்கட்டி ஷூ அணிந்த கால் நகர்த்தி அதைத் துவம்சித்தேன். சிறு சிறு துணிக்கைகளாயும் பொடிப் பொடியாகவும் சிதறிற்று அது. ஆசிரியத்துவக் குறியீடு அது. அரிதாகச் சிலவேளைகளில் நசுக்கி அழிக்கப்படவேண்டியதாகவும் அது. ஆசிரியர்களுள் பல தெய்வங்கள் உண்டு. சிலசாத்தான்களும் உண்டு. சாத்தான்களின் மீது பாவங்கள் சுமையாய் ஏறும். அவை அழுத்தும். தண்டனைகள் வழங்கப்படும். நீதிக்கான ஏதோ ஒரு சக்தியால் நிச்சயமாக...

மனம் கனலத் தொடங்குகிறது. மெதுவாய் அநீதி எரிக்கும் நெருப்பு விகசிக்கிறது. அது சுவாலை விசிறும். சுவலைகள் பரவும். சந்தர்ப்பங்கள் காற்றாகும். சுவாலைகள் மிகுந்து குற்றமுடையோர் மனந்தீய்க்கும். இது அகக்கனலாகும். எனக்குள் எண்ணப்பிரவாகம்... பேனா மூடி திறக்கிறேன் - கதைக்குத் தலைப்பிடுவதற்காக...

***சிந்தனைக்கரு:- கடமைகளில் ஞான்றும் அறிந்தும் அறியாதும் விலகுகின்ற அல்லது வழுவுகின்ற ஆசிரியர்கள் குறித்து ஒரு மாணவனின் எண்ண ஓட்டம்.***

## 'சிறுவர்சுடர்' விடைகள்

XVI ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'சிறுவர் சுடர்' பகுதிக்கான விடைகள் வருமாறு:-

### அடுத்து வருபவை எவை?
(1) L, E (2) V, N (3) 32, 64
(4) B, T (5) 14, 91

### கடிகாரம் எது?
D

### பொருத்தமற்றது எது?
G


### வயது என்ன?
28 வயது

### ஒழுங்குபடுத்துங்கள்
1 - C; 2 - D; 3 - E; 4 - A; 5 - B

### நகரும் பந்துகள்
7 ஆவது நகர்த்தலின் பின், மூலை C யில் சந்திக்கும்.

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.144



### சொற்சிலம்பம் இல. 144

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

..............................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவுத் திகதி:- 10 - 03 - 2000

### இடமிருந்து வலம்

1. திங்கள் தோறும். 5. திறப்பு. 6. அறிவு. 7. தாண்ட. 8.கதையை பிரசங்கம் செய்பவர். 11. பார். 12. முற்றும் துறந்தவர். 14. பிள்ளைப் பேறின்மை. 15. பிறப்புக்கு முந்திய காலம். 17. IX ஆம் பக்கத்தில் இவரின் கதையுள்ளது. 19. செல்வம். 20. சேலை. 21. தானாடாவிட்டாலும் இது ஆடும்.

### மேலிருந்து கீழ்

1. இறந்தோருக்கு மாதம் தோறும் செய்யும் பிதிர்க்கடன். 2.பாட்டா. 3.திங்கள் முதல் நாள். 4. இளைய சகோதரன். 5.அந்தி சாயும்பொழுது. 7. உறவைப் பலப்படுத்துவது இந்த வலைதான். 9. மன்மதன் மனங் கவர்ந்தவள். 10.தோண்டு. 12. தீது. 13. எதிர்பாராமல் நடப்பது. 14. பூ. 15. வெட்ட உதவும் கருவி. 16. தோடும் இந்த வகையே. 18 ஒட்ட உதவும்.

### சொற்சிலம்பம் 142 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. சமூகம். 4. தாமதி. 7. முட்டு. 8. காய்தல். 9. கடுக்கன். 11.மலை. 12. காலி. 13. வித. 14. நாய். 15. விருப்பு. 17.அவி. 18.தழும்பு. 19.மோதகம். 22. கன்னி. 23. நாய்பன்.

### மேலிருந்து கீழ்

1. சமூகம். 2. மூட்டு. 3. கடுக்காய். 4. தாய். 5. மதமதப்பு. 6.தில்லை. 8. கான். 10. கலி. 13. விரும்பும். 14. நாவிதன். 15.விழு. 17.அமோக. 18.தம். 20. கனி. 21. பேன்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

| | |
|---|---|
| முதலாம் பரிசு:- | த. சுதர்சன், அராலி மத்தி, வட்டுக்கோட்டை. |
| இரண்டாம் பரிசு:- | செல்வன்.த.சி.சயந்தன், தரம் 10A, யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை. |
| மூன்றாம் பரிசு:- | திருமதி சி. சோதிமலர் மூத்தவினாயகர் கோவிலடி, கரணவாய்தெற்கு, கரவெட்டி. |

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |


புதிர்ப்போட்டி இலக்கம் 143 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

## நடப்போம்!

அன்பு வழியில் நடந்திடுவோம்
ஆணவத்தை அழித்திடுவோம்
இருப்பதை வைத்து இன்புறுவோம்
ஈயா குணத்தைக் களைந்திடுவோம்
உண்மை செயல்பட வைத்திடுவோம்
ஊனம் கண்டு உதவிடுவோம்
எவர்க்கும் உழைக்கும் வழிதருவோம்
ஏய்ப்போர் கூட்டத்தை எதிர்த்திடுவோம்
ஐயம் இன்றிக் கற்றிடுவோம்
ஒன்றுபட்டே வாழ்ந்திடுவோம்
ஓய்வே இன்றி உழைத்திடுவோம்
ஔவை வழியில் நடத்திடுவோம்
அஃதே நல்வழி முழங்கிடுவோம்!

*சாம்ராஜ்*

## நகரும் பந்துகள்




ஏழு மூலைகளைக் கொண்ட மேசை ஒன்றிலே C எனும் மூலையில் ஒரு கறுப்பு, ஒரு வெள்ளைப் பந்துகள் உள்ளன.

கறுப்புப் பந்தை கடிகாரத்திசையில் (வலது பக்கமாக) அடுத்த ஒரு மூலைக்கு நகர்த்தினால் வெள்ளைப்பந்து எதிர்த்திசையில் (இடதுபக்கமாக) அடுத்த இரு மூலைகளுக்கு நகர்த்தப்பட வேண்டும். (அதாவது கறுப்புப்பந்து மூலை D யிற்கு நகர்த்தப்படின் வெள்ளைப்பந்து மூலை A யிற்கு நகர்த்தப்பட வேண்டும்.)

இவ்வாறு தொடர்ந்து நகர்த்தப்படின் எத்தனையாவது நகர்த்தலின் பின், எந்த மூலையில் இரு பந்துகளும் மீண்டும் ஒன்றையொன்று ஒரே மூலையில் சந்திக்கும்?

## மாமியாரின் மன இயல்பு

முல்லா ஒரு நாள் வீட்டுச்சாமான்கள் வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றிருந்தார். அவர் கடையில் சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்த போது அவருடைய நண்பர்கள் ஓடி வந்து "முல்லா அவர்களே! உங்கள் மாமியார் கால் தவறி ஆற்றில் விழுந்து விட்டார். ஆற்று வெள்ளம் அவரை அடித்துச் சென்று கொண்டிருக்கிறது!" என்று பரபரப்போடு கூறினார்கள்.

முல்லா சாமான்கள் வாங்குவதை விட்டு விட்டு ஆற்றைநோக்கி ஓடத்தொடங்கினார். நண்பர்களும் அவரைப் பின் தொடர்ந்து ஓடினார்கள்.

ஆற்றை அடைந்ததும் எந்த இடத்தில் தமது மாமியார் ஆற்றில் விழுந்தார் என்று நண்பர்களிடம் கேட்டுத்தெரிந்து கொண்டு அந்த இடத்தில் ஆற்றுநீரில் குதித்தார் முல்லா.

ஆற்றோட்டத்தின் திசையில் நீந்திச் செல்லாமல் எதிர்ப்பக்கம் நீந்தத் தொடங்கினார்.

அதனைப் பார்த்த அவரின் நண்பர்கள் "முல்லா! ஆற்றுநீர் ஓடும் பக்கம்தானே உங்கள் மாமியார் அடித்துச்செல்லப்பட்டிருக்கக்கூடும். ஆனால் நீங்கள் ஆற்றோட்டத்திற்கு எதிர்த்திசையில் நீந்திச்செல்கிறீர்களே" என்று கேட்டார்கள்.

அதற்கு முல்லா, "நண்பர்களே! எனது மாமியாரின் குணம் உங்களுக்குத் தெரியாது. மற்றவர்கள் சொல்வதற்கும் செய்வதற்கும் நேர் எதிர்மறையாகச் செயல்படுவதுதான் என் மாமியாரின் இயல்பு. ஆகவே அவர் ஆற்றின் நீரோட்டத்திற்கு எதிர்த்திசையில்தான் சென்றிருக்கக்கூடும்" என்று பதிலளித்தார்.

முல்லாவின் பேச்சைக்கேட்ட நண்பர்களுக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

சிறுவர் சுடரில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் XV ஆம் பக்கத்தில் உள்ளன.




தொகுப்பு: நம்பி

## பனி மனிதன் இருப்பது உண்மையா?

**பகுதி 2**

பறக்கும் தட்டுக்களைப் பற்றி இடைக்கிடையே செய்திகள் வருகின்றன இல்லையா? அதே போல 'யெதி' யைப் பற்றியும் அவ்வப்போது பரபரப்பான செய்திகள் வருகின்றன. மக்கள் போட்டி போட்டுக் கொண்டு இவற்றைப் படிக்கிறார்கள். இதனால் பத்திரிகைகளுக்கு நல்ல வீற்பனை.

பனிமனிதனான 'யெதி'யைப் பார்த்ததாகக் கூறப்படும் தகவல்களிலிருந்து இதனுடைய உருவம் 3லிருந்து 5 மீற்றர் வரை உயரம் என்றும், கொரில்லாவைப் போல நீண்டு அடர்ந்த முடிகளால் போர்த்தப்பட்ட உடல் கொண்டது என்றும், முகம் மட்டும் வெளுத்துக் காணப்படுகிறது என்றும் தெரியவருகிறது.



கிரேன்களை வைத்து எடுத்துச் செல்லும் பாறைகளையும் கனரக வாகனங்களையும் பனிமனிதன் மிக எளிதாகத் தூக்கி - நகர்த்தி - புரட்டிப் போடுவதைக் கொண்டு இவனுக்கு இராட்சத பலம் இருப்பது தெரியவருகிறது. மனிதர்கள் இவனைப் பற்றிப் பீதி கொள்வது இதை எண்ணித்தான்.

பனி மனிதனின் உணவு என்னவாக இருக்கும்? இவன் ஒரு தாவர உண்ணி என்று இமயமலை மக்கள் தரும் தகவல்கள் சொல்கின்றன. இவன் மாமிச உண்ணி என்று சைபீரியா, இங்கிலாந்து நாட்டத் தகவல்கள் சொல்லுகின்றன. 'யெதி'யின் கால்களில் கட்டை விரலும் அதற்கடுத்த விரலும் மிகப் பெரியவை என்கின்றன ரஷ்யத் தகவல்கள்.

இப்படிப்பட்ட ஒரு ராட்சத மனிதனை யாராவது நேருக்கு நேர் பார்த்திருக்கிறார்களா என்று கேட்டால் 'இல்லை' என்ற பதில்தான் வருகிறது. அவன் வந்து சென்ற அடையாளங்கள் தெரிகின்றனவே தவிர, 'யெதி' யை நேரில் சந்தித்தவர் எவரும் இல்லை. அவ்வாறு சந்தித்ததாகக் கூறிய சிலருடைய கூற்றுக்கள் பொய் என்று தெரியவந்துள்ளது.

இமயமலைக்கு அருகே 'ரிஷ்முக்' என்ற ஒருகுக் கிராமம். அங்கே வனத்துறைப் பணியாளர் ஒருவர் 'யெதி'யை நேரில் பார்த்ததாகத் தகவல் கிடைக்கவே ஆராய்ச்சியாளர்கள் அங்கு விரைந்தனர். தான் மறைந்திருந்து பார்த்த போது 'யெதி' ஒரு முழுக் கோவேறு கழுதையைத் தின்று கொண்டிருந்ததாகவும், அப்பிள் பழங்களை முழுதுமுழுதாக வாயில் போட்டுக் கடித்ததாகவும், தான் தன்னை அறியாது தும்மியவுடன் 'யெதி' பயந்து ஓடி விட்டதாகவும் அந்தப் பணியாளர் கூறியதை ஆராய்ச்சியாளர்கள் உண்மை என்று ஏற்கவில்லை.

அப்படியானால் 'யெதி'யைப் பற்றிய ஆராய்ச்சியாளர்களின் முடிவுதான் என்ன?

*(இன்னும் வரும்)*

* * * * * * * * * * * * * * * * * * * * * *

## ஒழுங்குபடுத்துங்கள்




*இங்கே ஐந்து தொகுதிகளாகச் சில விலங்குகளும் அவற்றின் கால்களும் தரப்பட்டுள்ளன. ஆனால் அவை சோடி சேர்க்கப்பட்டுள்ள விதம் தவறானது. எந்த விலங்குக்கு எந்தக் கால் பொருத்தமானது என்று கண்டு பிடித்து ஒழுங்குபடுத்துங்கள் பார்க்கலாம்!*

## புத்தகம்


நல்ல அழகுப் புத்தகம்
நான் விரும்பும் புத்தகம்
நல்ல நல்ல கதைகளும்
நன்கு நிறைந்த புத்தகம்

சிறுவர் விரும்பும் புத்தகம்
சிறந்த ஆசான் புத்தகம்
விரும்பி மகிழ்ந்து பாடவே
நல்ல நண்பன் புத்தகம்

வாழ்வை உயர்த்தும் புத்தகம்
வாங்க ஏற்ற புத்தகம்
வாழ்வில் தவறு தவிர்க்கவே
வழியைக் காட்டும் புத்தகம்

*-வி.பிரபா*

## கடிகாரம் எது?




நேரம் 2.25ஐக் காட்டிய கடிகாரம் ஒன்று தலைகிழான நிலையில், நிலைக்கண்ணாடி ஒன்றின் முன்பாகப் பிடிக்கப்பட்டது. நிலைக் கண்ணாடியில் தெரியும் கடிகாரத்தின் சரியான விம்பம் மேலுள்ளவற்றில் எது என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

## வயது என்ன?

நடிகை ராணியைப்பேட்டி காண வந்திருந்த பத்திரிகை நிருபர் நடிகையின் வயதைக்கேட்டபோது ராணி, "என்னை விட எட்டு வயது அதிகமான ~ எனக்குப் போட்டியான ~ நடிகை தேவியின் வயதைக் கண்டு பிடிக்க ஒரு புதீர் போடுகிறேன். முடிந்தால் அதில் இருந்து எனது வயதைக் கண்டு கொள்ளுங்கள்" என்றார். புதிரையும் போட்டார். அது இதுதான்:~

"பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு தேவியின் வயது எவ்வளவோ அதைப்போல இரண்டு மடங்கு வயது இன்றிலிருந்து பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு இருக்கும்"

அப்படியானால் நடிகை ராணியின் வயது என்ன?

## பொருத்தமற்றது எது?




*மேலேயுள்ள ஒன்பது தேனீர்க் கோப்பைகளில் ஒரேயொரு தேனீர்க் கோப்பை மட்டும் இத்தொகுதிக்குப் பொருத்தமற்றது. அது எந்தத் தேனீர்க் கோப்பை என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!*

## அடுத்து வருபவை எவை?

1) A,O,B,N,C,M,D,____,____
2) F,P,H,R,J,T,L,____,____
3) 1,2,4,8,16,____,____
4) X,E,W,D,V,C,U,____,____
5) 37,68,73,86,41,19,____,____

மேலே சில ஆங்கில எழுத்துக்களும், சில இலக்கங்களும் ஐந்து தொகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலுள்ள எழுத்துக்களும், இலக்கங்களும் ஒவ்வொரு வித ஒழுங்கில் உள்ளன.

அவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விதத்தை நன்கு அவதானித்து ஒவ்வொரு தொகுதியிலும் அடுத்து வர வேண்டிய எழுத்துக்கள் அல்லது இலக்கங்களை அவற்றுக்குரிய கீறிட்ட இடங்களில் எழுதுங்கள் பார்க்கலாம்!